# எண் ஜோதிடம்

## ( NUMEROLOGY )

"எண் ஜோதிட மன்னன்"

வி. ஏ. சிவராசா, B. A., B. Phil

வரதர் வெளியீடு

# எண் ஜோதிடம்

# NUMEROLOGY

எண் சோதிட மன்னன்

**V. A. சிவராசா,** B. A., B. Phil.

உங்கள் பெயருக்குரிய எண் எது?

| | | | |
|---|---|---|---|
| A, I, J, Q, Y | – 1 | E, H, N, X | – 5 |
| B, K, R | – 2 | U, V, W | – 6 |
| C, G, L, S | – 3 | O, Z | – 7 |
| D, M, T | – 4 | F, P | – 8 |

உதாரணமாக 'சி. கணபதி' என்ற பெயருக்கு, பின்வரும் விதமாக 4 என்ற எண் வரும்,

S. K A N A P A T H Y

3. 2 1 5 1 8 1 4 5 1 = 31 (3+1) = 4

இவ்விதமே உங்கள் பெயருக்குரிய எண்ணையும் குறித்து எடுத்துக் கொள்ளுங்கள்.

இனி உங்கள் எண்ணுக்குரிய பலாபலன்களை இந் நூலினுள்ளே விபரமாகப் படியுங்கள்.

வரதர் வெளியீடு

நூல் : எண் ஜோதிடம்

முதற் பதிப்பு : ஜூன் 1982

ஆக்கம் : V. A. சிவராசா, B. A., B. Phil.

வெளியீடு : வரதர் வெளியீடு, யாழ்ப்பாணம்.

அச்சுப்பதிவு : ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.

விற்பனை : ஆனந்தா புத்தகசாலை
226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

விலை ரூபா : 18–50

உங்கள் பிரச்சனைகள் எதுவென்றாலும் ஜாதக ஜோதிடம், எண் ஜோதிடம், கைரேகை இவற்றைக்கொண்டு பலாபலன் அறிந்து கொள்ளலாம். வாக்கிய பஞ்சாங்கத்தினை அடிப்படையாகக் கொண்டு ஜாதகமும் எழுதித் தரப்படும்.

தொடர்பு முகவரி :
V. A. சிவராசா,
சோதிடர்,
வேலணை.

# எண் ஜோதிடம்

## முதலாம் எண்காரர்

### பிறந்த திகதிகள் 1, 10, 19, 28

### பொதுவான குணங்கள்

**வா**ழ்க்கையில் பிரகாசமுள்ளவர்களாகத் திகழும் இவர்கள் நேர்மை மிக்கவர்கள். கம்பீரமாகவே வாழப் பிரியப்படுவார்கள். சிறப்பான நடை உடை பாவனைகளையே விரும்புவர். வாழ்க்கையில் எல்லா சுகங்களையும் திருப்தியுடன் அனுபவிப்பார்கள். சௌகரியத்திற்காகப் பணத்தைச் சிறிதும் தயங்காமல் செலவளிப்பார்கள். நுண்ணிய அறிவுடைய இவர்கள் எக்காரியத்தில் ஈடுபட்டாலும் தீவிரமாக வேலை செய்வார்கள். ஆகையால் இவர்களது முயற்சிகள் தடையின்றி வெற்றிபெறும். நிதானித்தே எக்காரியத்திலும் இறங்குவார்கள். எக்காரியத்திலும் ஈடுபட்ட பின்னர் பின்வாங்குவது இவர்களிடம் கிடையாது. எதிர்ப்புக்களை கண்டவிடத்தும் அஞ்சமாட்டார்கள். துணிவுடன் முன்னேறி வெற்றியடைவர். உத்தியோக வாழ்க்கையில் நாணயமும் கண்டிப்பும் இவர்களிடம் மிகுந்து காணப்படும். கபடம், வஞ்சகம், இரகசியம், முதலியவை இவர்களிடம் கிடையாது. மனதில் உள்ளதை ஒளிக்காமல் சொல்லிவிட்டுப் பல விரோதிகளை சம்பாதித்துக் கொள்வார்கள். இவர்களுடைய சினேகம், விரோதம் எல்லாம் பகிரங்கமாகவே இருக்கும். இவர்கள் தாமாகவே நண்பர்களைத் தேடிக்கொண்டு போகமாட்டார்கள். இவர்களது குணங்களும், உதவி புரியும் தன்மையும் இவர்களுக்கு நண்பர்களை உண்டாக்கி வைக்கும்.

இவர்களுக்கு சுதந்திர உணர்ச்சி அதிகமாதலால் சுலபமாக எவருக்கும் கீழ்ப்படிய மாட்டார்கள். சுய கௌரவம் அதிகம் பாராட்டுவார்கள். உத்தியோகத்திலும் எவ்வளவு பெரிய பதவி வகித்த போதிலும் இவருடைய மேலதிகாரிகள் சிறிது கௌரவக் குறைவாக நடத்தினாலும் இவர்கள் வேலையை ராஜினாமா செய்வர். இவர்களுக்கு முகஸ்துதி செய்யத் தெரியாது. நுட்ப அறிவுடையவர்களாதலால் பல விடயங்களையும் மிக எளிதாக அறிந்து கொண்டு விடுவார். சோதிடம், வைத்தியம், யோகம் முதலிய கலைகளைப் பற்றியும், சித்திரம், சிற்பம், சங்கீதம் முதலியவற்றைப் பற்றியும் தேர்ச்சி பெற்றவர்கள் போல் பேசுவார்கள். ஊகித்தறியும் சக்தியுடையவர்களாதலால் பழகுகிற மனிதர்களை வெகு சீக்கிரம் எடை போட்டு விடுவார்கள். இவர்களுக்குச் சிறிது பயிற்சித்தால் பிரசங்க சக்தியும், எழுத்து வல்லமையும் உண்டாகும். இவர்களில் மேன்மையானவர்கள், எல்லாம் தெரிந்த போதிலும் ஒன்றும் அறியாதவர் போன்று அடங்கி இருப்பர். பிரபலமடைய வேண்டுமென்றோ பணம் சம்பாதிக்க வேண்டுமென்றோ மாத்திரம் ஒன்றிலும் பிரவேசிக்க மாட்டார்கள். பரம்பரை வியாபாரியாக இருந்தாலும் உயர்ந்த முறையிலே பிரசித்தமாக வியாபாரம் செய்ய வேண்டுமென விரும்புவாரேயன்றி, எப்படியாவது அதிக இலாபமடைய வேண்டுமென விரும்பமாட்டார். கலைகளைத் தொழிலாகக் கொண்டால் பிரமுகர்கள் ஆதரவு ஏற்படும்வரை சிரமப்படுவார்கள். இவர்களுக்குப் பணம் தானாக வரவேண்டுமேயன்றி அதைத்தேடி அடையும் திறமை கிடையாது. ஆகையால் புகழ் உண்டாகும் வரை சலிப்பின்றி உழைப்பார்கள். பொதுவாக இவர்களில் சோம்பேறிகள் காணப்படுவதில்லை. பல பேருடன் பழகிய போதிலும் சிலரையே நண்பர்களாக ஏற்றுக்கொள்ளுவர். அப்படி ஆராய்ந்த பின்னர் பழகும் சிநேகிதர்களுக்கு மனமுவந்து நன்மை புரிவார்கள். இவர்கள் ஒருகாலும் பிறர் சொத்துக்கு ஆசைப்படமாட்டார்கள்.



கவிஞர்கள், கலைஞர்கள், வைத்தியர்கள், அரசியல்வாதிகள், வியாபாரிகள், முதலான பலவிதமான தொழில் புரிபவர்களிலும் இந்த எண்ணிக்கையுடையோர் காணப்படினும் மிகமிக அதிர்ஷ்டசாலிகளாகக் காணப்படுவது அரசியலில்தான். இவர்களை அரசாங்கத்தின் ''சுவீகாரப் புத்திரர்கள்'' என்று கூறின் ஒருகாலும் மிகையாகாது. சூரியன் இவர்களுக்கு ஆளும் அதிர்ஷ்டத்தைத் தருகிறான். அரசாங்கங்களில் பெரும் பதவிகளில் இவர்களே நிலையாக இருக்கின்றனர். நாகரீகமான எல்லாப் பொருட்களையும் வாங்கி வைத்து வீட்டை அலங்கரிப்பார்கள். எப்பொழுதும் சுத்தமான உடைகளையே அணிவர். இயற்கைக் காட்சிகளில் மனதைப் பறிகொடுக்கக் கூடியவர்களான இவர்கள் மலைப்பிரதேசங்களை வெகுவாக விரும்புவர். உலகப் பிரயாணம் செய்ய ஆவலிருக்கும். மேற்கூறிய குணங்கள் பொருந்தியிருப்பின் சூரிய ஆதிக்கம் நன்கு அமைந்திருக்கிறதென்பதை அறியவும். ஆதிக்கத்தின் பலம் குறைந்தால் கீழ்க்கண்ட சுபாவங்கள் காணப்படும். பிறர் தன்னைப் பற்றி பெருமையாக நினைக்க வேண்டுமென நினைத்து வீண் செலவு செய்வார். அடக்கம் சிறிதுமின்றி தனக்கே எல்லாம் தெரியுமென்று சொல்லித்திரிவார். செய்யாததையெல்லாம் செய்ததாகச் சொல்லுவார். வாழ்க்கையில் சிக்கலும் முயற்சிகளில் தோல்வியும் காணப்படும். எவ்வளவுதான் சூரிய ஆதிக்கம் குறைந்தாலும் இவர்களுக்குப் பிறருக்கு தீங்கு புரியும் எண்ணம் உண்டாகாது. கெட்ட பெயர் வந்துவிடுமோ என்று பயப்படுவர். தன்னம்பிக்கை குறைந்தால் பிறர் சொல்லுக்குக் கட்டுப்பட்டு வாழ்க்கை நடாத்துவார்கள். இப்படிப்பட்ட பலரை எழுதுவினைஞர் உத்தியோகங்களில் காணலாம்.

# இரண்டாம் எண்காரர்

## பிறந்த திகதிகள் 2, 11, 20, 29

### பொதுவான குணங்கள்

**ம**னதின் தீவிர குணங்களான பாவனை, கற்பனை, சந்தேகம், ஆராய்ச்சி இவைகளெல்லாம் இவர்களிடம் காணப்படும். இந்த ஆதிக்கரில் சிறந்தோர் பலர் பாவனை கூடிய சக்திகளை வளர்த்துக் கொண்டதன் மூலம் செயற்கரிய காரியங்களையும் செய்திருக்கின்றனர். கற்பனா சக்தியே இவ்வெண்ணின் கீழ் பிறந்தவர்களின் ஜீவநாடி. கண்ணெதிரில் காணும் விஷயங்களை விட கற்பனைகளே இவர்களது மனதைக் கவரும். சதா யோசனையிலும், மனோ ராஜ்யத்திலும் ஈடுபட்டிருப்பார்கள். எதிர்காலத்தைப் பற்றிய வர்ண சித்திரங்களையோ, பயங்கர சம்பவங்களையோ நினைத்தவண்ணமிருப்பர். இவர்களுக்கு புதிய புதிய யுக்திகளும், நூதனமான யோசனைகளும் தோன்றிய வண்ணமிருக்கும். இயற்கையாகவே இவர்களுக்கு திடசித்தமிராது. தெய்வ பக்தியோ குருபக்தியோ, அல்லது தன்னம்பிக்கையோ இவர்களுக்கு ஏற்பட்டு விட்டால் தீவிரமாக வளர்ந்து வந்து வாழ்க்கையின் அடிப்படையாகிவிடும். திடநம்பிக்கை மாத்திரம இவர்களுக்கு ஏற்பட்டு விட்டால் இவர்கள் செயற்கரிய காரியங்களை வெகு அலட்சியமாகச் செய்து முடிப்பார்கள். தெய்வ நம்பிக்கையில் வளர்ந்த காந்தி மஹானும், தன்னம்பிக்கையில் வளர்ந்த ஹிட்லரும், இந்த நூற்றாண்டிலே பிரசித்தியடைந்த உதாரண புருஷர்கள். தெய்வ நம்பிக்கையுடன், தான் சரியான வழியில்தான் நடக்கிறோம் என்கிற நிச்சயத்துடன் வாழ்ந்தால் இவர்கள் வாழ்க்கையில் வெற்றியடைவர். தெய்வம் போன்ற திடமாக என்றும் விளங்கக்கூடியதான தத்துவங்களில் ஏதேனும் ஒன்றில் பிடிப்பு ஏற்பட்டால்தான் இவர்களுக்கு தன்னம்பிக்கை உண்டாகும். சந்திரனுக்கு எப்படி சுயம்ப்ர பிரகாசம் கிடையாதோ அப்படியே இவர்களுக்



கும் தன்னைத்தவிர ஏதாவதொன்றில் நம்பிக்கை ஏற்படாவிடில் புத்திப் பிரகாசம் ஏற்படாது. மேன்மையும் உண்டாகாது.

பொதுவாக இவர்கள் நம்பிக்கையற்றவர்கள். தைரியமாகத் தன்னையும் நம்பமாட்டார்கள்; பிறரையும் நம்பமாட்டார்கள். சிறிய காரியத்தையும் பிறரை நம்பி ஒப்படைக்க இவர்களுக்கு மனம் வராது. எதையும் தானே செய்தால்தான் திருப்தி ஏற்படும். இவர்களுக்கு சாமர்த்தியமும் போதாது. ஆகையால் வீணாகக் கவலைப்பட்டுக்கொண்டு வாழ்க்கையை சிரமங்கள் நிறைந்ததாக இருக்கும். (கதவைப் பல தடவைகள் நன்றாகப் பூட்டிவிட்டுக் கொஞ்ச தூரம் போனதும் மறுபடியும் வந்து பூட்டை இழுத்துப் பார்க்கிறவர்கள் இவர்கள்தான்) இவர் இயற்கையில் பயங்கொள்ளி. இவர்களில் மிகுந்த மேன்மையானவர்கள் சாந்த சிலராக வாழ்வர். மற்றவர்களோ சண்டப் பிரசண்டமாகப் பேசுவார்கள். எதையும் மிகைப்படுத்தியே வெளியிடுவார்கள். சில சமயங்களில் எரிமலை கக்கும் நெருப்புக் குழம்பு போல் இருக்கும். யாராவது எதிர்த்தால் உடனே அடங்கிப் போவார்கள். பயமுறுத்துவதிலும், மிரட்டியே வாழ்க்கை நடத்துவதிலும் இவர்கள் சூரர்கள். கெஞ்சினால் மிஞ்சுவார்கள்; மிஞ்சினால் கெஞ்சுவார்கள். என்னதான் தைரியமாக இவர்கள் பேசினாலும் நெஞ்சில் பயம் குடிகொண்டே இருக்கும். இவர்களில் சத்தியமே பேசுகிறவர்களையும் பொய்யே பேசுகிறவர்களையும் காணலாம். இவர்களது புத்தி ஒரேமாதிரி இராது. சூழ்நிலையை அனுசரித்து மாறிய வண்ணமிருக்கும். கூடப் பழகுகிறவர்களுடைய நடையுடை பாவனைகள் இவர்களுக்கும் படிந்துவிடும். (ஆகையால் இந்த எண்ணின் ஆதிக்கத்தில் பிறக்கும் குழந்தைகளைப் பெற்றோர். ஜாக்கிரதையாகக் கவனித்து வரவேண்டும். சிறிய வயதில் பொய் பேசுகிறவர்கள், சிரத்தையற்ற வாழ்க்கை நடத்துபவர்கள் முதலியவர்களுடன் பழகவிடக் கூடாது.

பிறருக்கு பிரமாதமான யோசனைகள் சொல்லுவார்கள். தான் ஒரு காரியத்தை செய்யும்படி நேர்ந்தால் திரும்பத் திரும்ப யோசித்து மனதைக் குழப்பிக் கொள்ளுவார்கள். தன்னைக் கண்டு பயப்படாதவர்களிடம் மிகவும் நயமாகப் பழகுவார்கள். தன்னைக் கண்டு பயப்படுவர்களை சதா விரட்டிய வண்ணமே இருப்பார்கள்.

இவர்களுக்கு மன ஓட்டம்தான் வேகமே ஒழிய, கை கால் ஓட்டம் மிகவும் தாமதமாகவே காணும். எந்தக் காரியத்தையும் பல தடவைகள் யோசித்து மெதுவாகவே செய்வார்கள். இவர்களுக்கு சோம்பல் ஓரளவு உண்டு. எல்லா சாமர்த்தியங்களும் இருந்த போதிலும் ஒரு வித உழைப்பிலும் ஈடுபட மனநாட்டம் இராது. எதற்கும் பலர் யோசனைகளையும் கேட்டுவிட்டு ஒன்றையும் செய்யாமலே இருந்துவிடுவார்கள். (நான் எப்படிச் செய்ய, பலரும் பலமாதிரி சொல்லுகிறார்களே என்பார்கள்). தர்க்கம் பண்ணுவதில் இவர்களுக்கு வெகு பிரீதி. ஒவ்வொரு சொல்லுக்கும் பலவிதமான அர்த்தங்களை அள்ளி வீசுவார்கள். தர்க்கமும் சரி, குதர்க்கமும் சரி, இவர்களைப்போல் யாராலும் செய்ய முடியாது.

வாழ்க்கையை மேலான குறிக்கோள் உடையதாகச் செய்துகொள்ள வேண்டும். வீண் பயம் நீக்கப்பட வேண்டும்.

சிறிய கஷ்டம் வந்தாலும், நஷ்டம் வரும்போல் இருந்தாலும் கற்பனா சக்தியால் அதை பெரிது பண்ணிக் கொண்டே போவார்கள். இந்த வீண் பயங்களையும் யோசனைகளையும் கட்டுப் படுத்தாவிடில் சித்தப்பிரமையில் கொண்டுபோய் விடும். ஆங்கிலத்திலே Lunatics (சந்திர ஆதிக்கர்) என்று பைத்தியக்காரர்களைக் குறிக்கிறார்கள். கற்பனையைத் தன் வசமாக்கிக் கொள்ளுகிறவன் கதாசிரியராகவோ, சிறந்த கலைஞனாகவோ ஆகிறான். கற்பனை வசப்படுகிறவன் பைத்தியமாகிறான். தோல்வியோ கஷ்டமோ வந்தால் தற்கொலைக்கான எண்ணங்கள் இவர்களுக்கு உண்டாகும். நீரில் மூழ்கி வாழ்க்கையை முடித்துக் கொள்ளுபவர்கள் இவர்களே. இவர்களுக்கு வரும் சிரமங்கள் இவர்களது தெய்வநம்பிக்கையை வலுப்படுத்தவே வருகின்றன. நம்பிக்கையுடன் இருந்தால் சீக்கிரமே சிரமங்கள் நீங்கி விடும்.



# மூன்றும் எண்காரர்

## பிறந்த திகதிகள் 3, 12, 21, 30

### பொதுவான குணங்கள்

தனக்கு மேலானவர்களின் கட்டளைகளைச் சிரமேற்கொண்டு உண்மையுடன் சலியாமல் உழைப்பார்கள். இவர்களுக்கு இயல்பாகவே அடக்கம், பொறுமை, பெரியோருக்குக் கீழ்ப்படிதல் முதலிய குணங்கள் அமைந்திருக்கும். "மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்" என்றிருப்பர். எல்லாக் காரியங்களிலும் நம்பக்கூடியபடி நாணயமாகவே நடந்து கொள்வார்கள். கௌரவத்தையும் நல்ல பெயரையும் உயிருக்கும் மேலாக மதிப்பவர்கள் இவர்களே. தான் தன்னைவிட பெரியோருக்கு அடங்கி நடப்பது போலவே தனக்குக் கீழே இருப்பவர்களும் நடக்க வேண்டுமென விரும்புவர். இவர்கள் பெருத்த உழைப்பாளிகள். மற்றவர்களை அதிகாரம் செய்யும் போது மிகவும் கடினமான சித்தம் உடையவர்கள் போலத் தோற்றும் இவர்கள் உண்மையில் பொன்னான இருதயம் படைத்தவர்கள். பிறர் கஷ்டம் கண்டு உருகும் இயல்பினர். நியாயமான முறையிலேதான் எதையும் செய்வார்கள். ஆழ்ந்த மதப் பற்றுடைய இவர்

கள் எந்த மதத்தினராகப் பிறந்தாலும் ஆசார சீலராகவே காணப்படுவர். பழைய கொள்கைகளிலும் பழக்கங்களிலும் நம்பிக்கை உடைய இவர்கள் புதிய விஷயங்களுக்கோ, நாகரீக மாறுதல்களுக்கோ இலேசில் உடன்பட மாட்டார்கள். நாகரீக மாந்தர்களுக்கு இவர்கள் ''பத்தாம் பசலி'' யாகவே தோன்றுவர். முன்னோர்களையே பின்பற்றி நடப்பார்கள். தன்னிஷ்டப்படி ஒரு காரியத்தை செய்வதென்பது இவர்களிடம் கிடையாது. எப்படிச் செய்ய வேண்டியது நியாயமோ அப்படியே செய்வார்கள். எல்லோருக்கும் உதவ விரும்பும் இவர்கள் பிறரிடம் ஒரு உதவியும் கோரமாட்டார்கள். கௌரவத்தை விட்டுக் கொடுக்க விரும்பாமல் கஷ்டங்களைப் பிறர் உதவியின்றிச் சமாளிப்பதால் கர்விகள் போன்று தோன்றுவார்கள். ஆனால் இவர்கள் கர்விகள் அல்லர். இயற்கையிலேயே பெருந்தன்மை வாய்ந்தவர்களாதலால் பிறரிடம் எதையும் யாசிக்க லஜ்ஜை இருக்கும். சொந்த வேலைகளைவிடப் பொதுக் காரியங்களில் இவர்களுக்கு ஊக்கம் அதிகம் உண்டாகும். இலாபம் ஏதுமில்லாத பொதுக் காரியங்களில் இவர்களைக் காணலாம். இவர்கள் இடைவிடாத முயற்சியாலும், மேலான குணங்களாலும் உயர் பதவிகளை அடைகின்றனர். இவர்களில் மிக உன்னதமான நிலைகளில் உள்ளவர்கள் வாழ்க்கையை உற்று நோக்கினால் எவரும் இவர்களை அதிர்ஷ்டசாலிகள் என்று சொல்ல மாட்டார்கள். யோக்யதைக்கு ஏற்ற பதவி என்றே தோன்றும். படிப்படியாகவே வாழ்க்கையில் முன்னேற்றம் காணப்படும். சக்திக்கு மிஞ்சின பதவிக்கு ஒருக்காலும் ஆசைப்படமாட்டார்கள். எந்த நிலையில் இருந்தாலும் திருப்தியுடன் உண்மையாகப் பணியாற்றுவார்கள். இவர்களைத் தன்னம்பிக்கை உடையவர்கள் தன்நம்பிக்கை இல்லாதவர்களென்று இரு பிரிவாகப் பிரிக்கலாம்.

தன்னம்பிக்கை உடையவர்கள் தான் சரியென்று எண்ணும் எதையும் கூசாமல் பகிரங்கப் படுத்தி ஆதரவு தேடுவர். பிறரிடம் ஒருகாலும் யோசனை கேட்க மாட்டார். தீர்மானித்த பின்னர் எக்காரியமாயினும் எதிர்ப்பு ஏற்



பட்டாலும் சிறிதும் பொருட்படுத்தாமல் தீவிரமாக காரியத்தில் இறங்கி விடுவார்கள் பின்வாங்கமாட்டார்கள். விரோதிகள் எப்படிப் பட்டவர்களானாலும் அஞ்சாமல் போர் புரிவர். யுத்தத்திலும் தோல்வியை விட மரணமே சிலாக்கியமென மதிப்பவர்களாவர். மேன்மையான லக்ஷியங்களால் கவரப்பட்டு வாழ்க்கையை லக்ஷியவாதியாக இருந்து நடத்துவார்கள். லக்ஷியத்திற்காக சகலத்தையும் துறக்கவும் முன்வரும் இவர்களே மனிதரில் தேவர் என்று போற்றத் தகுந்தவர்கள்.

தன்னம்பிக்கையில்லாதவர்களோ குடும்பத்தில் மூத்தோர்கள் சொல்லுக்கு பால்யத்தில் கட்டுப்பட்டு மனதில் தோன்றும் தீவிரமான எண்ணங்களை நசுக்கிவிடுவர். வயது வந்த பின்னர் சுதந்திரம் இருந்தாலும் குடும்பக் கடமைகளும் பாசமும் இவர்களைத் தியாகப் பாதையிலே செல்லவொட்டாது தடுத்து சாதாரண மனிதராக்கிவிடும். முடிவில் இவர்களுக்குக் கண்ணியமான பெயர் மாத்திரம் உடையவராய் புகழையோ. பெரும் பதவியையோ எதிர்பாராமலே உழைக்கும் நிலைமை ஏற்பட்டுவிடும். இவர்களே உலக வாழ்க்கைக்கு இன்றியமையாத தொழில்களில் ஈடுபட்டு உலகம் சரிவர நடக்க உதவுகின்றனர்; குமாஸ்தாக்கள். காரியதரிசிகள் (இவர்களைக் காரியதரிசிகளாக வைத்துக் கொண்டே அநேக பிரமுகர்கள் பிரமிக்கத் தகுந்த அறிவாளிகள் போல் காட்டிக்கொள்கின்றனர்) முதலிய சாதுவான மனிதர்களாகக் காணப்படுகின்றவர்களும் இவர்களே, பிறருக்கு உதவுவதில் ஆர்வமுடையவர்களாகவே என்றும் இருப்பர். தன் குடும்பத்தினருக்காக எந்தத் தியாகத்தையும் செய்வார்கள்.

கூர்மையான அறிவும் உழைப்பும் இயற்கையாகவே உடையவர்களானதால் சிறு வயதிலேயே புத்திசாலி என்று பெயரெடுப்பர். சுறுசுறுப்புடைய இந்த எண்ணின் கீழ் பிறந்த சிறுவர் சிறுமியர் வகுப்பில் முதன்மையாகவே காணப்படுவர். சிறு வயதிலேயே தன் பொறுப்பை

உணர்ந்து யாவரும் மெச்சும்படி நடந்து கொள்வார்கள். இவர்களில் அநேகர் மிகச் சிறுவயதிலேயே குடும்ப பாரத்தை ஏற்கின்றனர்.

தர்மம் புரிதல் போன்ற விஷயங்களிலும், தானாக புதிதாக ஒரு தர்ம ஸ்தாபனத்தையும் ஆரம்பிக்க இவர்களுக்கு ஆர்வமிராது. சரியாக நடந்து கொண்டிருக்கும் ஸ்தாபனங்களுக்கே உதவுவார்கள்.

குடும்ப கௌரவம், தேச கௌரவம் இவைகளுக்காகப் போராடக் கூடிய இவர்கள் ஒருக்காலும் கௌரவத்தைப் பாதிக்கக் கூடிய காரியங்களில் பிரவேசிக்க மாட்டார்கள்.

---

# நான்காம் எண்காரர்

## பிறந்த திகதிகள் 4, 13, 22, 31

### பொதுவான குணங்கள்

**மே**ற் குறிக்கப்பட்ட நான்கு தேதிகளில் பிறப்பவர் மிகுந்த வாக்கு வன்மையுடையவர்களாகக் காணப்படுவர், பேசுவதன் மூலமும், எழுதுவதாலும், உலகையும் முக்கியமாகத் தான் வாழும் சமூகத்தையும் சீர்திருத்த முற்படுவர். வாக்கில் வன்மைதான் இருக்குமேயன்றி இனிமை இராது. துடுக்காகவே அபிப்பிராயங்களை வெளியிடுவர். தான் உண்மை என்று நினைப்பவைகளை பகிரங்கமாகவே தெரிவிப்பர். கேட்பவர்கள் என்ன நினைப்பார்களென்று அவ்வளவாகக் கவலைப்பட மாட்டார்கள். வாழ்க்கையின் ஆரம்பத்தில் இப்படி இருந்த போதிலும் அநேகர் அனுபவத்தால் திருந்தி விடுகின்றனர். தம்முடைய அபிப்பிராயத்



தையே ஸ்தாபிக்க விரும்புவர். யார் எது பேசினாலும் அதற்கு மாறான விஷயங்களை உடனே கூறுவர். எதையும் ஆமோதிக்காமல் எதிர்த்தே அபிப்பிராயம் சொல்லுவார்கள். பிறர் கூறுகிற எந்த விதமான முடிவையும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். நேர விசாரித்து, விவாதித்து ஆராய்ந்து வரும் முடிவையே நம்புவார்கள். எவ் விஷயத்தைப் பற்றியும் ஒரு பிரத்தியேகமான அபிப்பிராயம் வைத்திருப்பார்கள். இந்த அபிப்பிராய மாறுதலை மனதுக்குள் வைத்துக் கொண்டு காரியத்தில் காட்ட ஆரம்பித்தாலேதான் இவர்கள் வாழ்க்கை வெற்றியடையும் இல்லையேல் இவர்கள் சதா விரோதிகளை விருத்தி செய்துகொண்டேயிருப்பார்கள். மிக்க இளகின மனமும், எல்லோரையும் நண்பர்களைப் போல் பிரியமாக நடத்தும் தன்மையும் உடைய இவர்கள் அநேக சிநேகிதர்களைச் சுலபமாக சம்பாதித்துக் கொள்ள முடியும். ஆனாலும் இவ்வெண்ணிக்கையில் பிறந்த அநேகர் அதிக நண்பர்கள் உடையவர்களாகக் காணப்படவில்லை; அதன் காரணம் இவர்களது அசிரத்தையும் ஆகும். எல்லோருடனும் பழகினாலும் ஆழ்ந்த நட்பை விரும்புபவர்களாதலால் அதற்கேற்ற சிலரையே நண்பர்களாக ஏற்றுக் கொள்வர். மிகுந்த புத்தி சக்தியுடையவர்களாதலால் இளமையிலேயே வாழ்க்கையைத் தீவிரமாக ஆராய முற்படுவர். கதைகள் சாத்திரங்கள் வேதாந்தம், மதம் சம்பந்தமான நூல்களெல்லாம் இவர்கள் மனதை வெகுவாகக் கவரும், இவர்களுடைய மிக முக்கியமான குணம் எல்லா விஷயங்களையும் தான் அறிந்திருக்க வேண்டும் என்பதுதான். எப்பாடு பட்டாவது விஷயங்களைச் சேகரித்துக் கொண்டிருப்பர்.

மற்ற சில எண்ணிக்கைகாரர்களைப் போல இவர்களுக்குப் புகழில் ஆசையிராது. மிகத் திருப்தியாக வாழவே விரும்புவர். உணவு விஷயத்தில் ரொம்பவும் சிரத்தையாக இருப்பார்கள். சாப்பாடு சிற்றுண்டி இவைகளில் தீவிரமான மன நாட்டம் இருக்கும்; நோயொன்றும் இல்லாத

போதிலும் எதாவது பலவிருத்தி ஆயுள் விருத்திக்கு மருந்து சாப்பிடலாமா என்று கேட்பார்கள்.

பிறர் சொல்லும், சிறு செயலும் கூட இவர்களைத் துன்புறுத்திவிடும். சீக்கிரம் மனம் நொந்து போவார்கள். மிகவும் உணர்ச்சி வசப்பட்டவர்களாக இருப்பார்கள். விசாலமான இதயம் படைத்த இவர்கள் நண்பர்களிடத்து மிக்க பெருந்தன்மையுடன் நடந்து கொள்வர். பணம் சம்பாதிப்பது இவர்களுக்கு மற்ற சில எண்ணிக்கையுடையோரைப் போன்று சுலபமாக அமையாது. ஒவ்வொரு காசும் சிரமப்பட்டேதான் சம்பாதிக்க வேண்டியிருக்கும். இருந்த போதிலும் அப்படிக் கிடைக்கும் பணத்தை மிக்க குதூகலத்துடன் செலவளிப்பர். இவர்களுக்குப் பணம் செலவளிப்பதில் உற்சாகம் இருக்கும். எல்லா அழகான பொருள்களையும் வாங்கிச் சேர்க்க முற்படுவர்.

சிறு வயதில் ஓடி விளையாடக் கூடிய விளையாட்டுகளில் அதிக ஆர்வம் இருக்கும். யுவ வயதில் சுகமான வாழ்க்கையிலும், முன்னேற்றத்திலும் தீவிர ஆசை இருக்கும். வயது ஏற ஏற வேதாந்த விஷயங்களிலோ அல்லது சமூக சேவைகளிலோ தீவிர ஈடுபாடு உண்டாகும். மூன்று எண்ணிக்கைக் காரர்கள் தேசீயப் போராட்டங்களிலும் வருவது வரட்டுமென இறங்கிவிடுவார்கள். ஆனல் இவர்களோ தாம் கஷ்டப்படாமல் நிச்சயம் வெற்றி பெறலாம் என்று தீர்மானிக்கும் காரியங்களில்தான் இறங்குவார்கள்;

---



# ஐந்தாம் எண்காரர்

## பிறந்த திகதிகள் 5, 14, 23

### பொதுவான குணங்கள்

"சீக்கிரம், சீக்கிரம், வேகமாக" என்று பிறரைக் கட்டளையிடுவார்கள். இராஜஸ் குண மிகுதியுடையவர்களாதலால் இவர்களுக்கு உலகமே ஒரு தாமதமான முட்டாள் கூட்டமாகத் தோன்றும். வெகு சீக்கிரமே எந்த விஷயத்தையும் கிரகித்துக் கொள்வார்கள். வேகமாகவும் பேசுவார்கள். பிறர் புரியவில்லை என்று சொன்னல் கோபந்தான் வரும். இவர்களது யோசனைகளும் புத்தியும் மின்னல் போன்ற வேகமுடையவை. மற்றவர்கட்கு வெகு நாட்கள் யோசனையின் பேரில் வரும் முடிவுகள் எல்லாம் இவர்களுக்கு உடனே தோன்றிவிடும். ஆகையால் தன் முன்னேற்றம் சதா தன்னைச் சூழ்ந்திருக்கிறவர்களின் தாமத குணத்தால் அல்லது மெதுவான இயல்பால் பெரிதும் பாதிக்கப்படுவதாகக் கூறுவர். இவர்களில் அதிக வேகமுடையவர்களின் கருத்துக்களைப் பல சமயங்களில் இவர்களது வாழ்நாளுக்குப் பிறகே உலகோர் அறிந்திருக்கின்றனர்.

மிக எளிதில் குழந்தைகள் போல எவரிடமும் சுலபமாகப் பழகி விடுவார்கள். மனதில் தோன்றுவதை சுலபமாக வெளியிட்டு விடுவார்கள்; ஒன்றையும் மறைக்கத் தெரியாது; சுற்றியிருப்போர் இவர்களது காதல் விவகாரங்களைக் கூட சுலபமாக அறிந்து விடுவர்.

எதையும் மிகச் சுலபமாகச் சாதித்து விடலாம் என்று உண்மையாக நம்புவார்கள். ஆகையால் எவ்வளவு பெரிய காரியமாக இருந்தாலும் சிறிதும் பயமோ, தயக்கமோ இன்றித் துணிந்து இறங்கி விடுவார்கள். நிச்சயமில்லாத சூதாட்டம் போன்ற தொழில்களிலும் காரியங்களிலும் கூட

வெற்றி நிச்சயம் என்று கூறிக்கொண்டு இறங்கி விடுவார்கள். இவர்கள் இப்படி இல்லாதிருப்பின் நாம் வாழ்க்கையில் எவ்விதமான முன்னேற்றத்தையும் அடைந்திருக்க மாட்டோம், ‘ பிறர் செய்யமுடியாததைத் தான் செய்ய வேண்டும்'' என்பதே இவர்களைத் தூண்டும் அவா. பழைமையை வெறுப்பர். புதுமையை நோக்கி விரைவர். புதுமையாகக் கண்டு பிடிக்கப்படும் பொருட்களெல்லாம் நன்மைக்கே என்று நம்புவர். மற்றவர்களைப் போலத் தானும் இருக்கலாகாதென எண்ணுவார்கள். நாகரீக மனிதர். அறிவாளிகள் பெரிய கருத்துக்களையும் சமூக மாறுதல்களையும் உலகினரிடை புகுத்துவர். இவ்வெண்ணின் சக்தி குறைந்தோர் புதுப் புது மாதிரியான உடைகள் நகைகள் அணிந்து நாகரிகத்தைப் பரப்புவார்கள். மேன்மையானவர்கள் எல்லோராலும் போற்றப்பட்டு, மேலான காரியங்களைச் செய்தவண்ணமிருப்பார் கீழ்த்தரமானவர்கள் பிறரை எளிதில் வஞ்சித்தே சிறிதும் பயமின்றி வாழ்வர். அவர்கள் அஞ்சாது பொய் பேசியும் மற்றவர்களை நம்பச் செய்து ஏமாற்றியுமே வாழ்நாளைக் கழிக்கின்றனர். பிரசித்தமான மோசடிகள் நடக்குமிடங்களில் இவர் பங்காளியாக இருப்பது நிச்சயம். இவ்வெண்ணிக்கையுடையோர் தீயவராக இருந்தல் விரும்பத்தக்கதல்ல என்கிற காரணத்தால் மேன்மையான குணங்களைப் பழகி அடைவதை முன்னிட்டு இத்துடன் அவர்கள் தீய சுவாபங்களை விவரிக்காமல் விடுகிறேன். திட்டமான அதிர்ஷ்டசாலிகளான இவர்கள் மேன்மையான வாழ்க்கையை நடத்திப் பொருளும் புகழும் அடைந்து இருப்பதே யாவரும் விரும்புவதாகும்.

சிறுவயதிலிருந்தே யாருடன் பழகினாலும் அவர்களது குணங்களையும் பழக்கங்களையும் சீக்கிரம் கிரகித்துக் கொள்வர். ஆகையால் பெற்றோர் இவ்வெண்ணின் ஆதிக்கத்தில் பிறக்கும் குழந்தைகளை, மேன்மையான குறிக்கோள் உடையவர்களது உதாரணங்களையே போதித்து நல்ல சகவாசத்திலேயே வளர்க்க வேண்டியது மிக்க அவசியம். இன்று



விரும்புகிற விளையாட்டுச் சாமான் நாளைய தினம் பிடிக்காமல் போய்விடும். சதா மாறுதலை விரும்பும் மனமுடைய குழந்தைகள். வயது ஆனாலும் இக்குணம் மாறுவதாகக் காணோம். மாறுதல் - மாறுதல்; இடம் மாறுதல், உத்தியோகம் மாறுதல். சூழ்நிலை மாறுதல் இவைகளுக்காகப் பாடுபடுபவர். வெகு சிரமப்பட்டு ஒரு பதவியை அடைவர். உடனே அது ''சப்'' பென்றாகிவிடும். வேறு எதற்காகவாவது முயற்சியை ஆரம்பிப்பர். சதா மாறும் காட்சிகளைக் காண விரும்பிப் பிரயாணத்தை ஏற்பர். ஆனாலும் ரம்மியமான இடங்களிலும் நீடித்திருக்கப் பிரியமேற்படாது. எதையாவது புதிது புதிதாகப் பார்த்துக் கொண்டும் செய்து கொண்டும் இருக்க விரும்புவார்கள். இன்ன காரியம்தான் அடுத்த படியாக செய்யப் போகிறார்கள் என்பது இவர்களுக்கே தெரியாது. ஒன்று நிச்சயம்-இன்று செய்வதை நாளை செய்ய விருப்பமிருக்காது.

இவர்களை வாழ்க்கைத் துணைவராக அடைபவர்கள் இக் குணங்களை அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். கவர்ச்சிகரமான ஆடை அணிவதாலும் உணவு மாறுதல்களாலும் வெகு சீக்கிரத்தில் இவர்களைக் கவர்ந்து விடலாம். இவர்களது குணங்களை அறிந்து கொண்டு இவர்களுக்கு இல்லாத குணாதிசயங்கள் இருப்பதாகப் புகழ்ந்தால் கூட உண்மையென நம்பிவிடுவார்கள். உதவி செய்யப் பின் வாங்காதவர்களாதலால் இவர்களைக் கொண்டு சுலபமாக எக் காரியத்தையும் சாதித்துக் கொள்ளலாம். ஆசாபாசங்கள் மாறிக்கொண்டே இருப்பதால் இவர்கள் சாமர்த்தியமாக நடந்து கொள்ளாவிடில் பிறர் இவர்களை சந்தேகிக்க நேரிடும். வாழ்க்கையில் நேரிடும் தோல்விகளும் துக்கங்களும் இவர்களைச் சிறிது நேரமே பாதிக்கும். சிறிது நேரத்திற்கெல்லாம் மேற்கொண்டு நடக்க வேண்டிய விஷயங்களைக் கவனிக்க ஆரம்பித்து விடுவர். இதற்குக் காரணம் இவர்களது மனோவேகமும், மாறுதல்களைக் கண்டு அஞ்சாத் தன்மையுமே ஆகும்.

எப்பொழுதும் உற்சாகமாகவே காணப்படும் இவர்கள் தோல்வியால் மனம் வருந்தார். உடனே அதற்கு தகுந்தாற் போல முயற்சித் திட்டத்தை மாற்றி அமைத்து வேலை தொடங்குவார். இவர்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும். தோல்விகள் இவர்கட்குக் கிடையா. தோல்வி போல் தோன்றுபவை, பின்னர் நன்மைக்காக ஏற்பட்ட மாறுதலே என்பது விளங்கிவிடும்.

இவர்களது அறிவு, உணர்ச்சி தூண்டுதலாலேயே இயங்குவதால் என்ன செய்ய வேண்டுமென்று மனத் தூண்டுதல் உண்டாகிறதோ அதைத் துணிந்து செய்யவேண்டும். பிறருக்குச் சரியென்று தோன்றாத விஷயமானாலும் அதைப் பற்றி லக்ஷியம் செய்யாமல் தோன்றுகிறபடி செய்ய வேண்டும். உலகாயத அறிவு என்று கூறப்படுகிற ஈஸ்வர சித்தம் இவர்களது புத்தியை ஆட்சி புரிகிறது. ஆகையால் 'ஏன்'' என்று கேட்காமல் புத்தியில் தோன்றுகிறபடி. இவர்கள் செய்தால் பின்னர் ''ஏன்'' என்பது தானே விளங்கும். புத்தியின் தூண்டுதலின் படி நடந்து கொள்வதால் எவ்வளவு பெரிய ஆபத்து சூழ்ந்தாலும் அதிலிருந்து தப்பிவிடுவர். எனக்கு ஒரு முக்கிய நண்பர் இருக்கிறார். அவருடைய வாழ்க்கையே அதிசயமான ஆபத்துக்கள் நிறைந்தது. (23-ந் தேதி பிறந்தவர். கூட்டு எண் 5) நிச்சயமான மரண விபத்திலிருந்து இவர் சுமார் 70 தடவைகள் கடைசி நிமிஷத்தில் தப்பியிருக்கிறார். பல அயல் நாடுகளில் வாழ்நாளில் பெரும் பகுதியைக் கழித்தவர். தொடர்ந்து ஒரு மாதங்கூட ஒரு தேசத்தில் இருக்க மாட்டார். பெருத்த கோடீஸ்வரராக இருந்தும் சரியான நேரத்தில் ஒரு நாள் கூட உணவருந்தார். சில வருடங்களுக்கு முன்பு சென்னையிலிருந்து கோயமுத்தூருக்குப் போகும் போது சிதறுண்ட விமானத்தில் பயணமானார். பத்திரிகை மூலம் விபரமறிந்த போது (விமானம் அழிந்ததைத் தவிர வேறு விபரங்கள் எதுவும் கிடைக்கவில்லை). நாங்கள் திகைப்படைந்தோம். இரண்டு தினங்களுக்குப் பிறகு தான் சௌக்கியமாக பெங்களூரில் இருப்பதாகவும்,



பெங்களூரிலிருந்து விமானம் கிளம்பும் போது தனக்கு ஒரு நண்பரைக் காண அவா ஏற்பட்டதால் பிரயாணத்தை அத்துடன் முடித்துவிட்டு அந்நண்பரைக் காண விமான நிலையத்திலிருந்து ஊருக்குப் போனதாகவும் (பெங்களூருக்குள்), இரண்டு தினங்களில் ரயிலில் திரும்புவதாகவும், கவலைப்பட வேண்டாமென்றும் தெரிவித்திருந்தார். இவர் மனதில் தோன்றியபடி போகாமல் டிக்கட்டு வாங்கின இடத்திற்கே போயிருந்தால் இவ்வுலகைவிட்டே போயிருப்பார். இவரைத் தவிர 14-ந் தேதியில் பிறந்த பலரும் இம்மாதிரியான அனேக விபத்துக்களில் கண்டத்தைக் கூறியிருக்கின்றனர். ஆகையால் உணர்ச்சிகளை மதித்து அவைகளுக்கு ஒப்ப நடக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

பணம் சம்பாதிப்பதற்காகக் கஷ்டப்பட்டு உழைக்க பிரியப்படமாட்டார்கள். மனம் சதா சுலபமாக நிறைய பணம் சம்பாதிக்கக் கூடிய தொழில்களையே நாடும். வெகு எளிதில் மிகப் பெரும் தொகைகள் சம்பாதிக்கும் திட்டங்கள் இவர்கள் மனதில் சதா உருவாகிக் கொண்டிருக்கும். கவலையில்லாமல் அகப்பட்டதை செலவழிப்பார்கள். எத்தொழில் புரிந்தாலும் செல்வந்தராகக்கூடிய இவர்கள் சூதாட்டங்களில் கலந்து கொள்ளாமல் இருப்பது அவசியம். அப்படி ஈடுபட்டால் சிறிது வெற்றிக்குப் பிறகு தொட்டதெல்லாம் தோல்வியாக முடியும். ஏனெனில் இவர்களது புத்தியைப் பிரகாசப்படுத்தும் அறிவு இவர்கள் மூலம் உலகில் பல காரியங்களைச் சாதித்துக் கொள்வதற்காக இயங்குகின்றதேயன்றி இவர்களது தனிப்பட்ட லாபத்தை மாத்திரம் கருதியன்று. இதை மறக்காதிருக்கவும். இதுவே சிருஷ்டியில் இவர்கள் வசீகரமாகவும், அதிர்ஷ்டசாலிகளாகவும் படைக்கப்பட்டதின் ரகசியம்.

ஐந்து எண்ணிக்கையில் பிறக்கும் ஸ்திரீ புருஷர்களுக்கு சபல சித்தம் அதிகம். கண்டதும் நேசிக்க ஆரம்பித்துவிடுவர். சிலர் சமூகக் கட்டுப்பாடுகளை சிறிதும் பொருட்

படுத்த மாட்டார்கள். அவசரப்பட்டு மணந்து கொண்டு பின்னால் அவதிப்படுவதுமுண்டு). கல்யாண விஷயங்களில் ஜாக்கிரதையுடனும் முன் யோஜனையுடனும் நடந்து கொள்ள வேண்டும். ஸ்திரி புருஷ விஷயங்களில் நிதானம் மிகவும் தேவை. 9, 18, 27 திகதிகளில் பிறந்தோர் இவர்கள் மனதை நொடியில் கொள்ளைகொள்வர். இவர்களை மனதார நேசித்த போதிலும் இவர்களுக்கு அடங்காமல் இவர்களை ஆட்டி வைத்துவிடுவார்கள்; ஜாக்கிரதை.

---

# ஆறும் எண்காரர்

## பிறந்த திகதிகள் 6, 15, 24

### பொதுவான குணங்கள்

தைரியசாலிகளாகவும், காந்த சக்தி நிறைந்த கண்கள் பொருந்தியவர்களுமான இவர்களை வெகு சுலபத்தில் பார்த்த மாத்திரத்தில் சுக்கிர ஆதிக்கரென அறியலாம். மனம் எப்பொழுதும் அழகான பொருள்களிலும், கவிதை, சங்கீதம், நடனம் முதலிய இன்பகரமான விஷயங்களிலும் ஈடுபட்டிருக்கும். ஐம்புலன்களாலும் அனுபவிக்க கூடிய பொருள்களையெல்லாம் நன்கு கவனிப்பர். சந்தோஷமாக வாழ்வதே இவர்களது வாழ்க்கையின் இலட்சியம். போகங்கள் மனதை இழுக்கும். வேதாந்திகள் உலகம் மாயை என்று சொல்வதைக் கேட்டால், இவர்களுக்கு வியப்பாக இருக்கும். இத்தனை சுகங்கள் நிறைந்த இடத்தையா இப்படிக் கூறுகின்றனர் என்று நினைப்பார்கள் ஆனால் இவர்கள் நாஸ்திகரல்ல என்பதைக் கவனிக்கவும். அசுர குருவின் ஆதிக்கத்தின் கீழ்ப்பட்ட எண்ணுடையரால் இதில்



பிறந்தோர் மந்திர தந்திரங்களிலும் தவம் புரிவதிலும் காரிய சித்திக்காக இறைவனை வழிபடுவதிலும் தீவிரமுடையவர்களாக இருப்பர். இவர்கள் தியாகம் புரிந்தாலும் நிச்சயமாக அது பெருத்த லாபத்தையடையச் செய்யும் செயல் எனக் கூறிவிடலாம். யோசித்து முடிவுக்கு வராமல் எந்தக் காரியத்திலும் இறங்கமாட்டார்கள். தோல்வியால் சோர்வடைய மாட்டார்கள். அசுரத் தன்மையுடன் மேன் மேலும் தீவிரமாக முயற்சிப்பார்கள். உலக வாழ்க்கை நித்தியம், அதில் தான் நல்ல பதவியடைய வேண்டியது மிகவும் முக்கியம், என்று நினைப்பது போலத் தோன்றும் இவர்களது வாழ்க்கை. வசீகரமான தோற்றமும் விடா முயற்சியும் தன் காரியத்திலேயே கண்ணுயிருக்கும் தன்மையும் உடைய இவர்கள் செல்வமும் செல்வாக்கும் பொருந்தியவர்களாக வாழ்வதில் வியப்பொன்றுமில்லை. துளிக்கூட சந்தேகமில்லாமல் இவர்களை அதிர்ஷ்டசாலிகளென்று குறிப்பிடலாம்.

காவியம், ஓவியம், சங்கீதம், நடனம் முதலியவைகளில் மனதைப் பறிகொடுக்கக்கூடிய இவர்களே இன்று வரை பண்டைக்கால நாகரீக சின்னங்களையும் கலைகளையும் பாதுகாத்து நமக்கு அளிப்பவர்கள். உல்லாசமான சுற்றுப்புறங்களையும் காட்சிகளையும் விரும்புவதால் தோட்டம், வீடு இவைகளில் கவனம் செலுத்துவர். ஏவலாட்கள் இல்லாத வாழ்க்கை இவர்களுக்கு சப்பென்றுகி விடும். நேத்திரானந்தமான காட்சிகளை சதா கண்டுகளிக்க விரும்புவதால் வீட்டையே அழகுப் பொருள்களால் நிறைக்க விரும்புவர். இந்த ஆதிக்கரில் ஆண் மக்களும் நகைகள் அணிவதை மிகவும் விரும்புவர். தாங்கள் விரும்புபவர்களிடம் அன்பு, இரக்கம், தயை உடையவர்களாக இருப்பர். நண்பர்களல்லாதவரிடத்து மிக்க நிதானமாக நடந்து கொள்ளுவர். எப்பொழுதும் சிரித்த முகமாக இருப்பர். மிக்க தாராளமான மனப்பான்மையுடையவராகவே தோன்றுவர். ஆனால் தனக்கு சந்தோஷமூட்டியவர்களுக்கும் உத

வியவர்களுக்கும் கூட ஏதாவது கொடுப்பதற்கு மனம் வராது. இவர்களது இன்சொற்களையும் நடிப்பையும் கண்டு ஏமாந்த கலைஞர்கள் தொகை எண்ணிலடங்காது. புகழுக்கு ஆசைப்பட்டு ஓரளவு செலவு செய்வார்கள். தன் புகழுக்காகவே கலைஞர்களை ஆதரிக்க முன் வருவர். இந்த எண்ணின் கீழ் பிரசித்தமான கலைஞர்கள் பிறக்கின்றனர். இன்னும் உலகில் உள்ள பிரசித்த கலைஞர்கள் வித்வான்கள் இந்த ஆதிக்கரே. பொதுஜன ஆதரவு இவர்களுக்கு அதிகமாக இருப்பதற்கு இவர்களது வசீகரத் தோற்றமே முக்கியமான காரணம். கலையார்வமுடையவர்கள் பலர் இவர்களுக்கு உதவியவண்ணம் இருப்பர். பிரியமுடையவர்கள் போல இவர்கள் பழகின போதிலும் செய்நன்றியை மறப்பதில் சமர்த்தர். இவர்கள் இக் குணத்தை சீர்திருத்திக்கொள்ள வேண்டியது அவசியம். சமூகத்தை சந்தோஷப்படுத்தப் பிறந்த இவர்களைப் பற்றி அதிகம் குறைகூறிப் பயனில்லை. இது சுக்கிர ஆதிக்கத்தின் இயல்பு என்று அறிந்து விட்டுவிடுவோம். இவர்களுக்கு ஒருநாளும் வாழ்க்கைத் தேவைகளான ஊண், உடை, உறக்கம் ஆகிய மூன்று "உ" கரங்களிலும் குறைவு வராது. யாராவது உதவி செய்துகொண்டே இருப்பார்கள். சதா தன்னுடைய ஆரோக்கியத்தில் கவலை கொண்டவர்களாக புஷ்டிப் பொருள்களை உட்கொண்ட வண்ணமிருப்பார்கள். படிப்பதிலும், பார்ப்பதிலும், கேட்பதிலும் திருப்தியடையாமல் எல்லா சுகங்களையும் அனுபவிப்பதில் ஆர்வமுடைய இவர்கள் ஜீவ சக்தியை அதிகம் விரயம் செய்வர் விசேஷ புத்தர பாக்கியமுடையவர்கள். (2 எண்ணிக்கைக்காரர்களும் 6 எண்ணிக்கைக்காரர்களுமே, மற்றைய ஏழு வித மானவர்களைவிட அதிகம் புத்ர பாக்கியமுடையவர்களாகக் காணப்படுகின்றனர்), இவர்களைச் சுக்ர ஆதிக்கத்தை ஒட்டி மூன்று விதமான பிரிவுகளில் பிரிக்கலாம்,

• தோஷமின்றி 6-இன் ஆதிக்கம் இருந்தால் சரீரம் ஜீவ சக்தி மிஞ்சினதாக இருக்கும். அன்பு, சாந்தம் இவைகளின்



இருப்பிடமாக வாழ்வர். எப்பொழுதும் எந்நிலையிலும் சமாதானத்தை விரும்புவர். வீடு, சமூகம், உலகம் எல்லாம் சமாதானம் நிறைந்திருக்க வேண்டுமென சதா நினைத்து அதற்காகப் பாடுபடுவார்கள். பரோபகார சிந்தை மிரும். பிறர் கஷ்டத்தை தீர்க்க வழிகாட்டுவார்கள். ஆதிக்கம் சுத்தமாக இருந்தால் ஏசு கிறிஸ்துவைப் போன்ற மனம் அமையும். சரீரம் போர் வீரரது போன்று இருக்கும்.

அடுத்தபடியாக சுக்ர ஆதிக்கம் பலக் குறைவாக இருந்தால் சரீரம் பருத்துக் காணப்படும். சுகபோக வாழ்க்கை அமையும். மேலான லக்ஷியங்கள் இருக்காது. உண்பதும், உறங்குவதும் உல்லாசமாக வாழ்வதுமே வாழ்க்கையாகிவிடும். விருந்துகளும், கேளிக்கைகளும், புகழ் நாட்டமுமே சதா புரியும் காரியங்களாகிவிடும். செல்வம் சேர்ப்பதில் ஓய்வில்லாத முயற்சியும், அதற்குத் தகுந்த அதிர்ஷ்டமுமுண்டு. ஒருவிதக் குறைவுமின்றி திருப்தியான வாழ்க்கையமையும். இந்த எண்காரர்களை லக்ஷ்மி புத்திரர்கள் என்று கூறின் மிகையாகாது. ஆண்களானால் நல்ல அந்தஸ்திலுள்ள மனைவியை அடைவர். மனைவியால் சௌக்கியங்களை அடைவர். பெண்களானால் நல்ல அந்தஸ்திலுள்ள புருஷர்களையே அடைந்து அதன் மூலம் சௌக்கியமடைவர். இந்த எண்ணின் ஆதிக்கத்தில் பிறக்கும் பெண்கள் போக போக்கியங்களை அடைய வேண்டியவர்களாதலால், ஓரளவாவது இவர்களை நல்ல அந்தஸ்தில் உள்ளவர்களுக்கே மணம் புரிவித்தல் நலம். இல்லாவிடில் தவறான வழிகளில் இவர்கள் அதிர்ஷ்டம் திரும்பி விடுகிறது. (பல சமஸ்தானங்களில் தாழ்ந்த நிலையில் இருந்த அனேகர் எதிர்பாராத படி மன்னர் தயவால் வாழ்க்கையை மாற்றி அமைத்துக் கொண்டிருப்பதைக் கண்டிருக்கிறேன். இது வருந்தப்படக் கூடிய விஷயமேயாயினும் சொல்லாமல் மறைக்க விரும்பாததால் குறிப்பிட வேண்டியிருக்கிறது). இது ஒருவித சுக்ரதோஷத்தையே குறிக்கிற விபரீதயோகம். பொதுவாக

இந்த எண்காரர்கள் தன்னைவிட மேலான அந்தஸ்திலுள்ளவர்களால் காதலிக்கப் படுகின்றனர் என்பது நூற்றுக்கு நூறு உண்மையான விஷயம். அந்தஸ்து, செல்வம் இவைகளை அடைய அழகை உபயோகப்படுத்திக் கொள்ளுதல் நம் நாட்டுப் பண்புக்கு ஒத்ததல்ல என்பதை நினைவில் கொள்ள வேண்டியது அவசியம்.

சுக்ர தோஷம் உடையவர்களை இப்பொழுது கவனிப்போம்.

இவர்களே வாக்கு சாதுர்யத்தையும் வசீகர சக்தியையும் துஷ்பிரயோகம் செய்கிற சமூக எதிரிகள். இப்படிப் பட்டவர்களே தான் வாழும் சமூகத்தையும் ஏன் தேசத்தையுமே துக்கத்தில் ஆழ்த்தக் கூடியவர்கள். பிரசங்க சக்தி இருக்கும். எவரையும் வசப்படுத்தி விடுவார்கள். இவரிடம் ஏமாறுகிறோம் என்று தெரிந்தே மற்றவர்கள் ஏமாறுவார்கள். சுக்ர ஆதிக்கம் கெட்ட வழியில் திரும்பியவர்களை எப்படி அறிவதென நேயர்கள் சிறிது சிந்திக்கலாம். கீழ்க் கண்ட குணங்களால் அறியவும். பேராசை, சூது, வஞ்சகம், பெருத்த மோசடியான திட்டங்கள், சினேகிதர்களிடத்தும் விசுவாசமில்லாதிருத்தல், அதிக காமம், தீவிர பண நாட்டம் முதலியன மனதில் குடிகொண்டிருக்கும்.

நண்பர்கள் பலர் இந்நூல் மனிதர்களைப் பற்றி அறிந்து கொள்ளக்கூடிய உரைகல் போல் இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதால்தான் இவ்வளவு விரிவாகத் தெரிவிக்கவேண்டி இருக்கிறது.

குறிப்பு: இந்த ஆதிக்கரில் மேன்மையானவர் அற்புதங்கள் புரிவர். தெய்வசக்தி வாழ்வில் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும். நடுத்தரமானவர் அன்றாட உலக வாழ்க்கையில் நாட்டம் வைத்து சுகவாழ்வு வாழ்வர். கீழ்த்தரமானவர்கள் அற்புதமான காரியங்கள் செய்வதாகச் சொல்லி ஜோதிடம், வைத்தியம், மாந்திரிகம் முதலான சாஸ்திரங்களின் பெயரையும், இன்னும் எத்தனையோ விஷயங்களையும் சொல்லி மோசடி செய்து சுகமாக வாழ்வர்.



# ஏழாம் எண்காரர்

## பிறந்த திகதிகள் 7, 16, 25

### பொதுவான குணங்கள்

**பா**ர்த்த மாத்திரத்தில் இவர்களை கண்ணியமான மனிதர் என்று அறியலாம். சுத்தமான ஆடைகளையே எப்பொழுதும் அணிவர். அலங்காரப் பிரியரல்லவென்றாலும் நாசூக்காக உடையணிபவர்கள். வசீகரமான முக அமைப்பும், உயரமான தோற்றமும் உண்டு. கலகலப்பாகப் பழக மாட்டார்கள். வார்த்தைகளை மிகவும் நிதானித்தே உபயோகிப்பர். தன்னம்பிக்கை மிகுந்திருக்கும் போது வாயாடி போல் அதிகம் பேசுவர். குறைந்தாலோ ஊமையோ என்று நினைக்கும்படி மௌனம் சாதிப்பார்கள். இவர்களுக்கும் மற்றவர்களுக்கும் எப்பொழுதும் அபிப்பிராய பேதம் இருந்துகொண்டே இருக்கும். ஆகையால் இவர்களுக்கு உண்மையான சினேகிதர்கள் வாழ்க்கையில் அமைவது வெகு துர்லபம். இவர்களில் பெரும்பாலோர் முன் கோபக்காரர்கள். சட்டென ஆத்திரம் மீறும். சந்தோஷமான சூழ்நிலையில் இருந்தால் சகஜமாகப் பழகுவார்கள். இல்லாவிடில் சதா ஏகாந்தத்தை விரும்புவர். மனித சகவாசத்தை விட ஏகாந்தம் இவர்களுக்கு இனிக்கும். கஷ்டம் வந்தாலும் துக்கம் ஏற்பட்டாலும் பிறரிடம் சொல்லி ஆற்றிக்கொள்ள மாட்டார்கள். மனத்திற்குள்ளேயே புழுங்கிப் போவார்கள். அடிக்கடி ஏதோ பறி கொடுத்தவர்கள் போன்று காணப்படுவர். இவர்களை கலைகளைப் பொறுத்த வரையில் இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம். ஒரு சாரார் பிறவியிலிருந்தே தீவிர கலை நாட்டம் உடையவர்களாக இருந்து கலைகளையே வாழ்வின் லக்ஷியமாகக் கொள்வர். மற்றப் பிரிவினரோ கலைகளைப் பற்றி ஒன்றுமே அறியாதவராகி கலையைப் பொழுதை ணுக்கும் மதியீனமாகக் கருதுவர். சங்கீதம், கவி பாடுதல், ரசாயன ஆராய்ச்சி பிர

மிக்கத் தகுந்த முறையில் எழுதும் திறமை ஆகியவை இவர்களுக்குப் பிறவியிலேயே உள்ள சொத்தாகும். பிறந்த தேதி மாத்திரம் 7 எண்ணாக உடையவர்கள் தீவிர தேசப் பற்று உடையவர்களாக இருந்து பின்னர் மாறிவிடுவர். ஆனால் தேதி, மாதம், வருஷம் மூன்றையும் கூட்டி வருகிற எண் 7 ஆக வந்தாலும், பெயரின் எண் 7 ஆக வந்தாலும் திடீரென எல்லாவற்றையும் தியாகம் செய்து அரசியலில் குதிப்பர். 4 எண்ணிக்கைக்காரர்களைப் போன்றதே இவர்களது சுபாவமும், அவர்களைப் போலவே இவர்களும் பலமாக இருக்கும் கக்ஷியில் சேராமல் துணிவாக பலமில்லா எதிர்க்கக்ஷியில் சேர்ந்து அதைப் பலப்படுத்துவார்கள். இவர்கள் உற்சாகமெல்லாம் எதையோ எதிர்ப்பதில்தான் வலுவாக இருக்கும். எதிர்ப்பே இவர்களுக்கு உற்சாகமூட்டும். கஷ்டங்கள் இவர்களைத் தீவிரவாதிகளாக்கும். எதிர்ப்பென்பது இவர்களுடைய வாழ்க்கையில் ஒவ்வொரு துறையிலும் ஏற்படும். இவர்களுடைய நியாயமான வெற்றிகள் கூட பிறரை இவர்களிடம் அசூசை கொள்ளச் செய்யும்.

ஏழு எண்ணின் கீழ் பிறப்பவர்களில் ஆயிரத்தில் ஒருவருக்குக் கூட மனதிற்கிசைந்த மனைவியோ, கணவனோ வாய்ப்பதில்லை. அப்படிக்கின்றி வாய்த்தது போல் காணப்பட்டால் குழந்தைகள் பிறவாமலும், மற்ற பல விதங்களிலும் குடும்ப வாழ்க்கை பிரகாசமற்றதாகும். ஆனால் இவர்கள் அதிர்ஷ்டகரமானதும் ஒத்ததுமான பெயர் உடையவரானால் வாழ்க்கையின் பிற்பகுதியில் எல்லாக் குறைகளும் நீங்கி விடுகின்றன. பொதுவாக, இவர்களுக்கு சந்தோஷமான குடும்ப வாழ்க்கை அமைவது மிக துர்லபமே. இந்த எண்ணின் கீழ் பிறக்கும் சில பெண்மணிகளுக்கு அவர்களுக்கு மேற்பட்ட அந்தஸ்திலுள்ள கணவன் வாய்ப்பதுண்டு. (பொதுவாக 7 எண் பெண்களில் சிலர் நல்ல அழகாக இருப்பர். அனேகர் அங்க வளர்ச்சியற்று இருப்பர்). இவர்கள் எல்லோருமே நல்ல



உழைப்பாளிகள், வேலையில் மூழ்கிக் கிடப்பார்கள். சூழ்நிலை சரியாக இருந்தால் எவ்வளவு பெரிய காரியத்தையும் சாதிப்பார்கள்.

முக்கிய குறிப்பு:-

இவர்களுக்குச் சரீர பலத்தை விட பலமடங்கு மனோபலமே அதிகம். சிறிய கஷ்டம் வந்தாலும் அது மிகப் பெரியதாகி விடுமென கற்பனை செய்துகொண்டு வீணே கலங்குவார்கள். எதிர் காலத்தைப் பற்றிய கவலைகள் இருந்துகொண்டே இருக்கும். சூழ்நிலைகளால் சுலபமாகப் பாதிக்கப்படக் கூடிய இவர்கள், உற்சாக மூட்டக் கூடியவர்களால் சூழப்பட்டால் (பொதுஜன ஆதரவு இருந்தாலும்) துணிந்து மிகப் பெரிய காரியங்களிலும் ஈடுபட்டு வெற்றி காண்பர்.

சகஜமாக இவர்கள் பிறரைப் பின்பற்றவே மாட்டார்கள். எந்தத் தொழிலில் ஈடுபட்டாலும் சுதந்திர மனப்பான்மையையும். பிரத்தியேகமான கருத்துக்களையும் வெளியிடுவர். சுலபமாக இவர்களை மக்கள் பின் பற்றுவர்.

இவர்களது வாழ்க்கை இவர்களுக்கு ஒருவித காந்த சக்தி இருப்பதை நன்கு ஊர்ஜிதப்படுத்தும். இவர்களது வாழ்க்கை ஏனையோரை மிகவும் கவரும். கவர்ச்சி இருந்தும் இவர்களில் பெரும்பாலானோர் துரதிர்ஷ்டசாலிகளாகவே காணப்படுகின்றனர். இவர்கள் அதிர்ஷ்டசாலிகள் என்பதை மிகமிக நிச்சயமாகக் கூறலாம். பிறவியிலேயே அபூர்வமான சக்திகளை (மூளை அமைப்பை) உடைய இவர்களில் சிலர் சலியாத உழைப்பினால் மேன்மையடைகின்றனர். மஹான்களாகவும் மேதாவிகளாகவும் காணப்படுபவர் கூட அதிர்ஷ்டவசமாக மேன்மையடைந்தவர்களல்ல. உழைப்பினால் உயர்ந்தோரேயாவர். குழந்தைப் பருவத்திலேயே சங்கீத வித்வானாகவோ, சிறந்த நடிகராகவோ, அல்லது பெரிய மேதையாகவோ பிரகாசிக்கிறவர்கள் இந்த எண்ணின் ஆதிக்கரே.

இவர்களில் அநேகருக்கு கனவுகள் சகஜமாகப் பலிக்கும். பலருக்கு தெய்வீகமான காக்ஷிகள் ஏற்படுவதுண்டு. மனோவசிய சக்திகள் வளர்ந்த போதிலும் இவர்களில் அநேகர் விரும்பும் திரிகால ஞானமும், அதையொத்த ஸித்திகளும் இவர்களுக்கு ஏற்படுவதில்லை. காரணம் என்னவெனில் இவர்கள் முற்றுப் பெறாத இச்சைகளுடன் வாழ்க்கை வாழவே பிறந்தவர்கள். கடைசி வரை ஏதாவது குறை இருந்துகொண்டே இருக்கும். சாதாரண விஷயங்களில் கூட இவர்களது முயற்சிகள் முடிவை சமீபிக்கும் போது தட்டிப் போகும். (பிறந்த தேதி எண்கள் 7, 2 ஆக இருந்தால் பெருத்த முன்னேற்றத்தையும் 7, 5 ஆக இருந்தால் எதிர்பாராத பெரும் வெற்றிகளையும் கொடுக்கும். 7, 9 ஆக அமைந்தால் வாழ்க்கை மேன்மையாக முடியும். ஆத்மீக வெற்றி நிச்சயம். மற்ற எண்களானால் கூட்டு எண் குறிக்கிறபடியே முடிவு அமையும்).

பின் வாங்குகிற அம்சமும் இவர்களுக்கு உண்டு. பெரிய காரியத்தைச் செய்தவர் அந்தஸ்துக்கு ஒவ்வாத சிறிய காரியத்திலீடுபடுவர். உன்னத நிலையிலே வாழ்ந்தவர் பின்னர் சாமான்ய வாழ்க்கை வாழ்வர் (பெயரும் 7 எண் வந்தால் இப்படி நடப்பது நிச்சயம்).

வெற்றி: சுயநலமற்ற நியாயமான எக்காரியத்தில் (உலகுபகாரமாக) இவர்கள் ஈடுபட்டாலும் மகோன்னத வெற்றி கிட்டும். பெயர் அமரத் தன்மை அடையும். புகழ் எட்டு திசையும் பரவும். சரீர சுகத்தை தியாகம் செய்யச் செய்ய புகழும் வெற்றியும் அதிகரிக்கும். உலக அறிவு மிகும். இவர்களுடைய மேலான அபிலாஷைகளெல்லாம் சீக்கிரமே நிறைவேறும். களங்கமற்ற ஆவல்களெல்லாம் இனிதே முடிவு பெறும். குழந்தை மனம் பெற்றவரானால் எண்ணிய எண்ணங்களிலெல்லாம் வெற்றி பெறுவர்.



# எட்டாம் எண்காரர்

## பிறந்த திகதிகள் 8, 17, 26

### பொதுவான குணங்கள்

இவர்கள் அளவுக்கு மிஞ்சின மனோ சக்திகளும் தெளிந்த அறிவும் மிகக் கூர்மையான புத்தியும் உடையவர்கள். சதா யோசனைகளில் ஆழ்ந்திருப்பர். மிகப் பெரிய பிரச்சனைகளால் மனம் கவரப்படும். மனதில் உற்சாகம் இராது. எப்பொழுதும் எதையோ பறிகொடுத்தவர் போலவே காணப்படுவர் சுகங்களையும் மனதார அனுபவிக்கமாட்டார்கள். (இந்த ஆதிக்கரில் பெருத்த அயோக்கியர்கள் எப்பொழுதும் சிரித்த வண்ணமிருப்பதுண்டு). சுகங்களை எவ்வளவு அனுபவித்தாலும் இவர்களுக்கு அவைகளால் திருப்தி உண்டாகாது. இவர்களுக்கு தன்னம்பிக்கை மிகக் குறைவு. வாழ்க்கையில் வெற்றி ஏற்பட்ட பின்னர் தான் இவருக்குத் தைரிய முண்டாகும். பிறரையும் எளிதில் நம்பமாட்டார்கள். பிறருடன் பழகுவதில் மிக ஜாக்கிரதையாக இருப்பார்கள். மனம் சதா ஏகாந்தத்தையே விரும்பும். பகுத்தறிவு மிகுந்த இவர்கள் எதிலும் நிதானத்தையே கடைப்பிடிப்பார்கள். பணத்தைச் செலவழிப்பதில் கஞ்சத்தனம் வெளிப்படும். வாழ்க்கைக்கு உபயோகப்படக் கூடிய எல்லா சாஸ்திரங்களையும் நன்கு ஆராய விரும்புவர். எப்பொழுதும் தம்மை உலகிலேயே ஒரு தனி மனிதராகவே கருதியிருப்பார்கள். இது அவர்களது பேச்சிலும் நடத்தையிலும் நன்கு புலப்படும்.

இவர்களுக்கு மிகச் சில நண்பர்களே ஆயுட்காலத்தில் ஏற்படுவார்கள். அவர்களாலும் இவர்கட்கு நீடித்த நன்மை ஏற்படாது. பயங்கொள்ளியானதால் (2 ஆதிக்கருக்கு அடுத்த படி இவரே சந்தேகத்திலும் பயத்திலும்) வாழப் பயந்து தற்கொலை மூலம் சாவை அணைக்கவும் முடிவு செய்யக் கூடியவர்கள். தற்கொலைக்குக் கூட சிரமந்தராத விஷத்தை நாடுவர் ஆபத்து சூழ்ந்த போது.

விதி. இவர்களில் பலர் மிகச் சிறுவயதிலேயே ஆதரிக்க வேண்டிய தாய் தந்தையரை இழந்து கல்வி கற்கவும் சிரமப்படுகின்றனர். இளமைப் பருவம் இன்னல்கள் நிறைந்ததாக இருக்கும், மிக மிகச் சிரமப்பட்டே சிலர் வாழ்க்கையில் முன்னேறுகின்றனர். இவர்களுக்கு ஒவ்வொரு சிறு சுகமும், வெற்றியும் கூட பெருத்த போராட்டத்திற்குப் பின்னரே கிடைக்கும். இவர்களது யோக்கியதைக்குத் தகுந்த சமூக அந்தஸ்தை அடைய இவர்கள் பெரும் போராட்டம் நடத்தியே தீரவேண்டும். பலர் சிறுவயதிலேயே கர்ம ரோகங்களால் பீடிக்கப்படுவதுண்டு. இவர்களுக்கு வாழ்க்கையில் ஏதாவது இடையூறுகள் தோன்றிக் கொண்டே இருக்கும். 8-ஐக் குறிக்கிற வயதுகளான 8, 17, 26, 35, 44 வயதுகள் நடக்கும் போது மிக்க ஜாக்கிரதையாக இராவிடில் பெருத்த அபாயங்கள் நேரும் (பெயர் எண் 8 வருபவர்களுக்கும் 8-ஐக் குறிக்கும் வயதுகளில் முக்கிய சம்பவங்கள் நிகழும்.) இவர்களில் ஒரு சாரார் கஷ்டத்துடன் நீண்ட நாட்கள் வாழ்வர். மற்றொருசாரார் நன்கு வாழும் போதே திடீரென விபத்துக்குள்ளாகி மடிவர், (தினசரிப் பத்திரிகைகள் வாசிக்கும் நேயர்கள் மரம் விழுந்து மாண்டார், இடிவிழுந்து இறந்தார், கார் ஏறி காலமானார், தீக்கிரையானார் முதலிய செய்திகள் வரும் போது பெயர் வயது தேதியை கவனித்தால் இவ்வுண்மை புலப்படும்.) பிறர் புரியும் குற்றத்திற்குக் கூட இவர்கள் அடிக்கடி ஜவாப்தாரியாகக் கருதப்படுவதுண்டு. மிக்க நல்லவர்களாகவும், மேன்மையானவர்களாகவும் மேதாவியாகவும் இருந்தாலும் இவர்களை அருகில் இருப்போர் சரியாகப் புரிந்து கொள்வதில்லை. இவர்கள் ஒருநாளும் பிறர் உதவியை எதிர்பார்க்க வேண்டாம். சுய முயற்சியால் மேன்மையடைய வேண்டும்.

இவர்கள் மற்றவர்களை விட பகுத்தறிவு அதிகம் உடையவர்களாக இருப்பதால் இவர்களுக்கு மற்றவர்களுடன் சேர இயலாது. அதனாலேயே இவர்கள் தனி மனிதர்களாக



நண்பர்கள் அதிகமின்றி வாழ்கின்றனர். (1, 4, 8 எண்ணில் பிறந்தவர்கள் அருகிலிருந்தால் உடனே இவர்கள் அவர்களை மனமொத்த நண்பர்களாக்கிக் கொள்வர். இந்த 1, 4, 8 எண்களாலே மாத்திரம்தான் இவர்களுக்குச் சுக முண்டாகும். மற்ற எண்களில் பிறந்தோர் தொடர்பு பயனற்றதாகிவிடும்.

## ஒன்பதாம் எண்காரர்

### பிறந்த திகதிகள் 9, 18, 27

### பொதுவான குணங்கள்

இவர்கள் போராடவே பிறந்தவர்கள். வாழ்க்கை முழுவதிலும் ஒரே போராட்டமாக இருக்கும். இவர்களில் அறிவு மிகுந்தவர்கள் மனப்போராட்டத்தில்தான் ஈடுபடுவார்கள். அதாவது சாகஸம், தந்திரம், சூழ்ச்சி, கபட மொழிகள். சுருங்கக் கூறின் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் கலையில் நுண்ணிய அறிவில்லாத அடுத்தரக மனிதர் வாய்ச் சண்டையிலும் வாழ்நாளைக் கழிப்பர். கடைசிரக மனிதர் சண்டையையே தொழிலாகக் கொண்டு சைன்யத்தில் சேர்ந்து விடுவார். இவருக்கு சாதாரணமாக அடிபிடி சண்டைகளில் சுவாரஸ்யமிருக்காது. ரணகளங்களும், ஊர்கள் பற்றி எரியும் காட்சிகளுமே இவர்களது மனதைக் கவரும். இவர்களுக்கு சாந்தி சமாதானம் முதலியவைகளில் ஈடுபாடில்லை. பொதுவாக இவர்கள் எல்லோருக்குமே தேச் சேவை செய்யவேண்டுமென்கிற ஆர்வம் பூரணமாக இருக்கும். தேசத்திற்காக எதையும் தியாகம் செய்து போராடுவார்கள். இந்த ஆதிக்கரில் மிகக் குறுகிய நோக்கமுடையவர்கள் கூட தன் இனத்தவருக்கு நன்மை புரிவதில் நாட்டமுடையவராகக் காணப்படுவர். இவர்களுக்குத் தன்னிஷ்டப்படியேதான் காரியங்களை நடத்திச் செல்ல விருப்பமிருக்கும். யாராவது ஆட்சேபித்தால்

உடனே போர் மூளும். இவர்களிஷ்டப்படி செய்யமுடியாத
படி பிறர் தடுத்துவிட்டால் உடனே கையை உதறிவிட்டு
இக்காரியம் தூள்தூளாகச் சிதறட்டும் என விலகி விடு
வார்கள். இவ்வாதிக்கரில் அறிவுடையோர் எப்பொழுதும்
எதிரியின் பலத்தை ஆராய்ந்த வண்ணமிருப்பர். அதை
அனுசரித்தே நடந்துகொள்வதால்தான் இவர்கள் ராஜ
தந்திரிகளாகின்றனர். இவர்கள் சண்டையில் லாபமா,
சமர்தானத்தில் லாபமா என்பதை ஆராய்ந்து உசிதமான
தைச் செய்வார்கள். (அச்சமயங்களில்தான் இவர்களை
உலகத்தார் சமாதானப் பிரியர் என்றும், கோபமே வராத
சாந்தர் என்றும், பயங்கொள்ளி என்றும் நினைத்து ஏமாறு
கின்றனர்) ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்கு
மாங்கொக்கு என்பது போல் சந்தர்ப்பத்தையும் சூழ்நிலை
யையும் எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். சண்டையில்
நஷ்டம் என்றால் உடனே சமாதானப் பிரியராகக் காட்சி
யளிப்பார்கள். சமாதானம் செய்து கொள்ளும் போது
இவர்களுக்கே சாதகமான முறையில்தான் முடிப்பர்.
எண்ணின் பலம் குறைவானால் மேலே குறிப்பிட்ட குணங்
களிருக்காது. கோபம், அசூயை முதலியவை மிகுந்திருக்
கும். சண்டையிலே உயிரிழப்பர். முரட்டுத் தனத்தால்
கெடுதிகள் விளையும் ஆதிக்கம் நல்கைமந்தால் கூரிய
அறிவும் வளர்ந்து கொடுக்குந் தன்மையும் ஏற்பட; ஆதிக்
கம் கெட்டால் தீய குணங்களும், முரட்டுப் பிடிவாதமும்
காணப்படும். சிறிய காரியங்களுக்குக் கூட உயிரைப் பணய
மாக வைப்பார்கள். அறிவாளி எதிரியைக் கொல்லாமல்
கொல்லுவார். மற்றவரோ எதிரியைக் கொல்லவே கொல்
லுவார். இந்த ஆதிக்கரில் அறிவாளியை எப்படி அறிவ
தென வாசகர்கள் சிறிது திகைப்படையலாம். கவனிக்க:
இவர்களில் அறிவாளிகள் மற்றவர் பேசும்போது குறுக்கி
டாமல் கேட்டுக் கொண்டிருப்பார்கள். அவர்களை எதிர்த்
தாலும் பொறுமையுடன் எதிரியை ஆராய்ந்து கொண்டி
ருப்பர். மனதிற்குள் 'இவரை எப்படி வீழ்த்துவது' எனத்
திட்டமிட்டபடி இருப்பர். எவ்வளவு கேட்டாலும் மனதி



லுள்ளதை வெளியில் காட்டிக் கொள்ள மாட்டார்கள்.
சாமர்த்தியம்தான் காணப்படுமேயன்றி துடுக்குத் தனமி
ராது. ஆனால் இவர்களில் சாமான்யரோவெனில் சீக்கிரமே
அபிப்பிராயங்களை வெளியிட்டு விடுவார்கள். கோபதாபங்
களை வெளிக்குக் காட்டிக்கொண்டு விடுவார்கள். கூர்மை
யான அறிவுடைய இவர்கள் தீவிரமான ஆராய்ச்சிகளில்
ஈடுபடுவதுண்டு. இவர்களில் மிகச் சிறந்த தத்துவஞானி
களும், அறிஞர்களும் சகஜமாகக் காணப்படுவர். பிறந்த
தேதி எண்களில் ஒரு எண் 9 ஆக இருந்தால் அது மற்ற
எண்ணின் தன்மையைத் தீவிரப்படுத்தும். இரண்டு எண்
களும் 9 ஆகவே இருந்தால் பெயர் குறிக்கும் குணங்களைத்
தீவிரமாக்கும். இவர்களுக்குத் தளராத உறுதியும், போரா
டும் சக்தியும் இருப்பதுடன் வாழ்க்கைக்குத் தேவையான
பொருள்களைக் கண்டு பிடிப்பதிலும் ஆர்வமிருக்கும். இவர்
களுக்கு ரசாயனம், வைத்தியம் முதலிய சாஸ்திரங்களில்
மிகுந்த ஆர்வமும் தேர்ச்சியும் உண்டாகும். தெய்வீகமான
ரகஸ்யங்களையும் அறிந்து அதனால் உலகினருக்கு வழி காட்
டுபவர்களும் இவர்களே. இவர்களிடம் சில அபூர்வ சக்தி
கள் காணப்படும். இப்படிப் பட்டவர்கள் புகழை விரும்
பாமல் ஜனங்களிடமிருந்து ஒதுங்கியே வாழ்வார்கள்.

இனி இவ்வாதிக்கரின் வாழ்க்கையைக் கவனிப்போம்
இவர்களது வாழ்க்கை முன் கூறியபடி ஒரு ஓயாத போராட்
டமே. பல ஆபத்துக்கள் வந்து விலகும். நற்காரியங்கள்
செய்யும் போதெல்லாம் அவை நல்ல பலன்களையே
கொடுத்துக் கொடுத்து ஊக்கமளிக்கும் பரோபகாரமான
செயல்களில் ஈடுபடுவர். அனுபவசாலியெனப் புகழப்படு
வர். வஞ்சகர்களாலும், ஏமாற்றுகிறவர்களாலேயும் இவர்
கள் சூழப்படுகின்றனர். இந்த எண்ணைப் பற்றிக் கூறும்
போது பழைய நூல்கள் 'அறிவெனும் தீபம் தாங்கி
காலின்கீழ் இருக்கும் பாதையைக் கவனியாமல் ரத்தக்கறை
படிந்த பாதையில் தனியே போகும் அனுபவசாலி, எனக்
குறிக்கின்றனர். இவர்கள் சூழ்ச்சி நிறைந்தோருடன் வாழ
நேரும். இவர்கட்குப் புதுப்புது யுக்திகள் தோன்றும்.

நிதானத்தை இழக்காதிருந்தால் இவர்களே வெற்றியடைவர். இவர்களில் அநேகருக்கு ஆரம்ப வாழ்க்கை கஷ்டங்கள் நிறைந்ததாக இருக்கும். தோல்வியைக் கண்டு ஒரு நாளும் கலங்கமாட்டார்கள். எவ்வளவு கஷ்டம் வரினும் தாங்கிக் கொள்ளும் சக்தி உண்டு.

எண்ணின் ஆதிக்கம் குறைவானுல் பலஹீனராயும், மற்றவர்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பவராயும் ஆகிவிடுவார். ஆதிக்கம் நன்கு இருந்தால் எப்பொழுதும் மனதில் உற்சாகமிருக்கும். சினிமாக் கொட்டகை முதலிய இடங்களில் எல்லோரையும் தள்ளிக்கொண்டு போய் முண்டியடித்து டிக்கட்டு வாங்குகிறவர்கள் இவர்களே. சிரித்த முகத்துடனேயே காணப்படுவர். பிறருக்கு ஊக்கம் கொள்ளும் படி தைரியம் சொல்லுவார்கள். பணம் சம்பாதிப்பது இவ்வளவு சாமர்த்தியமுடையவர்களுக்கு ஒரு பிரமாத காரியமா? மனதுக்குப் பிடித்த வழிகளில் தாராளமாகச் செலவும் செய்வார்கள். நல்லோர்களிடம் மரியாதையுடன் நடந்து அவர்களது நன்மதிப்புக்குப் பாத்திரராக நடந்து கொள்வார்கள். மனமொத்த நண்பர்களுக்காக எந்த உதவியையும் செய்வார்கள். மனதுக்குப் பிடித்த வகைகளிலெல்லாம் யோசனையின்றிப் பொருளைச் செலவழிப்பார்கள். இவர்களில் தீயோரும் உண்டு. அவர்கள் தீராத ஸ்திரீமோகம் உடையவர்களாயும், லாகிரி வஸ்துக்களை அருந்துபவர்களாயும் பிறரை இம்சிப்பதில் ஆனந்தம் அடைபவர்களாயும் காணப்படுவர். இவர்களுக்கு மிருக சுபாவங்களே மனதில் குடிகொண்டிருக்கும். தன் சுகமே பெரிதெனக் கருதுவர். ஆனுலும் இவர்களுக்கு ஒரு விசேஷ குணமுண்டு. அதாவது பெரியோர்கள் யாராவது இவரைக் கருணையுடன் நோக்கினுல், உணர்ச்சி வசப்பட்டு இவர் உடனே அவர்களைப் பணிந்து நல்லவராகி விடுவர். இவர்களுக்கு அபூர்வமான கனவுகள் மூலம் திருவருள் வளரும். இவர்கள் மனதை யுத்தம் செய்த கடவுள் அம்சங்களே கவரும். இராமர், காளி, சுப்ரமணியர், அனுமார் முதலிய மூர்த்திகளையே உள்ளன்புடன் வழிபடுவர்.

# பெயர் எண்ணின் பலாப்லன்கள்

## ஒன்று — எழுத்து

உங்கள் பெயரின் எண்களைக் கூட்டி வரும் தொகை ஒன்று என்று வருமானுல் உங்களுக்கு இந்த எண்ணின் ஆதிக்கம் உண்டாகும். நாளாக ஆக இந்த எண்ணின் குணங்கள் படிய ஆரம்பிக்கும். *1* எண் வரும் பெயர் எண்ணிக்கைகளின் பலன்களை கவனிக்க.

### 10

இவ்வெண் உடையவர் கண்ணியமும், கீர்த்தியும் உடைய மனிதராவர். வாழ்க்கையில் நிதானமும், தன்னம்பிக்கையும் இருக்கும். வாழ்க்கையில் அதிர்ஷ்ட மாறுதல்கள் அடிக்கடி ஏற்படும். ஒன்று பூஜ்யத்துடன் சேர்வதால் சகடயோகம் ஏற்படுகிறது. சக்கரம் சுழல்வதைப் போல மேலிருந்து கீழாகவும், கீழிருந்து மேலாகவும் அடிக்கடி போவார். சுலபமாக பிரசித்தி அடைவார்கள். இவர்கள் செய்யும் எல்லாக் காரியங்களுமே பிரசித்தி அடையக் கூடியவைகளாதலால் நடவடிக்கைகள் நேர்மையாக இருக்க வேண்டியது அவசியம். மனமகிழ்வான வாழ்க்கை உண்டு. பணத்தட்டுப்பாடு ஏற்படாது.

### 19

இவ்வெண் உதயசூரியனைக் குறிப்பதால் அஸ்தமனம் இல்லை. பொழுது ஏற ஏற அதிகப்படும் சூரியவெளிச்சம் போல இவர்களது வாழ்க்கையும் மேன்மை அடைந்து கொண்டே போகும். பதவி, கௌரவம், சந்தோஷம், வெற்றி, செல்வம் எல்லாம் அதிகரித்துக் கொண்டே போகும். ஒரு திட்டத்திற்கு கட்டுப்பட்டு நடக்கும் இவர்கள்

நல்ல வாழ்க்கைத் துணைவரை அடைவர் என்றும் சக்தி இவர்களைப் பிரியாது. வயோதிப காலத்திலும் இளைஞர் போல் சுறுசுறுப்புடன் திடசாலியாகக் காணப்படுவர். கடைசிவரை வாலிபராகவே இருப்பர். சுகானுபவங்களில் நேர்மையே இவர்களுக்கு வெற்றியளிக்கும்.

## 28

வாழ்க்கையின் ஆரம்பத்தில் முன்னேற்றத்தையும் சுகத்தையும் தரும் இவ்வெண் நேர்மாறான தன்மைகளையுடையது. எக்காரியத்தில் ஈடுபடினும் போட்டியையும் சிரமங்களையும் உண்டாக்கும். வாழ்க்கையைத் திரும்பத் திரும்ப தொடங்க நேரும். மிக வேகமாக முன்னேற்றமடைவார்கள் கடைசியில் எல்லாவற்றையும் இழக்க நேரிடும். நண்பர்களாலும் உறவினர்களாலும் எதிர்பாராத நட்டங்கள் வரும். கடன் கொடுத்தால் பணம் திரும்பி வருவது அபூர்வம். கஷ்டப்பட்டு சேமித்த பொருட்களையெல்லாம் எதிர்பாராத வகையில் இழக்க நேரும்.

## 37

சாதாரண நிலையில் உள்ளவரையும் மகோன்னதமான நிலைக்கு வேகமாகத் தள்ளிக்கொண்டு போகும். மிகுந்த வசீகரமளிக்கும். காதலில் வெற்றியைத் தரும். தன் அந்தஸ்துக்கு மேம்பட்டவர்களால் விரும்பப்படுவர். ஆண், பெண் இருபாலாரிலும் விசேடமான நண்பர்கள் ஏற்படுவார்கள். ஆணானால் பெண்களாலும், பெண்ணானால் ஆண்களாலும் பெருத்த உபகாரங்கள் கிட்டும். நண்பர்களால் வாழ்க்கை முன்னேற்றமடையும். வியாபாரத்திற்கு எதிர்பாராமலே அதிர்ஷ்டகரமான கூட்டாளிகள் முதலுடன் வந்து சேர்வார்கள். பலவித முயற்சிகளாலும் பொருள் சேரும். கலைகளில் ஈடுபடும் ஆர்வமும் உண்டாகும். சுகம் நிறைந்த வசதியான வாழ்க்கை அமையும். கவர்ச்சியான நடை, உடை பாவனைகளும் வாக்குச் சாதுர்யமும் உண்டாகும். எதிர்



பாரா**த** வெற்றிகளைக் கொடுக்கும். மிக உன்னதமான நிலையில் உள்ளவர்களை வீண் விவகாரங்களில் ஈடுபடுத்தி வீழ்த்திவிடும். மனிதர் உன்னதமான நிலையடைந்த பின்னர் அத்துடன் திருப்தியடைய வேண்டும். பேராசைதான் இவ்வெண்ணின் பலனைக் குறைக்கக்கூடிய குணமாகும். நன்மைகள் தானே விளையும்.

## 46

எத்தொழில் புரியினும் அத்தொழிலின் சிகரத்தை அடைய உதவும் இவ்வெண் சாதாரண குடும்பத்தில் பிறந்தவர்களையும் அரசாளும் பதவிக்கு உயர்த்தக்கூடியது. வயது ஏற ஏற செல்வமும், அந்தஸ்த்தும் அதிகரிக்கும். இந்த எண் உடையோர் நேர்மையான நடவடிக்கை உடையோராக இருக்கவேண்டியது அவசியம்.

## 55

இந்த எண் எதிரிகளை வெல்வதாக நமது மந்திர நூல்கள் கூறுகின்றன. இது மனோபலத்தையும், சூஷ்ம அறிவையும் குறிக்கும். இதனால் குறிக்கப் பெறுவோர், எல்லோரையும் தம் அறிவினால் பிரமிக்கச் செய்து வெற்றி கொள்ளுவர். அறிஞர் என்று ஒப்புக்கொள்ளப்படுவர் மேதாவிலாசம் உண்டாகும். அறிவு மின்னல் போன்ற ஒளி வீசும். சரியான வழியில் உபயோகியா விட்டால் அதிகமூளை இவர்களையே கெடுத்துவிடக்கூடும். அகண்டாகார அறிவும் உண்டாகும்.

## 64

இந்த எண் நண்பர்களையும் எதிரிகளையும் சம அளவில் உண்டுபண்ணக்கூடியது. வாழ்க்கையில் எதிர்ப்பு இருக்கும். மிதமிஞ்சின மனோவலிமையையும், சாமர்த்தியத்தையும் அறிவையும் இவ்வெண் தரும். செயற்கரிய செயல்கள் புரியச்செய்து கீர்த்தியை உண்டாக்கும். அரசாங்கத்தில்

பெரும் பதவியையும் தரும். சிலசமயங்களில் யாவரும் பிரமித்து வணங்கும்படியான பதவியையும் உண்டுபண்ணும். வலிமைமிக்க வாக்கு உண்டாகும்.

## 73

இது மனோசக்திகளைப் பலப்படுத்துகிறது. இவ்வெண்ணால் குறிக்கப்பெறுவோருக்கு படிப்படியாக புகழும், செல்வமும் பெருகும், அதிகாரமும் ஏறும். சுகவாழ்க்கையே குறிக்கோளாக இருக்கும். பிறர் அறியாமல் காரியங்களைச் சாதித்துக் கொள்வதில் சமர்த்தராவர். அரசாங்க ஆதரவுண்டு. பொருள் சேரும். நேர்மையாக இராவிடில் புகழ் மாறிவிடும்.

## 91

வைராக்கியத்தையும் அதிக சஞ்சாரத்தையும் குறிக்கிறது. அனேக யாத்திரைகள் செய்வார்கள். தீவிரமான தன்மை உண்டாகும். நீர்க்கப்பல்கள் மூலமாகச் செய்யும் வியாபாரங்களால் பெரும் செல்வம் சேரும். சுகவாழ்க்கை அமையும்.

## 100

முயற்சிகளில் வெற்றியைத் தரும். பணம் நிறைய இருக்கும். விசேட சம்பவங்களற்ற நீண்ட சுகவாழ்க்கை உண்டாகும்.

---



# இரண்டு – எழுத்து

உங்கள் பெயரின் எண்களைக் கூட்டி வரும் தொகை இரண்டு என்று வருமானால் உங்களுக்கு இந்த எண்ணின் ஆதிக்கம் உண்டாகும். நாளாக ஆக இந்த எண்ணின் குணங்கள் படிய ஆரம்பிக்கும். 2 எண்வரும் பெயர் எண்ணிக்கைகளின் பலன்களை கவனிக்க.

## 11

பெயரில் 11-ஐ எண்ணாக உடையோர் தெய்வ நம்பிக்கையால் வாழ்க்கையில் முன்னேறுவர். பலவித லாபங்களையும் சுலபமாக அடைவார்கள். இவர்களது நம்பிக்கையைச் சோதிப்பது போல திடீர் திடீரென எதிர்பாராத ஆபத்துக்கள் வரும். வீண் விவகாரங்களும், நண்பர்களாலும் உறவினர்களாலும் ஏமாற்றப்படுதலும் சில சமயங்களில் உண்டு. நம்பினால் உயர்வு நிச்சயம். நம்பாவிடில் ஆபத்து நிச்சயம்.

## 20

இது முரசொலியைக் குறிக்கும் ஆத்மீக எண். சமாதான முரசானால் இவ்வெண் உடையவர் உலகினர் துயரங்களையும் கஷ்டங்களையும் நீக்கி விடுதலையளிப்பதை குறிக்கும். உலக முழுதும் இவர்களிடம் வசமாகிக் கிடக்கும். தன்னலத்திற்காக ஒலிக்கும் போது யுத்த முரசாகும். உலகினரை நாசப்படுத்திவிடும். விஷம் தீண்டப்படுதலையும் குறிக்கிறது. இந்த எண் உடையவர்களுக்கு விஷ வைத்தியம் பலிதமாகும். கூவியழைக்கிற இவ்வெண் தூக்கத்திலிருக்கும் மனிதவர்க்கத்தைப் பெரிய காரியங்களுக்குத் தூண்டக்கூடியது. இவ்வெண்ணுடையவர் தன்னலம் கொண்டு செயல் புரியின் தாமதமும் தோல்வியுமே மிஞ்சும். (இவ்வெண்ணுக்கு Hitler 20-ந் தேதி பிறந்தவர் நல்ல உதாரணமாவர். ஜேர்மனியரைத் தூண்டிவிட்டு தேசத்தை நாசமாக்கினர்.)

## 29

இந்த எண்ணிக்கை உடையவர் அடிக்கடி நீதி ஸ்தலத்தில் நியாயாதிபதி முன்பு நிற்க நேரும். குடும்ப வாழ்க்கையில் பலவிதமான சிக்கல்கள் தோன்றியவண்ணமிருக்கும். நண்பர்களும் உறவினர்களும் விசுவாசமில்லாதவராகி விடுவர். இவர்களை நேற்றுப் போற்றியவர் இன்று தூற்றுவர். புருஷர்களானுல் ஸ்திரீகளாலும், ஸ்திரீகளானுல் புருஷர்களாலும் தீராத கஷ்டத்திற்கு உள்ளாவார்கள். சம்சாரம் சர்க்கசைப் போல நடக்கும்.

## 38

இந்த எண்ணினுல் குறிக்கப்படுவோர் சாந்தமான குணமுள்ளவராகவும் நேர்மையை விரும்புபவராகவுமிருப்பர். பெயராக வந்தாலும் வியாபார விலாசமாக வந்தாலும் இந்த எண் பிரபுக்களின் ஆதரவைக் குறிக்கும். சர்மான்யராக ஆரம்பத்தில் இருந்தாலும் படிப்படியாக புகழும் செல்வமும் அதிகரிக்கும். ஆனுல் எதிர்பாராத ஆபத்துக்களும் வஞ்சகமான மனிதர்களால் கஷ்டங்களுக்கு உள்ளாவதும் ஒவ்வொரு சமயங்களில் நேரும், வாழ்க்கை முடிவும் எதிர்பாராத வகையில் திடுக்கிடும் சம்பவமாகவே இருக்கும்.

## 47

மிக வேகமாக வாழ்க்கையில் முன்னேறுவோர்களை இந்த எண்ணின் ஆதிக்கத்தில் காணலாம். தன் முன்னேற்றத்திலேயே கண்ணுயிருந்து காரியத்தைச் சாதித்துக் கொள்வர். பணம் சம்பந்தப்பட்ட வரையில் அதிர்ஷ்ட சாலிகள் என்றே கூறலாம். இந்த எண்ணிக்கை உள்ள அனேகர் கண்பார்வையை இழக்கின்றனர். சிகிச்சைகள் பலனளிக்காமல் மிக்க அவதியுறுகின்றனர். இவர்கள் பிற ஜீவன்களைக் கொல்லாமலும் (வேட்டையாடும் பழக்கம் உள்ளவர்கள்) மாமிச ஆகாரங்கள் புசியாமலும் இருப்பது நலம்.



## 56

இது அற்புதம் நிறைந்தது. சாதாரணமாக புகழையும் லஷ்மி கடாக்ஷத்தையும் அளிப்பதாகக் கூறினுலும் ஜால வித்தைகளில் பயன்படும் எண்ணிக்கையேயாகும். எல்லாவிதமான பந்தங்களிலிருந்தும் விடுவிக்கக் கூடியது, பூட்டுக்கள் திறந்து கொள்ளும். பூட்டப்பட்ட விலங்குகளும் தெறித்துப்போய் விடும். (நேயர்கள் பலர் சர்க்கஸ்களில் இந்த வித்தைகளைப் பார்த்திருக்கலாம்.) இது ஆபத்தான விஷயமாதலால் இதைப்பற்றி விவரிக்கவில்லை முன் கூறிய எண்ணிக்கைகளில் ஒன்றுன 29 சரீர மன சம்பந்தமான சக்திகளையும் அப்பியாசங்களையும் குறிக்கும். ஆனுல் இது மனத்திற்கு மாயாஜால சக்தியைத் தருகிறது), மாயம் போல் செல்வமும் சிறப்பும் மறைந்து போகும்.

## 65

இது தெய்வாம்சத்தையும் ஆத்மீக வாழ்வின் முன்னேற்றத்தையும் குறிக்கிறது. செல்வாக்குள்ளவர்களின் ஒத்தாசையும் பூரண ஆதரவும் உண்டாகும். சந்தோஷகரமான திருமணமும் உண்டு. சில ஆபத்துக்களும், வெட்டுக்காயங்களும் ஏற்படும்.

## 74

இவர்களுக்குத் தீவிர மதப்பற்றும் சீர்திருத்த நோக்கங்களும் இருக்கும். பண முடை இருந்துகொண்டே இருக்கும். கொள்கைகளைப் பரப்புவர். அவ்வளவாக விரும்பத்தக்க எண்ணிக்கை அல்ல. ஆத்மார்த்த வாழ்வுக்கு நன்மை தரும், சதா வருந்திக்கொண்டே இருப்பார்கள்.

## 83

இந்த எண் மிக மேன்மையான பதவியைத்தரும். எல்லோரும் வணங்கும்படியான அந்தஸ்து ஏற்படும். ராஜ போகமான வாழ்க்கையும் எல்லோரையும் வெற்றி கொள் ளுதலும் மிகச் சுலபமாக ஏற்படும், இதனுல் குறிக்கப் படுவோர் வெற்றி வீரராய் விளங்குவர்.

## 92

பொன் பொருள், பூமி லாபங்களும் யோகசித்தியும் இதனுல் குறிக்கப்படுகின்றன. மூச்சை உள்ளே இழுத் தலையும், வெளியே விடுதலையும் (காற்றின் நடை) கூர்ந்து கவனித்துப் பழகினுல் இந்த எண் உடையவருக்கு ஆகா யத்தில் சஞ்சரிக்கும் சக்தி உண்டாகும். (கேசரியின் இர கசியங்கள் தெளிவாகப் புரியும்).

## 101

இந்தப் பெயருக்கு சொந்த முயற்சியை விட அர சாங்கத்தின் உதவி அதிகம் இருக்கும். தொழில் மந்தம் அடிக்கடி நேரும். இதை மிக சிலாக்யமாகக் கூறுவதற் கில்லை.



# மூன்று வரும் எண்களின் பலன்கள்

## 3

உழைப்பையும், புத்திசாலித்தனத்தையும், வெற்றியை யையும் குறிக்கிறது. சந்தோஷமான வாழ்க்கையும் படிப்படியான முன்னேற்றமும் உண்டு. கல்வி மிகும்.

## 12

கேட்பவர் பிரமிக்கும் படியான பேச்சு இருக்கும். பிற ருக்காக பல கஷ்டங்களையும் சந்தோஷத்துடன் ஏற்பர். பிறர் பிரயோஜனம் அடையவே உழைப்பர்.

## 21

தன் சந்தோஷத்திலும், லாபத்திலுமே, கண்ணுங் கருத்துமாயிருப்பார்கள். வெகு பிரயாசையுடன் படிப்படி யாக வாழ்க்கையின் உச்சஸ்தானத்தை அடைந்து விடு வர். ஊக்கம் உயர்வளிக்கும். சாமர்த்தியத்தால் எதையும் சமாளிப்பார்கள். வாழ்க்கையின் முன்பகுதி சோதனைகள் நிறைந்ததாக இருக்கும். பின்பாதி வெற்றியும் சந்தோஷ மும் நிறைந்ததாக இருக்கும். நிரந்தரமான பதவி ஏற் படும்.

## 30

சிந்தனை உலகிலேயே திளைப்பவராவார். நுண்ணிய அறிவும் தீர்க்கமான யோசனையும் இருக்கும். இஷ்டம் போல் காரியங்களைச் செய்வார்கள் லாபமில்லாவிடினும் தம் திருப்திக்காகவே கஷ்டமான காரியங்களையும் சாதிப் பார். மிக சக்திமான். திரவிய சம்பாதனையில் ஊக்கமிராது. மனதை சுலபமாக அறிந்து வெற்றி கொள்ளலாம். இவர் கட்கு மனக்கட்டுப்பாட்டால் வரக்கூடியவைகளான சித்தி கள் சுலபமாக வரும்.

## 39

தீவிர உழைப்பாளிகளான இவர்கள் மேன்மையான நிலைமை அடைந்த போதிலும் இவர்கள் அடைய வேண்டிய புகழை மற்றவர்கள் கொண்டுபோய் விடுவார்கள். பிறருக்காகவே உழைத்துக்கொண்டிருப்பார்கள். மற்றவர்களைவிட (மற்ற மூன்று எண்ணிக்கைக்காரர்களை விட) ஆரோக்கியம் குறைவாய் இருக்கும். சுலபமாக சரும வியாதிகள் பற்றிக் கொள்ளும்.

## 48

மத விஷயங்களில் அதிக சிரத்தை ஏற்படும். பொதுக் காரியங்களில் விசேஷ எதிர்ப்பு இருக்கும். பொது நலத்துக்கான அநேகக் காரியங்களைச் சாதிப்பர். சோதனை அதிகம் ஏற்படும். சக்திக்கு மிஞ்சிய காரியங்களில் இறங்குவார்கள். விதி சதா சதி செய்யும்.

## 57

ஆரம்பத்தில் வெற்றியை அளிக்கும் இவ்வெண் முடிவில் அசிரத்தையும் பின் வாங்குதலையும் குறிக்கிறது. வேகமாக முன்னேறிய வாழ்க்கை சட்டென அப்படியே நின்றுவிடும். சாமான்யர் பிரமுகராகிப் பின்னர் சாமான்யராகி விடுவர்.

## 66

பிரமிக்கத்தக்க பிரசங்கசக்தியையும், கலைகளில் தேர்ச்சியையும், அரசாங்க ஆதரவையும், சுகபோக வாழ்க்கையையும் இவ்வெண் குறிக்கிறது.

## 75

திடீரெனப் புகழ் ஏற்படும். வெகு சீக்கிரத்தில் அனேக நண்பர்களை அடைவர். எதிர்பாராதபடி பிரமுகராவார். புகழும், சுகமும் தேடி வந்தடையும். கவிதா சக்தி தோன்றும். நூலாசிரியர் ஆவார்.



## 84

ஆரம்ப வாழ்க்கை துயரமானதாக இருக்கும். பிரயாணத்தால் நன்மை உண்டாகும். வீண் விரோதங்கள் உண்டாகும். கவலை அதிகம் ஏற்படும். முயற்சிக்குத் தகுந்த பலன் இராது. ஆன்மீகத்துறையில் சிறிது முன்னேற்றம் ஏற்படும். ஊக்கம் குறையும். தீவிரவாதியாவார். பிறந்த தேதி எண்கள் நன்றாக இருந்தால் செயற்கரிய காரியங்களைச் செய்வர்.

## 93

அற்புதமான காரியங்களை சாதிக்கும் வல்லமை மிகும். உலக அறிவு மிகும். ஆசைகள் நிறைவேறும். காவிய நாடகங்களை இயற்றிப் புகழ் அடைவர். கலை ஞானம் ஏற்படும். கௌரவம் மிகும். பல தொழில்களிலும் லாபமுண்டு.

## 102

ஆரம்பத்தில் வெற்றியையும் நடுவில் சோர்வையும் முடிவில் சிறிது குழப்பத்தையும் இது குறிக்கும். அவ்வளவு சிலாக்கியமானதல்ல.

---

# எழுத்து — நான்கு

பெயரில் உள்ள எழுத்துக்களின் எண்ணிக்கைகளைக் கூட்டிக் கண்ட தொகை நான்கானால் அப்பெயர் நான்கின் ஆதிக்கத்திற்கு உட்பட்டதாகும். தனித் தனியாக 4 வரக்கூடிய பெயர் எண்ணிக்கையின் பலன்களைக் கீழே காண்க.

# 4

சிறு பெயராக 4 வரும்படியாக இருந்தால் அது வியாபகமான மனிதரையோ பொருளையோ குறிப்பதாகும். புகழுக்கேற்ற அதிஷ்டம் இருக்காது வீண் பயங்கள் இருந்து கொண்டே இருக்கும். நோயும், எதிர்ப்பும் இருக்கும். எல்லாம் தெரிந்தவராக இருந்தும் பிறர் சொல்லுக்கு அடங்கியே வாழ நேரும்.

# 13

மேல் நாட்டினர் இப்பதின்மூன்று எண்ணைக் கண்டு மிகவும் அஞ்சுகின்றனர். (ஹோட்டல்களிலும் 13-ம் நம்பர் அறைக்கு ஒருவரும் வரமாட்டார்கள். பிரசித்தமான விடுதிகளில் இவ்வெண் கொண்ட அறை காணப்படுவதே இல்லை). இப் பெயரின் பலனை அறிய இதிகாச புருஷனும் தெய்வமுமான இராமனே சரியான உதாரணமாகும். தான் விரும்பாவிடினும் வாழ்க்கையில் பலரை தண்டிக்க நேரும். எதிர்பாராத சம்பவங்கள் (துயரமளிப்பவை) அடிக்கடி நிகழும். ஸ்திரீகளால் கவலையும், கஷ்டமும் ஏற்படும். மேலான அந்தஸ்துக்கு வாழ்க்கை உயர்ந்தாலும் சதா கவலையும் சஞ்சலமும் உள்ளதாக இருக்கும் இது விரும்பத்தக்க எண்ணல்ல.

# 22

இருபத்தி ரண்டாம் தேதி பிறந்தோருக்குக் கூறியிருக்கும் பலன்களையே இப் பெயருக்கும் கொள்ளவும். இது உணர்ச்சிகளை அதிகம் தூண்டிவிடும். பந்தயங்கள். போட்டிகள், குடி. போகங்கள் இவைகள் ஏதாவதொன்றிலோ, எல்லாவற்றிலுமோ மனம் தீவிர நாட்டம் கொள்ளும். சூதாட்டங்களில் துணிந்து இறங்கி விடுவார்கள். பொருளையெல்லாம் இழக்கக் கூடிய சந்தர்ப்பங்களை நோக்கி விரைவர். துர்மந்திரிகளால் சூழப்பட்டும் காணப்



படுவதுண்டு. (ஆனால் இவர்கள் பிறர் சொற்படி நடப்பவர்களல்லர்). பிறந்த தேதி எண்கள் நன்றாக இருந்தால் வெற்றி கிட்டும். இல்லையேல் முழுத்தோல்வி அடையாமல் சமாளித்துக் கொள்வர். சுயநலக்காரர்கள் இவர்களை சதா தூண்டிக் கொண்டிருப்பர். சிறந்த நிர்வாகிகளாகையால் உயர்ந்த முறையில் தொழிலமைப்பார்கள். எந்தக் கஷ்டம் வரினும் கலங்காமல் சமாளித்துக் கொள்வார்கள். அபகீர்த்தியும் ஏற்படுவது சகஜமே.

# 31

இவர்களுக்கு லாபம் நஷ்டம் என்பதில்லை. சுதந்திரமே லக்ஷ்யமாக இருக்கும். என்ன நன்மை வருவதானாலும் மனதிற்குப் பிரியமில்லாத காரியத்தில் ஈடுபடமாட்டார்கள். மனோவசியம், ஜோதிடம் வேதாந்தம் முதலிய சாஸ்திரங்களில் ஈடுபாடு உண்டாகும் வேதாந்தியைப் போல எதையும் லக்ஷ்யம் பண்ணாமல் வாழ்வர். காரிய சித்தியைத் தந்தபோதிலும் இவர்களுக்கு வெற்றி மகிழ்ச்சி தருவதில்லை. வெற்றி கிட்டின போதும் அதனால் பயனடையாமல் விட்டு விடுவார்கள் 3[illegible]வது வயதில் எல்லாவற்றையும் துறக்க அல்லது இழக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படும். பின்னர் 37 வயதளவில் தான் மீண்டும் பழைய நிலையை அடைவர். எதிர்பாராத நிகழ்ச்சிகள் வாழ்க்கையைப் பாதிக்கும். முடிவும் மிக்க எதிர்பாராத விதமாகவே திடீரென வரும். (ஆனாலும் இவர்கள் தன் முடிவை சூசகமாக உணர்வார்கள்) பிறந்த தேதி 1 எண்ணிக்கையுடையதாக இருந்தால் மாத்திரம் பெரும் பதவிகள் கிட்டும்.

# 40

எதிர்பாராத நண்பர்களையும், அதனால் பெரிய அந்தஸ்தையும் அதிகார உத்தியோகத்தையும் இவ்வெண் அளிக்க வல்லது. புகழும் பட்டங்களும் உண்டு. விசேஷ ஆபரண சேர்க்கையும், சொத்துக்களும் ஏற்படும். ஆனாலும் இவர்

களதுதீய குணங்களை எல்லோருக்கும் நன்கு புலப்படும் துணிந்து எக்காரியத்தையும் சாதிக்க வல்லவர்கள். வாழ்க்கையும் முடிவில் பிரயோசனமற்றதாகிவிடும். சமூகம் தன் சேவைகளை உணரவில்லை எனக் கூறுவர்.

## 49

இவ்வெண் பெயராக வந்தால் வாழ்க்கையில் செல்வம், நீர் வீழ்ச்சி போல் வரும். பிரமிக்கத் தகுந்த காரியங்களைச் செய்யலாம். புயல் போல் வேகத்துடன் புகழ் பரவும். வாழ்க்கை சம்பவங்கள் நிறைந்ததாக இருக்கும். பிரயாணங்கள் ஏராளமாக ஏற்படும். பல அபூர்வ அனுபவங்கள் ஏற்படும். நிலையான சொத்துக்கள் கிடைக்கும் திடீரென. அதிர்ஷ்டமடிக்கும். விபத்துக்களும் அப்படியே எதிர்பாராத படி வரும். பிறந்த தேதி எண்கள் நன்றாக இருந்தால் அதிர்ஷ்டகரமானதாக இருக்கும். அப்படி இல்லாவிடில் இப்பெயர் உடையவர் பிறரால் வெறுக்கப்பட்டு கோரமான முடிவை அடைவர். கற்பனையைத் தாண்டிவிடும்.

## 58

இவ்வெண் மிக்க பிரசித்தியையும் வசீகரத்தையும் தரும். காரிய சித்தி ஏற்படும். வாழ்க்கை வேகமாக முன்னேறும். ஆசாரசீலராகவும், மதாபிமான முள்ளவராகவும் ஆவர். சீர்திருத்த நோக்கங்கள் மிகும். பிறந்த தேதி எண்கள் 4 அல்லது 8 ஆக இருந்தால் புகழுடன் பொறுப்பு வாய்ந்த பெரிய பதவிகளை வகிப்பர். விரும்பத்தகாத காரியங்களைச் செய்ய நேரும். மனதில் ஏதாவது பயமிருக்கும். அதிர்ஷ்டகரமானதாகவே தோன்றும். வேறு எண்களில் பிறந்தவர்கள் இவ்வெண் குறிக்கும் பெயர் கொண்டால் மேல் நோக்கிச் சென்ற வாழ்க்கை படிப்படியாக இறங்கி விடும் பிரபலம் குறைந்து போம் சுயநலம் மிக்க வாழ்க்கை வாழ்வர், பல கஷ்டங்களையும் அனுபவிக்க நேரும்.



## 67

இவ்வெண்ணால் குறிக்கப்படுவோர் சிறந்த கலைஞராகவும் சலியாத உழைப்பாளியாகவும் இருப்பர். மிக்க மேலான நிலையில் உள்ளவர்களது ஆதரவு கிட்டும். உயர்ந்த கற்பனைகளை வெளியிடுவர். ஸ்திரீ பிரமை ஏற்படாமல் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும், அன்பும் தூய்மையும் இவர்களை மேலோராக்கும். அருளும் எளிதில் கிட்டும். சுயநலமான காரியங்களை முயற்சித்தால் சரியாக முடியாது. மிக்க வசீகரத்தைத் தரும் இவ்வெண் கலைஞரல்லாதாருக்குப் பயனளிக்காது.

## 76

இவ்வெண் பெயரில் உடையவர் திடீரென எல்லாப் பொருளையும் இழக்க நேரும். பிரபலமான சூழ்நிலையில் வாழ்வர். பரோபகாரமான பொதுக் காரியங்களில் வெற்றி ஏற்படும். அதிசயப்படும் படியான புது முறைகளில் செல்வம் சம்பாதிப்பார்கள். அருள் உண்டாகும். அருளைப் பொருளாக்கி விடுவார்கள். பின் வயதில் என்ன செய்வதென்று தெரியாமல் உண்டு உறங்கி வாழ் நாளைக் கழிப்பர்.

## 85

கஷ்டப்பட்டு முன்னேறுபவரை இவ்வெண் குறிக்கிறது. தீமைகளை வெல்வர். பிறர் கஷ்டங்களையும் அன்புடன் நீக்குவர். மதம், இயற்கை, சம்பந்தமான புதுக் கருத்துக்களை வெளியிடுவர், வைத்தியத் தொழிலாலும் பிரசித்தராவர். எல்லோராலும் வணங்கப்படும் பதவி ஏற்படும்.

## 94

இவ்வெண் உள்ளோர் உலகிற்கு அநேக நன்மைகளை அளிப்பர். பொதுவான சமூக சீர்திருத்தங்களைச் செய்வர். சுகவாழ்க்கையும், புகழும் அடிக்கடி ஏற்பட்டு ஏற்பட்டு மாறும். வாழ்நாளுக்குப் பின்னரும் நீடிக்கும் நற் செய்கைகளைக் குறிப்பதால் இது அதிர்ஷ்டகரமானதாகக் கருதக்கூடிய எண்ணே.

## 103

இப் பெயரும் அதிர்ஷ்டமானதே. முதலில் செல்வ நிலையில்தான் முன்னேற்ற மேற்படும். பிறகு தொழிலில் மாற்றமும் ஏற்படும். போட்டி உண்டாகும். வாழ்க்கை முடிவு மங்களகரமாக அமையும்.

# ஐந்து — எழுத்து

பெயரிலுள்ள எழுத்துக்களின் எண்ணிக்கைகளைக் கூட்டின தொகை ஐந்து என்று வருமானால் அப்பெயர் ஐந்து எண்ணின் ஆதிக்கத்தின் கீழ்ப்பட்டதாகும். தனித்தனியே அப்படிக் கூட்டி வருகிற ஒவ்வொரு எண்ணின் குணங்களையும் பலன்களையும் கீழே காண்க.

## 5

ஜன வஸ்யத்தையும் சுக வாழ்க்கையையும் புகழையும் உயர்ந்த அந்தஸ்தையும் அளிக்கும். மிக்க கம்பீரமான வாழ்க்கை அமையும். தாராளமாக செலவு செய்யும்படி நேரும். விடா முயற்சியும். மனவோர்மையும் உடையவராக இருக்க முயற்சி செய்ய வேண்டும்.

## 14

இப் பெயர் வியாபாரத்திற்கு ஏற்றது. இந்த எண் வரும் பெயர் உடையவர்கள் எப்பொழுதும். பிறரால் சூழப்பட்டிருப்பர். ஜனக் கூட்டத்தையும், பலவித சாமான்கள் எப்பொழுதும் சூழ்ந்திருப்பதையும் காணலாம். எல்லாவிதமான வியாபாரங்களும் பலிதமடையும். தினசரி பல மனிதர்களையும் சந்திக்கும் படியான வாழ்க்கை அமையும்.



சதா சஞ்சாரம் ஏற்படும். பிறரை நம்புவதால் கஷ்டங்களும், ஏமாற்றங்களும் ஏற்படும். இடி, மின்னல், வெள்ளம், நெருப்பு இவைகளால் ஆபத்துக்கள் நேரிடுவதுண்டு. வேகமான வாகனங்களில் பிரயாணம் செய்யும் போது ஜாக்கிரதையாக இராவிடில் கீழேவிழ நேரும். வியாபார சாமான்களும் 14 வருகிற பெயர் உடையனவாக இருந்தால், அவைகளை பொது ஜனங்கள் மிகவும் ஆதரிப்பர். காதல், திருமணம் முதலிய இருதய சம்பந்தமான விஷயங்களில் அவசரப் படாமல் நிதானமாக யோசித்தே முடிவு செய்ய வேண்டும். இல்லையேல் ஏமாற்றம் ஏற்படுவது நிச்சயம். இது மிக அதிர்ஷ்டமான எண்ணாகவே காணப்படும்.

## 23

இதையே எல்லா எண்ணிக்கைகளையும் விட அதிர்ஷ்டகரமானதென்று கூற வேண்டும். இந்த எண் வருகிற பெயர் உடையவர்களுக்குத் தொடுத்த காரியத்திலெல்லாம் ஜெயமும், எண்ணுகிற எண்ணங்களிலெல்லாம் வெற்றியும் உண்டாகும். இவர்கள் போடுகிற திட்டங்களெல்லாம் சந்தேகமின்றி வெற்றியடையும். பிறர் செய்யவே முடியாது என்று எண்ணுகிற காரியங்களும் இவர்களுக்கு சுலபத்தில் கைகூடிவிடும். உலகோர் பிரமிக்கும் படியான காரியங்களை சாதிப்பார்கள். மிக மிக அதிர்ஷ்டமான எண்ணாக இருந்த போதிலும், இவ்வெண்ணைப் பெயரில் உடையவர்கள் பெரு முயற்சிகளில் ஈடுபடாமலிருந்தால் யோக்கியதைக்கு மிஞ்சின அதிர்ஷ்டசாலியான சாமான்யராகி விடுவர். பெரிய லக்ஷியங்களையோ திட்டங்களையோ மேற்கொண்டால் பிரசித்தி ஏற்படும். இதன் பலனாவது மிக்க உயரிய பதவியில் இருக்கும் மனிதர்களின் ஆதரவும், ஆட்சி பீடத்தில் அமர்ந்திருப்போர்களால் பாதுகாப்பும் உண்டாகும். முயற்சிகளெல்லாம் வெற்றிபெறும். ஆகையால்

இவர்கள் எப்பொழுதும் பெரிய முயற்சிகளில் ஈடுபட்டிருப்பது சிலாக்கியமாகும்; இல்லையேல் சோம்பல் நிறைந்த சுக வாழ்க்கையாக வாழ்வு முடிந்து விடும். இதையே ராஜ வஸ்யம் மிகுந்த எண்ணுகக் கூறுவர்.

## 32

இவ்வெண் வித விதமான மனிதர்களைத் தன்னிடம் இழுத்துக்கொள்ளக் கூடியது. இவ்வெண் பெயர் எண்ணிக்கையாக வருபவர்களுக்கு என்றும் பொது ஜன ஆதரவு உண்டு. புதுப் புதுக் கருத்துக்களை தன்னையறியாமலே வெளியிடுவர். மிக்க சக்தி வாய்ந்த இவ்வெண் சுலபத்தில் எவரையும் பிரமுகராக்கக் கூடியது. வசீகரத்தை அளிக்கும். மனதில் தோன்றுகிறபடியே நடந்து வந்தால் வாழ்க்கை அற்புதம் நிறைந்ததாக அமையும். பிறர் யோசனைப்படி நடக்க ஆரம்பித்தால் தோல்வி மேல் தோல்வியாக வரும். இதுவே அறிவின் பீடம் என்று குறிப்பிடப்பட்டது. (இதனுல் தான் விக்கிரமாதித்த சிம்மாதானம் 32 படிகள் உடையதாக இருந்தது). சமயோசிதமான புத்தியும், வேடிக்கையாகப் பேசும் திறமையும் உண்டாகும். வாழ்வும், தாழ்வும் மாறி மாறி வந்து கொண்டே இருக்கும். மேதாவியாவார். இளமை மாறுத தோற்றமிருக்கும்.

## 41

இது ஜன வஸ்யத்தையும் இதனுல் குறிக்கப்படுகிறவர்களின் சொல்லுக்கு யாவரும் அடங்குவதையும் குறிக்கிறது. வெற்றி வீரராக வாழ்வார். லட்சிய வாதியாவார். உலக புகழ் கீர்த்தியுண்டு. முன்னேற்றத்தில் தீவிர ஆர்வமிருக்கும். வெற்றிகள் அளிக்கும் போதையில் மயங்கி தன் சக்திக்கு மிஞ்சிய காரியங்களில் துணிந்து இறங்கி விடுவார்கள். இக் காரியங்களில் நேரும் தோல்வியைப் பிறர் அறியாவண்ணம் சாமர்த்தியமாக மறைத்து விடுவார்கள்.



## 50

இந்த எண்ணுல் குறிக்கப்படுவோர் மிதமிஞ்சின புத்திசாலியாகவும் எதையும் தீவிரமாக ஆராய்பவராகவும் இருப்பர். கல்வி கேள்விகளில் நிகரில்லாப் புலமையை அடைவர். சிலர் பிரசித்த ஆசிரியர்களாக விளங்குவர்; மற்றும் சிலர் சாமர்த்தியத்தை எல்லாம் பணம் சம்பாதித்தலிலேயே ஈடுபடுத்தி வெற்றி பெறுவர். விசேஷமான அதிர்ஷ்டம் 50 வயதுக்கு மேல்த்தான். ஆயுளும் அதிகமாகும்.

## 59

ஐம்பது எண்ணிக்கைக் காரரைப் போன்ற ஆராய்ச்சியுடையவராக இருப்பதுடன் நகைச்வை ததும்ப எழுதும் எழுத்தாளர்களாகத் திகழ்வர். இன்னும் இவர்களே எழுத்தாளர் உலகின் நகைச்சுவை மன்னர்கள். இவர்களுக்கு எழுத்து மூலம் ஐஸ்வரியம் உண்டாகும். பொது ஜன ஆதரவுமிகும். இவர்களில் கல்வி யறிவில்லாதவர்கள் கூடப் பொதுஜன ஆதரவால் பெரும் பதவிகளை வகிப்பர். பணம் சம்பாதிப்பதே குறியாக இருக்கும் நீடித்த அதிர்ஷ்டம் உண்டு. நரம்பு சம்பந்தமான வியாதிகள், பாரிசவர்யு முதலியவை ஏற்படக் கூடும். ஆகையால் நல்ல பழக்க வழக்கங்களுடன் இருக்க வேண்டியது அவசியம்.

## 68

இதுவும் ஓரளவு அதிர்ஷ்டமான எண்ணுகத் தென்படும். ஆனுல் ஆரம்பிக்கிற அதிர்ஷ்டகரமான வாழ்வு திடீரெனத் தடைப்பட்டு நின்று விடும். சாதிக்க முடியாத பெரிய பெரிய காரியங்களில் இறங்கி வீணுக துக்கப்படுவார்கள். ஆரம்பத்தில் எதிர்பாராத அதிர்ஷ்டம் அடித்த போதிலும் சீக்கிரமே தடைப்பட்டு விடுவதால் இது சிரேஷ்டமானதல்ல. பேராசையே இவர்கள் வாழ்க்கையைக் கெடுக்கிறது.

## 77

சுய முயற்சியையும் தன்னம்பிக்கையையும், உழைப்பையும் குறிக்கிறது. ஜனவஸ்யம் லாபத்தைத் தரும். பெரும் புகழ் உண்டாகும். வசீகர வாழ்க்கை அமையும். தெய்வ பக்தி இருந்தால்தான் இது பூரண பலனைத் தரும். அயல் நாட்டுப் பிரயாணங்கள் நேரும்.

## 86

இது மிக சிரமப்பட்டு படிப்படியாக முன்னேறுவதைக் குறிக்கும். யோக்கியதையும் அதற்கேற்ற ஆதரவும் உண்டு. செல்வந்தர்கள் பொருள் கொடுத்து ஆதரிப்பர். பிறர் ஆதரவால் சுக வாழ்வும் சந்தோஷகரமான சூழ்நிலையும் அமையும். பொருள் சேர்த்துச் சுகமாக வாழ்வர்.

## 95

இந்த எண் கட்டுப்பாடான வாழ்க்கையையும் வீர தீர செயல்களையும் புகழையும் குறிக்கிறது. பல திறப்பட்ட நூதன சாமான்கள் வியாபாரம் செய்வதால் பொருள் சேரும். பிரசங்க சக்திமிகும். விளம்பரம் ஏற்படும்.

## 104

இந்த எண் கம்பீரமாக வாழ்க்கை ஆரம்பித்தலையும் பிறகு எதிர்பாராத மாறுதல்களையும் குறிக்கிறது. அரிய காரியங்களையும் சாதிப்பர். புகழ்தான் மிஞ்சும்.



# எழுத்து — ஆறு

உங்கள் பெயரிலுள்ள எழுத்துக்களின் எண்ணிக்கைகளைக் கூட்டிக் கண்ட தொகை 6 என்று வந்தால் அந்த எண் 6-ன் ஆதிக்கத்திற்கு உட்பட்டதாகும். அப்படிப் பட்ட எண்களின் பிரத்தியேக குணங்களையும் பலனையும் கீழே காண்க.

## 6

சாந்தமான வாழ்க்கை, குறைவற்ற வாழ்க்கை நிலை, திருப்தியான மனம், ஒரே நிதானமான வாழ்க்கை இவைகளை இவ்வெண் குறிக்கிறது. இவ்வெண்ணிற்குத் தனித் திருப்பதால் அதிக பலம் கிடையாது.

## 15

காரிய சித்தியையும், சதா லாபமடைவதையும் எவ்வழியிலாயினும் தன் காரியத்தை சாதித்துக் கொள்ளுகிற தன்மையையும் குறிக்கும். காமமும், குரோதமும். வஞ்சகத் தன்மைகளும் மனதைக் கீழே இழுக்க நேரும். சுய நலம் நாளுக்கு நாள் விருத்தியாகும். முக வசீகரமும் வாக்கு சாதுர்யமும் எக் காரியத்தையும் சாதித்துக் கொள்ள உபயோகிக்கப்படும். இது மனதை மேன்மையாக்கக் கூடிய புண்ணியகரமான எண் அல்ல என்ற போதிலும் இகலோக வாழ்க்கைக்கு மிகச் சிறந்த எண்ணாகும். வசீகரத் தன்மைகளாலும் கலைகளாலும் பேச்சினாலும் பொருளீட்டக்கூடிய எல்லாத் தொழில்களிலும் நிகரற்ற லாபத்தைத் தரும். இவர்களுக்கு உதவ அனேகர் எப்பொழுதும் தயாராக இருப்பர். போகம் மிகுந்த வாழ்க்கை அமையும். பிறந்த தேதியைக் குறிக்கிற எண்கள் அதிர்ஷ்டகரமானவைகளாக இருந்துவிடின் பெயரில் இவ்வெண் வருபவர்கள் புகழையும் போக போக்கியங்களையும் அடைந்து அனுபவிப்பர்.

## 24

இந்த எண் உடையவர் அரசாங்கத்தால் மிகுந்த ஆதரவளிக்கப்படுவர். மிகப் பெரிய பதவிகளை வெகு சுலபமாக அடைய இந்த எண் உதவிசெய்யும். அந்தஸ்துக்கு மீறிய வண்ணமே வாழ்க்கைத்துணைவர் அமைவார். பெயர் இந்த எண்ணாக இருந்தால் போலீஸ், ராணுவம் முதலிய அதிகாரத்தைக் குறிக்கிற உடுப்புகளை அணியும் தொழில்களிலெல்லாம் வெகு சீக்கிரம் முன்னேறுவர். சாதாரண பதவியில் சேருபவரும் சேனாதிபதியாக சந்தர்ப்பமும் அதிர்ஷ்ட வசமாக ஏற்படும்.

## 33

மந்திர சாஸ்திரங்களில் குபேரனது எண்ணாகக் குறிக்கப்படுகிறது இவ்வெண். இது அருளும் பொருளும் ஒருங்கே வளர்வதைக் குறிக்கிறது. இந்த எண்ணைப் பெயரில் உடையவர் தான் அறிந்தோ அறியாமலோ பராசக்தியின் கடாட்சத்திற்குப் பாத்திரமாவார். அதனால் அருளோடு, தனதான்ய விருத்தியும், குறைவற்ற செல்வமும் நன்கு அமையும். (இவர்களுடைய சொத்துக்களில் தான்யக் குவியல்கள் அல்லது மில்களும், தடாகங்களும் அநேகமாக அமைந்திருக்கின்றன). லக்ஷ்மீகரம் நிறைந்த அநேக பொருள்கள் இவர்களுக்குச் சேரும். ஐஸ்வர்யம் குன்றாது.

## 42

இந்த எண் பெயரால் குறிக்கப்படுவோர் ஏழையானாலும் பெரிய அதிகார பதவியை அடைவார். பேராசை ஓரளவு காணப்படும். சிக்கனத்தில் புத்தி செல்லும். பொருள் சேர்ப்பதில் சமர்த்தர். சுக வாழ்க்கைக்காக பணத்தைச் செலவிட ரொம்பவும் தயங்குவார். மனோ பலம் மிகும். அருளும் விருத்தியாகும். (சுயநலம் குறைந்தால்) நீரிழிவு குணமாகும்.



## 51

ஆறு எண்ணின்கீழ்க் காணும் எண்களில் இதுவே மிகவும் சக்தி வாய்ந்தது. திடீர் முன்னேற்றம் இதனால் குறிக்கப்படுகிறது. நேற்றுவரை சமான்யராக இருந்தவர் இன்று பிரபலத்துடன் பிரமுகராவார். எதிர்பாராத வகையில் மிகப் பெரிய பதவிகளை வகிக்கநேரும். சரீரமும் மனமும் சக்தியால் வியாபிக்கப்பட்டு அடக்க முடியாதபடி போகும். சதா சிந்தனையும், உணர்ச்சி வேகமும், சோர்வையே அறியாத உழைப்பும் உண்டாகும். உடலும் மனமும் நிலைகொள்ளாது. படுக்கக்கூடத் தோன்றாமல், கூண்டிலடைக்கப்பட்ட சிங்கம் போல் முன்னும் பின்னும் உலாவிய வண்ணமிருப்பர். மிதமிஞ்சின சரீர பலமும், மனோ பலமும் காணப்படும். சுருங்கக் கூறில் வேகம் நிறைந்த சக்தி இவர்களை ஆட்கொண்டுவிடும். இவர்களுக்குப் பிராண பயத்தை விளைவிக்கக் கூடிய விரோதிகள் ஏற்படக் கூடுமாகையால் பிறர் மனதைப் புண்படுத்தாமல் இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும். இது ஏராளமான பொருள் வரவையும் குறிப்பதால் மிக அதிர்ஷ்டகரமானதாகக் கொள்ளலாம்.

## 60

இவ்வெண் அமைதியையும் செல்வத்தையும் கலா ரஸிகத் தன்மையையும் சாந்தமான சுபாவங்களையும் ஆழ்ந்த அறிவையும் குறிக்கிறது. வாக்கு வன்மையும் வாதத் திறமையும் நன்கு அமைந்திருக்கும். மிக சந்தோஷகரமான குடும்ப வாழ்க்கை ஏற்படும்.

## 69

இவ்வெண்ணால் குறிக்கப்படுகிறவர் முடி சூடாவிடினும் தான் எத்தொழில் புரியினும் அதில் மன்னராக விளங்குவார். சுய முயற்சியால் எல்லோரையும் வென்று தன் ஸ்தானத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுவார். நிகரற்ற பொருள் வரவும், மிக்க கம்பீரமான தோற்றமும்,

அச்சம் கொள்ளத்தக்க அந்தஸ்தும் ஏற்படும்; உணர்ச்சி வசப்பட்டவராதலால் பணத்தை அள்ளி வீசுவார்கள். மனத் திருப்திக்காக ராஜ குணங்கள் உடம்போடு ஒட்டி விடும். மிக மிக சௌகர்யமான வாழ்க்கை நடத்துவார். பேச்சிலே இணையற்றவர்கள்.

## 78

6 எண்ணால் குறிக்கப்படுகிறவர்களில் இவரே உத்தமர், மித மிஞ்சின சமயப் பற்றும் ஆசார நம்பிக்கையும் இருக்கும். கவிதா சக்தி மிகும். கேட்போர் மயங்கும்படியாகப் பேசுவார்கள். வாக்கிலே வாணி வீற்றிருப்பாள். தர்மஸ்தாபிதம் செய்வதிலும் சமூகசேவை செய்வதிலுமே நாட்டமிருக்கும். மிகச் சுலபமாக பெரும் தொகைகள் இவர்களுக்குக் கிடைக்கும். ஆனாலும் மிகுந்த ஜாக்கிரதையாக இல்லாவிடில் அருளைத் தவிர பாக்கி எல்லாப் பொருளையும் இழந்துவிடுவர். மந்திர சித்தி இவர்களுக்கு உண்டு. எல்லோராலும் மதிக்கப்பட்டவராக வாழ்வார்.

## 87

இது ரகஸ்யமான சக்திகளைக் கொடுக்கக் கூடியது. தீய வழிகளிலேதான் பணம் சேரும். நடு நிசியில் திருடவும். ஸர்ப்பங்களையும் மற்ற மிருகங்களையும் வசப்படுத்தவும் உதவும். தீய வழிகளில் செலுத்தக் கூடியதாதலால் இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

## 96

இது ஐஸ்வர்யத்தையும், கல்வியையும் ஒருங்கே அளிக்க வல்லது. நினைத்த காரியங்களிலெல்லாம் வெற்றியும், ஆகர்ஷண சக்தியும் உண்டாகும். சுலபமாகக் கலைகளில் தேர்ச்சியுண்டாகும். ஸ்திரீ வஸ்யமும் உண்டு. மிக அதிர்ஷ்டகரமானதே.



## 105

இது அதிர்ஷ்டகரமான வாழ்க்கையையும், திருப்தியான சூழ்நிலைகளையும், பெரும் புகழையும் தரும்; சொத்து சேரும். நல்ல சந்ததியும் உண்டு.

---

## எழுத்து — ஏழு

இப்பொழுது பெயரின் எண்களைக் கூட்டினால் ஏழு வருகிற எண்களின் பலன்களைக் கவனிப்போம்.

## 7

பெயரின் எண் ஏழு ஆக வந்தால் அது உயர்ந்த லட்சியத்தையும் மேன்மையான சுபாவங்களையும் குறிக்கும். எதிர்பாராத மாறுதல்கள் ஏற்படும். அருள் வளரும். முயற்சிகள் சரியான முடிவடையாமல் மாறிக்கொண்டேயிருக்கும்.

## 16

இது மிக வேகமாக முன்னேறுதலையும், திடீரென்று தலை கீழே விழுவதையும் குறிக்கிறது. இந்த எண்ணைக் குறிக்கிற பண்டைய படங்களில் "ஓர் உயர்ந்த கோபுரம் இடிவிழுந்து சிதறுவதையும் அதன் உச்சியிலிருந்து கிரீடத்துடன் அரசன் தலை கீழே விழுவதையும் சித்தரிக்கப் பட்டுள்ளன". (இது நூற்றுக்கு நூறு உண்மை என்பதை உலகிலேயே முதல் தடவை கோரமான அணுகுண்டினால் தாக்கப்பட்ட ஜப்பான் உறுதிப்படுத்திவிட்டது.

ஜப்பானிய அரசர் தெய்வீகமானவரென்றும் அவரை உயர இருந்து பார்ப்பது கூடத் தண்டிக்கப்பட்டு வந்த தேசத்தில் அமெரிக்கர் அவரை சாதாரண மனிதராக்கி விட்டனர். பெயர் இந்த எண்ணில் வந்தால் மாற்றியமைத்துக் கொள்வது அவசியம். இந்த எண்ணால் புது விதமான கற்பனைகள் எழுத்தில் தோன்றும்.

## 25

இந்த எண் முடிவில் நன்மை பயப்பதால் நன்மையானதென்று கருதலாம். இதனால் குறிக்கப் படுவோர் பலவித சோதனைகளுக்கும் உட்படுவர். வாழ்க்கையின் ஒவ்வொரு அடியும் போராட்டமும் சோதனையும் நிறைந்ததாக இருக்கும். அவைகளில் வெற்றி பெறுவதன் மூலம் தன்னம்பிக்கையும், ஆன்ம வளர்ச்சியும், ஜன ஆதரவும் ஏற்படும்; உலக அறிவும் வியவகார ஞானமும், கருத்துக்களில் தெளிவும், செய்கிற காரியங்களில் திட்டமும் உண்டாகும். தனக்குத்தானே நடை முறைத் திட்டங்களையும், ஒழுக்கம், ஆசாரங்களையும் வகுத்துக் கொண்டு லக்ஷ்யப் பாதையைப் பின்பற்றுவர். உருக்க உருக்க மாசு தீர்ந்து மேலான மாற்றை அடையும் பொன்போல இவர்கள் வாழ்க்கையும் சோதனைகளுக்குப் பின் அமரத்தன்மையடையும்.

## 34

இது ஓர் விதத்தில் மிகவும் அதிர்ஷ்டகரமான எண்ணாகும். எப்படியெனில் பெயர் உடையவரின் மேன்மையான சுபாவங்களையும் சக்திகளையும் கவர்ச்சியுடன் வெளிப்படுத்தும். இது யோக்யதையை உயர்த்தக் கூடியதேயன்றி அதிர்ஷ்டகரமானதல்ல. பிறந்த தேதி எண்ணும் அதிர்ஷ்டகரமாக இருப்பின் வெகு சுலபமாக ஏராளமாகப் பணம் சம்பாதிப்பார்கள். அப்படி இல்லாவிடத்து பணம் சம்பாதிப்பது மிகவும் சிரமமாகிவிடும். (குடும்ப வாழ்க்கையில்



ஏதாவது குறை இருக்கும்.) இதனால் குறிக்கப்படுகிறவர்களில் பெரும்பாலானோர் மங்கையரிடமோ மதுவினிடமோ மனதைப் பறிகொடுக்கின்றனர். இது மிகவும் ஜாக்கிரதையாகக் கவனிக்கப்பட வேண்டிய அம்சமாகும். சகஜமாக இவர்கள் மனம் ஏதாவது லாகிரி வஸ்துக்களை நாடுகிறது. இதுவே இவ்வெண்ணின் அச்சம் தரக்கூடிய அம்சமாகும்.

## 43

இந்த எண் விசித்திரமானதாகும். இவர்கள் வாழ்க்கையே புரட்சியாகத் தோன்றும். இவர்கள் எத்தொழிலில் ஈடுபட்டிருந்தாலும் நிமிஷத்துக்கு நிமிஷம் புதுப்புது விரோதிகளை உண்டாக்கிக் கொள்ளுவார்கள். உத்தியோகத்தை ராஜினாமா செய்தல் இவர்களுக்கு மிக சகஜமாக இருக்கும். தீவிரமான அபிப்பிராயங்களை வெளியிட்ட வண்ணமிருப்பார்கள். கற்பனா சக்தியும் பேசுந் திறமையும் எழுதும் ஆற்றலும் மற்ற 7 எண்காரர்களுக்கு இருப்பது போலவே இவர்களுக்கும் உண்டாகும். இவர்களது இச்சைகள் முடிவில் பூர்த்தியடையும். துரதிர்ஷ்டகரமானதாகவே கருதப்படுகிறது. இவ்வெண் போராட்டத்தையும், பெருந்தடைகளையும், புரட்சிகரமான மாறுதல்களையும் குறிக்கிறது. லக்ஷ்யங்கள் வெற்றியடையும்; ஜெயம் நிச்சயம். (துரதிர்ஷ்டகரமானதென்பதன் பொருள் அனுபவிக்க வேண்டிய ஒரு சுகத்தையும் அனுபவிக்க முடியாமல் போகும் என்பதையும், நிம்மதியற்ற வாழ்வையுமே குறிக்கிறது. இவர்கள் வெற்றியினால் இவர்களுக்குச் சுயலாபம் விசேஷமாக ஏற்படாது.) இவர்களுடைய புத்தி கூர்மை வயது ஏற ஏற அதிகரித்துக் கொண்டே போகும். இவர்களுடைய சாமர்த்தியத்திற்கும் அறிவுக்கும் ஆதரவை விட எதிர்ப்பே அதிகமாக இருக்கும்.

## 52

இந்த எண்ணும் ஒருவித புரட்சியைக் குறிக்கிறதேயாகும். பிறந்த தேதி அதிர்ஷ்டகரமானதாக இருந்தால்

உலகப் பிரசித்தி ஏற்படும். எப்பேர்ப்பட்ட பிரச்னைக்கும் முடிவு சொல்லக்கூடிய புத்திமானாவார். வசீகரம் மிகும். ஆத்மீக வாழ்க்கை உடையவரானால் மிகப் பிரசித்தியும், அசாதாரணமான ஆற்றல்களும் உடையவராவார். எண்ணிய எண்ணங்களெல்லாம் கைகூடும். மற்ற மனிதர்களுடைய வாழ்க்கையில் ஓர் புதிய சகாப்தத்தை ஆரம்பிப்பவராவார். (இந்த சக்தி ஓரளவு 25 எண்ணிற்கும் உண்டு.) வாழ்க்கை செய்ய வேண்டிய காரியங்கள் இருக்கும்போதே திடீரென முடிவுபெறும்; சேர்ந்த வாழ்க்கை அல்லல்கள் நிறைந்ததாக இருந்தாலும் பிரசித்தி நிச்சயம் ஏற்படும்.

## 61

இந்த எண்ணால் குறிக்கப் பெறுவோர் சுகமாக அமைந்த வாழ்க்கையை விட்டு விட்டு தன்னிஷ்டப்படி புது முயற்சிகளில் ஈடுபடுவர். வெற்றி தோல்விகள் மாறி மாறி வரும். சரீர சுகத்தைக் காப்பாற்றிக் கொண்டால், பின் வயதில் பெரிய அதிகார பதவி வகிக்கலாம். குடும்ப வாழ்க்கை, விசேஷமாக இராது. வெளிப் பார்வைக்கு வெற்றிகரமாகத் தோன்றும். பல காரியங்களில் ஜெயம் பெறுவர். பெரு முயற்சிகளில் வாழ்நாளைக் கடத்துவர். பெரும் புகழ் ஏற்படும்

## 70

இதனால் குறிக்கப் பெறுவோர் தீவிரவாதியாவர். சுகமான வாழ்க்கை சூழ்நிலைகளால் தடைப்படும். அடிக்கடி தோல்விகளும், ஏமாற்றங்களும் சிரமங்களும் ஏற்படும். பின் வயதில் வாழ்க்கை திடீரென வெற்றிகரமாக மாறும்; பட்ட கஷ்டங்களுக்குத் தகுந்த பலன் ஏற்படும். மிகுந்த வெற்றிகரமாகவும், பயங்கரமாகவும், வாழ்க்கை அமையும், (இந்த எண்ணிற்கு அதிக வலிமை கிடையாது. பிறந்த தேதி எண்கள் மிக அதிர்ஷ்டகரமாக இருந்தால்தான் வாழ்க்கையின் பின் பாதியில் வெற்றிகரமாகும். இல்லாவிடில் கஷ்டங்கள் கர்த்தாவை மூழ்கடித்து விடும்.



## 79

வாழ்க்கை ஆரம்பத்தில் க்ஷீண தசை அடையும். பின்னர் இதனால் குறிக்கப்படுவோர் சாமர்த்தியத்தினாலும் மிதமிஞ்சின தீரத்தாலும் வேகமாக முன்னேற்றமடைவர். ஜன வசீகரமான வாழ்க்கையும், க்ஷேமமான நிலையும், நிலையான வெற்றியும் ஏற்படும். நல்ல திடமான அதிர்ஷ்டசாலியாவார். அற்புத மனிதராவார்.

## 88

இவ்வெண்ணிற்கு ஆத்மீக உயர்வு உண்டு. மனதில் தயை, கருணை முதலான மேன்மையான தன்மைகள் விசேஷமாக விருத்தியாகும். சகல ஜீவராசிகளிடத்தும் அன்பு பூண்டவராவார். மிகுந்த கீர்த்திமானாகவும் வாழ்வர்.

## 97

இவ்வெண் சாஸ்திரங்கள், கலைஞானங்களில் தேர்ச்சி தரும். விசேஷமான ஆத்மீக உயர்வு உண்டு. சகல விதமான முயற்சிகளும் வெற்றி தரும். லக்ஷ்மீகரமும், பிரமிக்கத் தக்க செய்கைகளும் அமையும்.

## 106

வாழ்க்கையில் விசேஷ மாறுதல்கள் ஏற்படும். நடுவயதில் பலவித சிக்கல்களேற்படும். பின்னர் திருப்திகரமான வாழ்க்கை அமையும், சுலபத்தில் தீர்க்கமுடியாத பெரும் பிரச்சனைகள் வாழ்க்கையில் ஏற்படும், அதனால் இவ்வெண் அதிர்ஷ்டகரமானதல்ல. அருள் நாட்டம் குறைந்து பொருளாசை அதிகரிக்கும்.

## எட்டு — எழுத்து

### 8

ஆத்மீக வாழ்க்கையில் பெரும் முன்னேற்றத்தை அடைவர். வெற்றி தாமதப்பட்ட வண்ணமிருக்கும். பெரும் போராட்டத்துக்குப் பிறகு வெற்றி ஏற்படும். எதிர்பாராத ஆபத்துக்கள், சங்கடங்கள் உண்டு.

### 17

அரசுத் தன்மையுண்டாகும். பலவிதமான கஷ்டங்களுக்கும், சோதனைகளுக்கும் உள்ளாவார்கள். ஆனால் மறுபடி மறுபடி சளைக்காமல் போராடுவார்கள். தோல்வியை அலட்சியம் செய்து மீண்டும் மீண்டும் போரிட வல்லவர். முடிவில் எல்லா எதிர்ப்புகளையும் வென்று மிகுந்த சக்திமானாக வாழ்வர். சித்திகளைத் தரவல்லது. ஏராளமான ஐஸ்வரியங்களும், காலத்தினால் மங்காத புகழும் ஏற்படும். உலகப் பிரசித்தமான காரியங்களை செய்துவிடுவார்கள். தன் இலட்சியத்தை அடைய உயிரையும் உடலையும் சிறிதும் பொருட்படுத்தாமல் உழைத்து வெற்றியை அடைவார்கள். உலகம் இவர்களை மறக்க முடியாது,

### 26

வயோதிகத்தில் வறுமையையும், வீண் முயற்சிகளையும் குறிக்கின்றது. நண்பர்களாலும் கூட்டாளிகளாலும் பெரும் நட்டங்கள் ஏற்படும். தொட்டதெல்லாம் தோல்வியாகவே முடியும். குழப்பத்தையும் தோல்வியையும் குறிக்கும். ஆயுளைக் குறைக்கும், கொலை செய்யக் கூடிய விரோதிகள் ஏற்படுவார்கள். இலட்சியவாதியாக வாழ்க்கையை ஆரம்பித்துப் பின்னர் இலட்சியங்களைக் காற்றில் பறக்க விட்டுவிட்டு பணத்துக்காகவும் பதவிக்காகவும் சிரமப்பட நேரும்.



### 35

பார்வைக்கு அதிர்ஷ்டகரமாகவே தோன்றும். கூட்டாளிகளாலும் நண்பர்களாலும் பெருத்த நட்டங்கள் உண்டாகும். பிரமுகராகிப் பொருளை இழப்பர். எதிர்பாராத விபத்துக்கள் ஏற்படும். தீய வழிகளில் பணம் சம்பாதிக்கத் துணைபுரியும், நண்பர்களை விரோதித்துக் கொள்வார்கள். திடசித்தமிராது. செலவு கட்டுப்படுத்த முடியாது. தீராத வயிற்று நோயை உண்டாக்கும்.

### 44

சுலபமாகப் பணம் சம்பாதிக்க உதவிபுரியும். பொருள் சேரும். தீயினால் ஆபத்து. சிறைவாசமுண்டு. மனம் தீய வழிகளில் செல்லும்.

### 53

ஆரம்பத்திலேயே வெற்றி தோல்விகளை அனுபவிப்பார்கள். வயது ஆக ஆகத்தான் நிதானம் ஏற்படும். பிரபலமான வாழ்க்கை ஏற்படும். சிக்கல்களில் அகப்படுவர். தோல்வியை வெற்றியாக்கிக் கொள்வர். நன்மைக்கான காரியங்களைச் செய்து புகழடைவர். விருத்தாப்பியத்தில் யோகமுண்டு.

### 62

மிகுந்த புகழையும், பெரும் வெற்றிகளையும் சுக வாழ்க்கையையும் தரும். பேராபத்துக்களும் தோல்வியும் இடையிடையே ஏற்படும். பெருத்த விரோதங்களையும் உறவினரிடையே மனக்கசப்பையும் உண்டுபண்ணக் கூடியது. குடும்ப வாழ்க்கையில் சுகம் இராது. மூளை மிகுந்த பலம் பெறும். பிறர் ஏமாந்து போகக்கூடிய அளவு வசீகரமுண்டாகும். விரோதிகள் கூட மயங்கி விடுவார்கள்.

## 71

வாழ்க்கையின் ஆரம்பத்தில் சிரமங்களைத் தரும். பரோபகார சிந்தை மிகும். ஏராளமான சொத்துக்கள் சேரும். பெண்கள் விரும்புவர். தீவிரமான சொல்லும் செயலும் உண்டு. பயமற்ற வாழ்க்கை உண்டாகும்.

## 80

இவ்வெண் மிகவும் நுட்சுமமான சக்திகளை உடையது. வாழ்க்கையை பெருத்த ஆபத்துக்கள் முடித்து விடக்கூடும். தத்துவ ஆராய்ச்சிகளில் ஈடுபடுபவர்களானல் தத்துவங்களை யெல்லாம் வெல்லக்கூடிய சக்தி ஏற்படும். இயற்கை இவர்களுக்கு தன் தன்மைகளையும் மாற்றிக் கொண்டு உதவும். வாழ்க்கையோ ஆபத்துக்களால் சூழப்பட்டு பயம் நிறைந்து இருந்த போதிலும் சுகமாக நடைபெறும். அற்புதங்கள் நிறைந்த வாழ்க்கை அமையும். அதிர்ஷ்டகரமானதாகக் கருதலாம்.

## 89

நற்பலன்களைக் குறிக்கும் இவ்வெண்ணும் வாழ்க்கையின் ஆரம்பத்தில் சிரமங்களைத் தரும். பரோபகார சிந்தை மிகும். ஏராளமான சொத்துக்கள் சேரும். பூமி, வீடுகள் ஆபரணங்கள் நிறைய உண்டாகும். பெண்கள் மிகவும் இவர்களை விரும்புவார்கள். ஸ்திரீகளானல் தன் இனத்தாரால் மிகவும் மதிக்கப்படுவார்கள். அழகும் செல்வமும் சேர்ந்து காணப்படும். தீவிரமான சொல்லும் செயலும் உண்டு பயமற்ற வாழ்க்கை உண்டாகும் ஆரம்பத்தில் நெருப்பால் ஆபத்துக்கள் ஏற்படலாம்.

## 98

அறிவாளியாக இருப்பர். கவலைகள் நிறைந்த வாழ்க்கையும் ஏக்கமும் ஏற்படும். அறிவு இருந்தும் பிரகாசம் ஏற்படாது. கஷ்டங்களும் தீராத நோய்களும் ஏற்படும்.



## 107

பிரசித்தியையும் வெற்றியையும் தரும். பெண்களால் சிக்கல்கள் ஏற்படும். செல்வம் ஏற்பட்டாலும் சுகம் கிடைக்காது. செல்வாக்குண்டு.

# ஒன்பது — எழுத்து

பெயரிலுள்ள எழுத்துக்களின் எண்களைக் கூட்டிக் கண்ட தொகை 9 வந்தால் இவ்வெண்ணின் ஆதிக்கம் ஏற்படும். 9 எண்ணின் கீழ் பிறப்பவர்களை விட பெயர் எண்ணால் 9 ஆதிக்கம் உடையவர்கள் வெற்றிகரமாய் வாழ்வர். ஏனெனில் மற்ற எண்களில் பிறந்தோரை இப்பெயரின் (9) ஆதிக்கம் சுறு சுறுப்புள்ளவர்களாகவும். தளராத ஊக்கம் உடையவர்களாகவும், அசாத்ய சாமர்த்தியசாலிகளாகவும் செய்து வெற்றி பெறத் துணைபுரிகிறது.

இனி 9 எண்ணின் ஆதிக்கம் கொண்ட பெயர் எண்களைக் கவனிப்போம்.

## 9

இது பெயர் எண்ணாக வந்தால் அறிவையும் ஆற்றலையும் குறிக்கும். நீண்ட பிரயாணங்களையும், சூழ்நிலைகளை எதிர்த்துச் செய்யும் போராட்டங்களையும், முடிவில் வெற்றியையும் குறிக்கும். எதிர்ப்புகளைத் தகர்த்தெறிந்த பின்னர் வெற்றியுடன் சுகமான நீண்ட வாழ்க்கை உண்டாகும்.

## 18

தெய்வீகத்தின் வீழ்ச்சியைக் குறிக்கும் இவ் வெண் கஷ்டங்களையும், காரியங்களுக்கு வீண் தாமதத்தையும், ஆபத்தான எதிரிகளையும் உண்டுபண்ணும். இத னல் குறிக்கப் பெறுவோர், சமூக விரோதமான காரியங்களில் சுயநலத்தால் தூண்டப்பட்டு ஈடுபடுவர். மனமறிந்து தவ ரான தீய காரியங்களைச் செய்ய நேரும். சுயநலமே வள ரும். அருளும், அமைதியுமற்ற பாபகரமான வாழ்க்கை அமையும். இவ்வெண் ஆசைகள் வளர்ந்து தெய்வீகத்தை அழிப்பதைக் குறிக்கிறது. ஆசைகள் முடிவடையும். அரு ளழியும். (பாரத யுத்தம் 18 நாட்கள் நடந்தது. 18 சைன் யங்கள் யுத்தம் புரிந்தன. இந்த தாயாதிப் போரில் பாண் டவர்கள் உறவினரில் மூத்தோரையும் ஆசிரியர்களையுங் கூடக் கொல்ல நேர்ந்தது. 18 அத்தியாயங்களாக அமைந்த பகவத்கீதை மிக்க மேலான கிரந்தமான போதிலும் அச் சமயம் யுத்தத்திற்கு தூண்டுகோலாயிற்று. பொறாமை, வஞ்சகம், தீயினாலும் ஆயுதங்களாலும் ஆபத்து இவைக ளைக் குறிக்கும் இவ்வெண் விரும்பத்தக்கதல்ல.

## 27

இவ்வெண் தெளிவான அறிவையும், இடையறாத உழைப்பையும், செல்வ விருத்தியையும் செல்வாக்கையும், அதிகார பதவிகளையும் குறிக்கிறது. (உத்தியோகத்திற் கான உடுப்புகளை அணியும் போலீஸ், ராணுவம் முதலிய வற்றைச் சேர்ந்தவரானால் இவ்வெண் உடையோர் உச்ச ஸ்தானத்தை அடைவர். (இதற்கும் முன்பு கூறப் பட்ட 24-ஐப் போன்ற அதிர்ஷ்டம் உண்டு). செய்யும் தொழிலில் சிறந்தவராக மதிக்கப்படுவார். பரோபகார மான செயல்களிலும் ஈடுபடுவதுண்டு. இவர்களுக்கு நற் பலன்களைத் தரும் காரியங்களில்தான் இவர்கள் ஈடுபடு வார்கள். இது ஒரு மிக அதிர்ஷ்டமான எண். ஆன்ம லாபமும் மந்திர ஸித்தியும் நிச்சயம் உண்டாகும்.



## 36

இவ்வெண் மிக்க சாமான்ய நிலையில் உள்ளவரையும் பிரசித்தராக்கி சீமானாக்கக் கூடியது. பிறந்த இடத்தி லிருந்து தொலைவிலுள்ள பிரதேசங்களுக்குச் சென்ற பின் னரே இவர்கள் பிரசித்தியடைவர். அநேக பிரயாணங் கள் ஏற்படும். உயர் பதவியும் கிட்டும். பார்வைக்கு மிக்க அதிர்ஷ்டகரமானதாகத் தோன்றும் இவ்வெண் குடும்ப வாழ்க்கையில் சிக்கல்களை ஏற்படுத்தக் கூடியது. விசுவாச மில்லாதவர்களால் சூழப்படுவர்.

## 45

இது மிக்க அதிர்ஷ்டகரமான எண். கஷ்ட நிலையில் உள்ளவர்களும் பிரசித்தியையும், பெரிய பதவிகளையும் அடைவர். வாக்கினால் பிரசித்தி உண்டாகும். எல்லோ ரையும் மகிழ்விக்கக் கூடிய காரியங்களிலும், தொழில்களி லும் ஈடுபடுவர். தீவிர உழைப்பாளிகளான இவர் கள், தாம் செய்யும் தொழிலில் நிகரற்ற ஸ்தானத்தை வகிப்பார்கள். எப்பாடு பட்டாவது தன் காரியத்தை சாதித் துக் கொண்டு விடுவார்கள். இவர்கள் வாழ்க்கையே நடிப்போ என்று பிரமிக்கும் வண்ணம் நடந்து கொள்வர். தீராத குறை இருந்தபோதிலும் பிறர் கண்டுபிடிக்க முடியா தபடி சிரிப்பு மாறாமல் வாழ்க்கையை நடத்துவர். சுக வாழ்க்கையும், புகழும், செல்வமும் அளிக்கும் இவ்வெண் மிகவும் விரும்பத் தக்கதே. நோய்கள் நீங்கும்.

## 54

இவ்வெண் வாழ்க்கையில் படிப்படியாக வெற்றியை யும் முன்னேற்றத்தையும் தரும். தோல்விகளும் ஏற்படுவ துண்டு. வாழ்க்கையின் முற்பகுதியில் விசேஷ கௌரவமும், புகழும், செல்வமும் ஏற்படும். பிடிவாதமும் முன்யோசனை யற்ற காரியங்களும் பிரபலத்தை இழக்கச் செய்யும். பேரா

சையே இவ்வெண்ணின் சத்துரு. ஜாக்கிரதையாக இல்லாவிட்டால் எல்லாவற்றையும் இழக்க நேரும். கடைசிக் காலத்தில் ஓரளவு வெற்றி மறுபடி கிட்டும். சுதந்திரம் இல்லாத வாழ்க்கை அமையும்.

## 63

இதுவும் அதிர்ஷ்டகரமான எண்தான். ஆனால் இந்த எண் பெயராக வந்தால் புத்தி நல்ல விஷயங்களில் செல்லாது. தவறான காரியங்களில்தான் புத்தி செல்லும். இது திருடர்களுக்கே உகந்ததென நூல்களில் காணப்படுவதால் இத்துடன் விட்டு விடுகிறேன்.

## 72

9 எண்களிலேயே இதை மிகவும் சிறந்ததாகக் கருதலாம். இதனால் குறிக்கப்படுபவர் பால்யத்தில் சிரமப்பட்டபோதிலும் பின்னர் ரொம்பவும் சுகப்படுவார். சந்தேகங்களை நீக்கினால் சுகமுண்டாகும். இவரால் தேடப்படுகிற சொத்துக்கள் பல தலைமுறைகளுக்கும் அழியாமல் இருக்கக்கூடியது. பணம் வந்துகொண்டே இருக்கும். போய்விடாது. (வியாபாரிகள் கவனிக்க வேண்டிய எண்). புகழும் உண்டு. இவ்வெண் நிலையான ஐஸ்வர்யத்தைக் குறிக்கிறது.

## 81

இவ்வெண் அதிர்ஷ்டகரமான வாழ்க்கையைக் குறிக்கிறது. முன்னேற்றமும் கீர்த்தியும் பொருளும் கிட்டும். ஆனால் ஜாக்ரதையாக இல்லாவிடில் அதிர்ஷ்டம் மாறிவிடும். பலருக்கு ஆசிரியராக இருக்கும் வாய்ப்பு உண்டாகும்.



## 90

இந்த எண் 9 எண்ணிற்குப் பூரண பலத்தைக் கொடுப்பதாக இருந்தால் இதனால் குறிக்கப்படுவர் தன் காரியத்தைச் சாதித்துக் கொள்ள அசுரப் பிரயத்தனம் செய்வார்கள்; வெற்றி நிச்சயம். ஐஸ்வர்யத்தில் குபேரனைப் போல ஆவார்கள். புகழும் உண்டாகும். அருள் நாட்ட முடையவர்களுக்கு இவ்வெண் விரும்பத்தக்கதல்ல.

## 99

இவ்வெண் பெயராக வந்தால் புத்தியைத் தவறான வழிகளில் செலுத்தும். வெற்றியுடன் விரோதங்களும் உண்டாகும். எதிரிகளால் தாக்கப்படுவதைக் குறிப்பதால் இது விசேஷமான எண்ணல்ல. (கல்வி பொருள், சுகம் உண்டு.)

## 108

இவ்வெண் பெரிய பதவிகளையும் காரிய சித்தியையும் தரவல்லது. எண்ணியபடியே எல்லாம் முடியும். நல்ல முயற்சிகளையும் அதற்கொத்த பலன்களையும் தருவதால் இதை மிக்க அதிர்ஷ்டகரமானதாகக் கருதலாம்.

அசாத்தியமான சரீரப் பிரயாசை. தேவையான காரியங்களில் ஈடுபடுபவர்கள் இவர்களே. பல தேசங்களை சைக்கிளிலேயே சுற்றி வருதல், கால் நடையாகவே பிரயாணம் செய்தல், பல மைல்கள் நீந்துதல். மலை ஏறுதல் முதலிய காரியங்களில் ஈடுபடுவார்கள். பெயர் எண் 9 வந்தாலும் இப்படியான காரியங்களில் ஈடுபடுத்தும்.

# உடல்-நோய்-உணவு-மூலிகை

## எண்காரர் 1

மிகுந்த கெம்பீரமான தோற்றமுடைய இவர்கள் பெரும்பாலும் நடுத்தரமான உயரமுடையவர்களே. மார்பு அகன்றிருக்கும். அகன்ற நெற்றியும், விசாலமான கண்களும் உடைய இவர்களது பார்வை குழந்தைகளுடைய பார்வையைப் போல் களங்கமற்று இருக்கும். சரீரம் கெட்டிப்பட்டு இருக்கும். கழுத்து வலுவாகத் தோன்றும், பேசும்போதும் கவனிக்கும்போதும் கழுத்தை மிடுக்காகவே திருப்புவார்கள் இந்த ஆதிக்கரில் பெண்கள் வயதுக்கு மிஞ்சிய வளர்ச்சியுடன் காணப்படுவர். இந்த எண்ணிக்கையுடையோர் கண்ணுடியணிவது சர்தாரண விஷயம். முக்கியமாக 10-ந் திகதி பிறந்தவர்களில் நூற்றுக்கு 99 பேர் கண்ணுடியோடே தான் காட்சியளிப்பர். நாகரிக மானவர்களாதலால் கண்ணுடிச் சட்டத்தை அடிக்கடி மாற்றியவண்ணமிருப்பர்.

அநேகருக்குச் சிறு வயதிலேயே கண்பார்வை கெடுகிறது. சூரிய வெளிச்சம், இவர்கள் பொது ஆரோக்கியம் சிறிது குறைந்தால்கூட கண்களைக் கூசச் செய்யும். இவர்கள் வெயிலில் தலையில் தொப்பியின்றி போவது நல்லதல்ல. சுமார் நாற்பது வயதுக்கு மேற்பட்டு இவர்களுக்கு இரத்த ஓட்ட சம்பந்தமான வியாதிகள் வரும், பெரும்பாலும் இவர்களைப் பீடிக்கின்ற வியாதிகள் இருதய துடிப்பும் இரத்த இறுக்கமும்தான். சுகியான இவர்கள் மிதமாகவே சாப்பிடுவார்கள். உணவுப் பொருட்களைப் பற்றிய ஆராய்ச்சி இவர்கட்கு உண்டு. நோய்வார்ய்ப்படாமலிருக்க இவர்கள் காலையில் ஒரு தேக்கரண்டி தேனை நீரிலோ அன்றிப் பாலிலோ கலந்து அருந்திவர வேண்டும். காலையில் மிகக் குறைவாகவே சாப்பிடவேண்டும். பித்தம்



குறைந்த தேகமுடையவர்களாதலால் பசியில்லாத வேளைகளில் சாப்பிட்டால் நன்ருக ஜீரணமாகாது. பொன்னுங் காணிக் கீரை உணவிலும், ஸ்நான தைலத்திலும் சேர்த்துக்கொள்வது மிக்க நன்மையை விளைவிக்கும். இவர்கள் பொதுவாகவே இயற்கை வைத்தியத்தைத்தான் நம்புவார்கள். வைத்தியர்கள் சிகிச்சையில் விருப்பமிருக்காது.

## எண்காரர் 2

உடலமைப்பு: 2 எண்ணின் ஆதிக்கம் பூரணமாக இருந்தால் இவர்கள் நல்ல உயரமுடையவர்களாகக் காணப்படுவர். இல்லாவிடில் கட்டையாகவே தோன்றுவர். பொதுவாக இந்த ஆதிக்கரெல்லாம் சதைப் பற்றுடைய பருத்த சரீரமுடையவர்களே. பருமனுகத் தோன்றிய போதிலும் பலமுடையவர்களல்லர். உருண்டையான தலையும் குட்டையான கேசமும் உடையவர்கள். பகற்கனவு காண்கிருர் என்பதை கண்கள் உணர்த்தும். பற்கள் அகன்று நீண்டிருக்கும். பெரும்பாலும் மூக்கு மேல்நோக்கி நிமிர்ந்திருக்கும். அல்லது நடுவில் கனமான முடிச்சுடன் தோன்றும். பற்களும் சரியான வரிசையில் அமைவதில்லை. கழுத்து சதைப்பற்றிருக்கும். கால்கள் வலிமையாக இராது. சீக்கிரம் தொந்தி விழுந்துவிடும். இவர்கள் இளைத்துக் காணப்பட்டால் சந்தேகமில்லால் சரீரத்தில் உஷ்ண சம்பந்தமான நோய் இருக்கிறதென்று அறியவும். இவர்களுக்குச் சரீரம் வயிற்றுப் பாகத்தில்தான் பருக்குமேயன்றி கை, கால்களில் தசைநார்கள் பலம் பெற்றிராது. கைகள் குச்சி போல்தான் அமைந்திருக்கும்.

நோய் – உணவு; இவர்களுக்கு ஜீரணக் கருவிகள், மூத்திரக் கர்ய்கள் சம்பந்தமான நோய்களே விரைவில் ஏற்படும். சீரணக் கோளாறுகள், நீரிழிவு,

( Diabetes ) முதலியவைகளே இவர்களது வியாதிகள். பெரும்பாலும் இந்நோய் இவர்களைப் பற்றுகிறது (சோம்பல் உடையவர்களாய் உடலுழைப்பின்றி வாழ்வது ஒரு முக்கிய காரணமாம்). கண்ணில் நீர் வடிவதும் கண் நோய்கள் ஏற்படுவதுங் கூட உண்டு.

மற்ற உணவுகளைவிட திரவ பாதார்த்தங்களையே இவர்கள் அதிகமாக விரும்புவார்கள். ரொம்பவும் கண்டிப்பாக இல்லாவிடில் காபி, தேவிலை, சாராய வகைகளை மிதமிஞ்சி அருந்த நேரும். (இவர்களுக்குக் குடிப் பழக்கம் ஏற்பட்டு விட்டால் பின்னர் நிதானமிராது. தணியாத தாகம் தோன்றும்.) இவர்களது சரீரத்திற்கு நீர் அதிகம் தேவை. அடிக்கடி நீர் பருகுதல் நலம். உணவிலும் நீர்ப் பண்டங்களான பூசனி, பரங்கி, வெள்ளரி முதலிய காய்களையும், முட்டைக்கோஸ், முளைக்கீரை, மற்ற எல்லாக் கீரைகளையும் வழக்கமாகச் சேர்த்து வருதல் நலம். பழங்களிலும் முலாம், தர்பூஸ், வாழை, மாதுளை முதலியவை நன்மையானவை. மங்குஸ்தான் போன்ற நீரும் சதையும் கொண்ட பழங்களெல்லாம் நன்மைதரும். இவர்களது ஆரோக்கியத்தை விருத்தி செய்யக்கூடிய மூலிகை வல்லாரை. இது நீரிழிவு வராமல் தடுத்து ஆயுளை வளர்க்கும். இதைச் சாப்பிட்டு வர சரீர உஷ்ணம் நீங்கும். இப் பச்சிலையின் காம்பில் தோன்றும் வெள்ளையான பாகம் சர்க்கரையை சிறுநீரிலிருந்து பிரிக்கும் வலிமையுடையதென ஆராய்ச்சியாளர் கண்டு பிடித்திருக்கின்றனர். முருங்கைக் கீரையும் சமைத்து உட்கொண்டால் சிறுநீரில் உள்ள சர்க்கரையை வெகுவாகக் குறைத்து விடும். தாமரைக் கிழங்கும் பொதுவாக நன்மை தரும்.

---

## எண்காரர் 3

இவர்களது நடையுடை பாவனைகளில் அடக்கமும், கம்பீரமும், சாந்தமும் உறுதியும் காணப்படும் ( யானை போன்று).

இயற்கையாகவே ஏகாக்ர சித்தம் உடைய இவர்களுக்கு சக்தி உடலோடு கலந்து நிற்கும். கண்கள் ஒளி வீசும். வாக்கு கம்பீரமாகவும். கேட்பவர் மனதை வசப் படுத்துவதாகவும் இருக்கும். குரலும் "கணீரென" ஓசை நிறைந்ததாக விளங்கும். இவர்களில் அனேகர் பிரசங்க சக்தி மிக்கவர்களாக இருப்பதன் ரகஸ்யம் இவர்களது காந்தசக்தி நிறைந்த கண்களும், கேட்பவர் மனதில் பதியும் குரலும், கம்பீர வசனங்களுமேதான்.

இவர்களில் பெரும்பாலானோர் சுமார் 39 வயதளவில் எக்ஸிமா என்கிற படைபோன்ற தோல்வியாதியினால் பீடிக்கப்படுகின்றனர். இவர்களுக்கு ஏற்படும் சொறி, சிரங்கு முதலிய சாதாரண நோய்கள் கூட சுலபத்தில் காய்வதில்லை. சிகிச்சையால் குணமாகாத எக்ஸிமா வராமல் தடுப்பதே சிறந்த காரியமாகும். (இந்த நோயால் வருந்தும் அநேகர் பல்லி எச்சமிட்டதிலிருந்துதான் இந் நோய் தங்களுக்கு ஏற்பட்டதாகக் கூறுகின்றனர்) பத்திரிகைகளிலும், முன்பு இங்கிலாந்தின் பிரதமராக இருந்த க்ளமன்ட் ஆட்லி இந்நோயால் அவதியுற்று எவ்வளவோ வைத்தியங்கள் செய்தும் பலனின்றி ஜலம் வடிந்து கொண்டிருந்ததால் உட்கார முடியாமல் பார்லிமென்டுக்கு அடிக்கடி வரமுடியாமல் இருந்தார் என்பதை வாசகர்கள் படித்திருக்கலாம். ஆகையால் அந்நோய் வருமுன் தடுக்க வேண்டியதென்பதை நன்கு உணரவும்.

**உணவு — மூலிகை:-** இவர்களது சரீரத்திற்கு தானியங்களில் கோதுமையும், பழங்களில் தக்காளி, எலுமிச்சை, மாதுளை, அன்னாசியும் நன்மையளிப்பவை. பாதாமி ஒத்துக் கொண்டால் சிறிதளவு சேர்க்கலாம். தோல் சம்பந்தமான நோய்கள் வராமல் தடுக்கவும், ஜீவசக்தியை வளர்க்கவும் 3 எண்காரர்களுக்கான மூலிகைப் பொருள் நெல்லிக் கனியே. கனியிலா நாட்களில் வற்றல் உபயோகிக்கலாம்.

---

## எண்காரர் 4

*சரீரம்:* பெரும்பாலும் இவர்கள் இரட்டை நாடியானதாகக் கூறப்படும் சிறிது பருத்த சரீர முடையவர்களே. வசதிகள் இருந்தால் நன்றாகப் பெருத்துவிடுவார்கள். நடுத்தரமான உயரமானவர்களாகவே காணப்படுவர்.

(பிறந்த தேதியும் கூட்டி வருகிற எண்ணும் நான்காகவே இருந்தால் நல்ல உயரமாகவும் பருமனாகவும் இருப்பார்). முகம் பெரியதாகவும் கம்பீரமானதாகவும் இருக்கும். இரண்டு எண்ணிக்கைக் காரர்களைப் போல் வெளிப்பட்டு இராமல், கண்கள் சிறிது உள்ளடக்கியே இருக்கும். சிரிக்கும் போது கண்கள் சுருங்கி மூடிக்கொண்டதுபோல் காணப்படும். வட்டமான பெரிய தலையும் அடர்த்தியான தலை மயிரும் இக்கும். அலைபோன்று தலை மயிர்கள் சுருண்டிருக்கும் (சுருட்டை யல்ல). இவர்களுக்குச் சரீரத்தில் நரம்பு சக்தியும் ஜீவ சக்தியும் அதிகமாகவே இருக்கும். இவர்கள் பெரும்பாலும் நோய் வாய்ப்படுவதில்லை. மனச்சோர்வும், தவறான காரியங்கள் செய்த பின்னர் வருந்துதலுமே இவர்களுக்கு ஆயாசத்தைத் தரும். எந்நோய் வந்தாலும் இவர்களுக்கு அது சிகிச்சையால் நீங்கிவிடும். யோகப் பயிற்சிக்கு இவர்களது சரீரம் மிக்க ஒத்தது. வெகு சீக்கிரம் பயிற்சிகள் பலனளிக்கும். இவ்வெண் குறிக்



கும் சிறுவர், சிறுமிகளை மித ஆகாரம் புசித்துப் பழக்க வேண்டியது அவசியம். இல்லையேல் நாற்பது வயதுக்கு மேற்பட்டு சோகை (சிலருக்குப் பால்யத்திலும் ஏற்படுவதுண்டு) பசியின்மை, குடல், பின் தலை, இடுப்பு இப் பாகங்களில் ஓர்வித வலி முதலியவை ஏற்படும். கூடிய வரை ஜீர்ண சக்தியை அதிகரிக்கும் உணவுகளை உட்கொண்டு வருதல் நலம்.

---

## எண்காரர் 5

நடுத்தரமான உயரமும் சிறிது பருமனான சரீரமும் இவர்களுக்கு அமையும். (கூட்டி வருகிற எண் 6, 1, 9 முதலியவைகளாக இருந்தால் நல்ல உயரமாக இருப்பார்கள்). களை வீசும் முகமும், ஆவலையும், உற்சாகத்தையும் ஊட்டக்கூடிய ஒளி வீசும் கண்களும் இருக்கும். முகம் "துருதுரு" என்றிருக்கும். (இதற்கு வேறு தமிழ் வார்த்தை யானறியேன்) பார்வையிலும் பேச்சிலும் காந்த சக்தியிருக்கும். கைகள் ஏதாவது செய்தவண்ணமிருக்கும். எண்ணின் பலம் குறைந்தால் உடம்பு இளைத்து எலும்புக்கூடு போலாகிவிடும்.

சதா யோசனை புரிவதால், மனம் அலைந்துகொண்டு சாந்தியை இழக்கும். தூக்கம் கெடும். நரம்பு பலஹீனம் பாரிச வாயு, திடீரெனக் கைகள் அல்லது கால்கள் சோர்வடைதல், மூளை பலஹீனம், சித்தப்பிரமை, காக்கை வலிப்பு முதலான நரம்புகள் சம்பந்தப்பட்ட கோளாறுகள் ஏற்படுவதுண்டு. சிறு வயதில் வைசூரி காண்பதுண்டு.

எந்நோய் வந்தாலும் சமாளிக்கக்கூடிய அளவு சக்தி உடம்பில் உண்டாக நல்ல தூக்கம், சாந்தமான மனோநிலை இவைகளை இழக்காமல் காப்பாற்றவும், மனதை

உற்சாகத்தில் வைத்துக்கொள்ள உதவும் ஆசனங்கள் பிராணாயாமம் முதலிய சாதனங்கள் வெற்றியடையப் பெருந்துணை புரியும். இந்தியப் பிரதமர் காலஞ் சென்ற ஸ்ரீ ஜவகர்லால் நேரு 14 ந் தேதி பிறந்தவராக இருந்தும் தினம் அரை மணி நேரம் சிரசாசனம் செய்ததன் மூலம் இறுதி வரை இளைஞர் போன்ற திடகாத்திரத்துடன் இருந்ததை யாவரும் அறிவோம். நம்மில் எவரும் அவரைவிட அதிக வேலை செய்வதில்லையாதலால் அவரை சரியான உதாரணமாகக் கொண்டு பின்பற்றலாம். இடமாற்றம் ஓய்வு, தூக்கம், அமைதி இவைகள் சாதாரணமாக 5 எண்ணிக்கைக் காரர்களுக்குப் போதுமான மருந்து. எண்ணெய் ஸ்னானம் சரிவர செய்து வந்தால் சுரமோ வைசூரியோ காணாது.

வால்நட், பிஸ்தா முதலான புஷ்டியளிக்கக் கூடிய பருப்புகள், சாலாமிஸ்ரீ சபேத்துமுசலி முதலிய தாது புஷ்டி, நரம்புகளுக்குப் பலம் அளிக்கும் பொருள்கள், பசுவின் பால், நெய் முதலியவைகளும் அருந்த நலம் தரும். அத்திப் பழமும் ஓட்ஸ் தானியமும் கிடைக்கிற வரை சேர்த்துக் கொள்ளலாம். எல்லாக் கனிகளும் நன்மை தரும்.

## எண்காரர் 6

சரீரம்: ஸ்திரீ அம்சமானதால் ஆண்களும் பெண்கள் போன்ற கவர்ச்சியே உடையவர்களாகக் காணப்படுவர். அழகுக்கு இவர்களே அளவுகோல். நீண்டு நன்கமைந்த கண்கள் காந்த சக்தியுடையனவாக இருக்கும். கேசம் அழகாக சுருண்டிருக்கும். அமைப்பான மூக்கு நேர்க்கோடு போல வளைவின்றி இருக்கும். வட்ட வடிவமாகவோ அல்லது கோளமாகவோ முகம் காணப்படும். பற்கள் உறுதியாகவும் பிரகாசமாகவும் இருக்கும். கன்னம் சதைப்பிடித்து இருக்கும். சரீர அமைப்பு செதுக்கிவைத்த பதுமை



போல இருக்கும். குளிர்ந்த பார்வை உண்டு. பார்வைக்கு ரம்மியமான இவர்கள் நடுத்தரமான உயரமுடையவர்கள். (மற்ற எண்ணைப் பொறுத்து ஓரளவு உயரம் முதலியவை மாறும்). உடல் ஸ்பரிசத்திற்கு மென்மையாக இருக்கும். மோவாய் வளைந்து சதைப்பற்றி இருக்கும். கழுத்தும் சதைப்பற்றி வலிவாக இருக்கும். வாயைத் திறந்தாலேயே சிரிப்பது போலத் தோன்றும். ஒரே வாக்கியத்தில் சொன்னால் அங்கங்களெல்லாம் அளவிட்டுச் செய்தது போலத் தோன்றும். வேலை யொன்றும் செய்யாமல் இருந்தால் இடுப்பு, பிருஷ்ட பாகங்கள்தான் முதலில் இவர்களுக்கு சதைப்பிடிக்கும். காதலுக்கு ஏற்ற மனதைப் போலவே சரீரமும் உடையவர்கள். வயோதிகப் பருவத்திலும் அழகு குறையாது.

நோய்: காற்றோட்டமான இடத்தில் வாசம் செய்யாவிடில் இவர்களுக்கு இருதய பலவீனமும் அதைப் பற்றின நோய்களும் உண்டாகும். பெரும் பாலானோர் இருதய நோய்களையும் இரத்த ஓட்டக் கோளாறுகளால் நேரும் வியாதிகளையும் அடைகின்றனர். ஸ்திரீகளுக்குப் பிரசவ காலங்களில் பால் கட்டிக்கொள்வதால் சுரம் ஏற்படுவதும் சகஜமாகக் காணப்படுகிறது. பொதுவாக ஜனனேந்திரிய சம்பந்தமான பலஹீனமோ, வியாதியோ வராமல் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். பிரதான நோய் இருதய பலஹீனமேயாகும். மலச் சிக்கல் ஏற்படாமல் கவனித்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

உணவு, மூலிகை: இவர்கள் நோய்ப்படாமல் நல்ல ஆராக்கியத்துடன் இருக்க கீழ் கண்ட பொருள்களை அடிக்கடி உண்ணுதல் நலம். பழங்களில் தர்பூஸ், முலாம், மாதுளை, ஆப்பிள் அத்தி, திராட்சை, கிஸ்மிஸ், கொட்டைகளில் ஆப்ரிகாட், வால்நட், பாதாம், ரோஜா இதழ்களும் நன்மை தரும். இருதய பலஹீனம் இருந்தால் வைத்தியர் உத்தரவில்லாமல் பாதாம் சாப்பிடக் கூடாது. இல்

லாவிடில் வழக்கமாகச் சாப்பிட்டு வந்தால் வைத்தியரைச் சந்திக்க நேராது.

## எண்காரர் 7

உயரமானவர்களாகவே தோன்றும் இவர்கள் நல்லகளை பொருந்தின முகம் உடையவர்கள்; சிறிது வளைந்த மூக்கும். திடமான மோவாயுமிருக்கும். புருவங்கள் நன்கு அமைந்திருக்கும். மற்றபடி அங்க அமைப்புகள் மற்ற எண்ணை அனுசரித்து அமையும். மலச்சிக்கல் அவர்களது இயற்கையான சத்துரு. இதனால், பின்னர் ருமட்டிஸம் என்று கூறப்படுகின்ற பலவிதமான வாத சம்பந்தமான பிடிப்பு நோய்கள் ஏற்படுகின்றன. சிலருக்கு வியர்வை உண்டாகாமல் அதனால் தோல் உயிரிழத்தலும், கட்டிகள் முதலிய உண்டாதலும் உண்டு. ஏதாவது கடினமான வேலையோ சரீரப் பயிற்சிகளோ செய்தல் நன்மை தரும். உணவில் சூடுமானவரை கீரைகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். மற்றவைகளை விட லெட்யூஸ், முட்டைக்கோஸ், முளைக்கீரை அரைக்கீரை, நன்மையானவை, பூசினி, பரங்கி, வெள்ளரிக்காயும் ஓரளவு வெங்காயமும் மிக நன்மை தரும், பழங்களில் ரஸமுள்ள பழங்களும் நன்மையானவையே. முக்கியமானவை திராக்ஷை, அன்னாசி, கிஸ்மிஸ் பழங்களும், வாழையும் கூட நன்மையே. இவர்களது ஜீரணக் கருவிகள் மிக மென்மையானவையாதலால். சிறிது ஒத்துக் கொள்ளாத ஆகாரம் அருந்தினாலும் சரீர சுகம் கெடும். சாப்பாட்டு ருசி நிரம்ப உடைய இவர்கள் தனக்கு ஒத்துக் கொள்ளக் கூடியவைகளைச் சாப்பிட்டுவர நல்ல ஆரோக்கிய முண்டு.

---

## எண்காரர் 8

சரீரம்: இந்த ஆதிக்கரை லக்ஷணங்களைக் கொண்டு அறியும்போது நேயர்கள் குழம்பிப் போகக்கூடும். ஏனெனில் பிறந்த தேதி 8 ஆக இருந்து கூட்டுஎண்ணும் 8 ஆக இருந்தாலும், சனியினுடைய காலமாகிய ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் பிறந்திருந்தால்தான் சரீரம் சனியின் ஆதிக்கத்தைப் பிரதிபலிக்கும். இல்லாவிடில் அந்த மாதத்திற்கான கிரகத்தின் தோற்றம் ஓரளவு கலந்திருக்கும் ஏனெனில் சனியின் ஆதிக்கம் யதார்த்தமாக வெளிப் பார்வைக்குப் புலப்படக்கூடியதல்ல. பிறந்ததேதி 8 ஆக இருந்து கூட்டு எண் 5 ஆக இருந்தால் வசீகரமானவராகவும் அழகு மிக்கவராகவும் தோன்றுவர். உடலில் நோய் உள்ளவரென்பது முகத்தில் புலப்படாது. சில சமயங்களில் சனி ஆதிக்கரின் பூரணமான அழகுள்ளவர்களைக் காண நேரும். ஆனால் அவர்களது அழகின் ஆழ்ந்த தன்மை (சீதா தேவியாரின் அழகைப்போல்) துரதிர்ஷ்டத்தையே ஊர்ஜிதப் படுத்துவதாகும். இனி அவர்களது இயல்பான உருவ அமைப்பைக் கவனிப்போம். (ஆதிக்க பலம் குறைவானால் உருவ அமைப்பு மாறுபட்டிருக்குமென்பதை வாசகர்கள் நினைவில் கொள்ளவும்).

இவர் மிக உயரமாகத் தோன்றுவார். (நெட்டை) அதற்கொப்ப கால்களும், விரல்களும் மிக நீண்டு இருக்கும். முகம் நீண்டு ஒற்றை நாடியான தோற்றத்துடன் இருக்கும். பருமனானவரானாலும் கன்னம் உப்பியிராது, ஒட்டியோ, குழிந்தோ இருக்கும், கண்களும் குழி விழுந்து இருக்கும். புருவங்கள் அடர்ந்து தோன்றும். கூர்மையான பார்வை இருந்தாலும் அதில் அமைதி தோன்றாது; கலக்கமும் சந்தேகமுமே தோன்றும். மூக்கு பருமனாக இராமல் ஒடுங்கி நீண்டு, சில சமயங்களில் வளைந்தும் முனை கூராகவும் இருக்கும். இதனால் இயல்பாகவே சுவாசம் ஒரே

நடையுடன் இரார்து. சுவாச சம்பந்தமான நோய்களுக்கு இடந்தரும். வாய் பெரியதாக இருக்கும். பற்கள் விகாரமாக இருக்கும். அநேகருக்கு மிக அழகான பல்வரிசை இருந்தாலும் பற்கள் உறுதியானவை அல்ல. சீக்கிரம் கரைந்து உதிர்ந்துவிடும். ஈறுகளும் ரத்தம் குன்றி வெளுத்துவிடும். முகவாய்க்கட்டை பலத்து நன்கு தோன்றி இவர்கள் உறுதியுடையவர்கள் என்பதைப் புலப்படுத்தும். (அப்படி இல்லாவிடில் சனி ஆதிக்கம் இவருக்கு தீமையைப் புரிகிறதென்பதை அறியவும்.) ஒல்லியாக நீண்டிருக்கும் கழுத்து, எலும்பு, நரம்புகளைத் தோற்றுவிக்கும். குரலில் கவர்ச்சியிராது. தலைமயிர் முள்ளம்பன்றிபோல் குத்திட்டு நிற்கும். (தலைமயிர் ஒன்று சேர்ந்து படிந்து இருப்பது சரீரம் சூரிய ஒளியிலிருந்து வரும் உயிர்ப்பு சக்தியை வெளியிடாமல் இருப்பதைக் குறிக்கும். மயிர்கள் விரைத்து எழுந்து நிற்பதோ அந்த உயிர்ப்பு சக்தியை சரீரம் வெளியிடுவதில் முனைந்திருப்பதைக் குறிக்கும். சனி சூரியனின் சுபாவசத்துரு ஆனதால் பிணியைக் குறிக்கிற தன்மைகளை சரீரத்தில் தோற்றுவிக்கிறார். மற்ற ஆதிக்கர்களும் இப்படி தலைமயிர் மடியாமல் விறைத்து இருக்கும் காலங்களில் சரீரத்தில் சனியின் ஆதிக்கம் (சனிதிசை அல்லது ஏழரை நாட்டுச் சனி ஏற்படுவதைக் கவனிக்கலாம்.) சுபாவமாகவே இவர்களுக்கு தேகம், கை, நகங்களில் சிறிது மஞ்சள் நிறம் கலந்திருக்கும் இது பித்ததேகி என்பதைக் குறிக்கிறது. வெண்ணிறப் புள்ளிகள் தோன்றினால் இவர் அப்பொழுது தனித்திருப்பதையும் பெருத்த யோசனை வசப்பட்டிருப்பதையும் குறிக்கும். கை, நகங்கள் முதலியவை சிவந்திருந்தால், சந்தேகத்தை நீக்கிவிட்டுக் காரியத்தில் துணிந்து இறங்கி விட்டார் என அறியலாம்.

நோய் — உணவு: இவர்கள் பித்த தேதிகள். குடல் மிக்க பலஹீனமானது. சிறு வயதிலேயே அநேகருக்கு வயிற்றுவலி ஏற்படுவதுண்டு. ஆரோக்கியமாக இருந்தாலும் இவர்கள் 3[illegible]-வது வயதுக்கு மேற்பட்டு இரவில்



போஜனம் செய்யக் கூடாது. இலேசாக பழங்கள், பால் தான் சாப்பிடலாம். இவர்களுக்கு குடலைப்போலவே, மலத்தை வெளியேற்றும் அங்கங்களும் பலஹீனமாக இருக்கும். மலச்சிக்கலுக்கு இடந் தந்தால் சரீரம் உஷ்ணப்பட்டு தீராத வயிற்றுவலியையோ, ஆஸ்த்மாவையோ உண்டுபண்ணும். அதற்காக கூடுமான வரை உணவில் கீரைகளை வழக்கமாகச் சேர்த்து வரவும். மற்றபடி இவர்களிடம் காணப்படும் நோய்களாவன: தலைவலி, கிறு கிறுப்பு, ரத்தத்தில் விஷ சேர்க்கை (நான் கூறியதன்பின் அநேகர் சரீரத்தைப் பரிசோதித்துக் கொண்ட பின்னர், குடலே, அவ்விஷத்தைக் கக்குவதாகப் பரிசோதனைகள் நிரூபித்ததாகக் கூறியிருக்கின்றனர்). பூட்டுக்களை வாயவு பிடித்துக் கொள்கொள்ளல் (கீழ் வாதம்) முதலியன. இவர்கள் புகையிலை சம்பந்தமான ஒருவிதப் பொருளையும் உபயோகிக்கக் கூடாது. இப்பொழுதே விஷ சேர்க்கை இரத்தத்தில் இருக்கிறதா என்பதை அறிய கை விரல் நகங்களை கவனிக்கவும். அவைகளில் அடியிலிருந்து விரல் முனைவரை கருத்த அல்லது கருமை கலந்த பழுப்பான கோடுகள் காணப்படுவது விஷ சேர்கையைக் குறிப்பதாகும். நகங்கள் நடுவில் இட்லிபோல் உப்பி இருந்தால் குடல் பலஹீனப்பட்டு வருவதை அறியலாம். நகத்திலே மேடுபள்ளமான வரைகள் தோன்றினால் வாயுப்பிடிப்பு சீக்கிரமே ஏற்படுவதை உணர்த்தும். மாமிசம் சாப்பிடுபவர்களானால் உடனே அவ்வுணவை நிறுத்தவும். காபி, டீ முதலிய பானங்களில் நிதானம் தேவை. பழங்கள் உண்ண உண்ண வயிற்று அங்கங்கள் இவர்கட்குப் பலப்படும். இவர்கள் மிக அவசியம் தினசரி சேர்த்துக்கொள்ள வேண்டியது எலுமிச்சம் பழம். இதன் சாற்றை வெள்ளைச் சர்க்கரை சேர்க்காமல் உபயோகிக்க வேண்டும். ஆனால் வாழை, கிஸ்மிஸ் பழங்களும் நன்மையானவை. காய்கறிகளில் கரட், முள்ளங்கி, கருணைக்கிழங்கும், அரைக்கீரையும் மிகுந்த நன்மையானவை.

## எண்காரர் 9

**உடலமைப்பு:** இவர்கள் பொதுவாக நடுத்தரமான உயரமானவர்களாகவே காணப்படுவர். நுண்ணிய மனோ சக்திகள் உடையவர்கள் மாத்திரம் உயரமாகக் காணப்படுவர். இவர்கள் திட சரீரிகளாக இருப்பர். சரீர உழைப்பையும் விரும்புவர். மற்றவர்களோ எனில் நடுத்தர உயரமானவரானாலும் குட்டையானவர் போலத் தோன்றுவர். இவர்கட்கு தேகம் கட்டுமஸ்தாக இருக்கும். புஜங்களும், மார்பும் சதைப்பற்றிக் காணபடும். சதைகள் திரண்டு நிற்கும். இவர்களைப் பார்க்கும்போது தண்டபாணித் தெய்வம் நினைவுக்கு வரும்படி இவர்களது சரீரம் அமைந்திருக்கும். கொஞ்சம் தேகப்பயிற்சி செய்தால் கூட இவர்களது உடல் பயில்வான் போன்ற தோற்றத்தையுமடையும். பற்கள் நீண்டு பெரியனவாக இருக்கும். (இவர்களில் மிகுந்த பலிஷ்டர்களுக்கு மாத்திரமே மிகவும் சிறியதான பற்கள் அமையும். வாய் பெரிதாக இருக்கும். பேசும்போது கோணலாகத் தோன்றும். மூக்கு நீண்டு பெரியதாகக் காணப்படும். நிமிர்ந்து வேகமாக நடப்பார்கள். தொடைகள், மார்பு, வயிறு முதலிய பாகங்கள் வலிமை பெற்று அமைந்திருப்பதால் பார்வைக்கு இவர்கள் பராக்கிரமசாலிகளாகத் தோன்றுவர்.

**நோய் — உணவு:** இவர்களுக்குச் சரீரம் உஷ்ணமானதாகவே காணப்படும். மூலாதாரத்தில் உஷ்ணம் உடையவர்களாதலால் வயிற்றையே இவ்வுஷ்ணம் மிகவும் பாதிக்கும், இவர்களுக்கு இரத்தம் உஷ்ணத்தால் பாதிக்கப்பட்டதாதாகவே இருக்கும். ஒத்துக்கொள்ளாத உணவுகளை உட்கொண்டால் உடனே இவர்களது சரீரம் நோய்ப்படும். 9 எண்காரர் யாராவது ஆயுள் முழுவதும் உடம்பில் வடு ஏற்படாதபடி வாழ்ந்தாரானால் அது ஒரு மிகப் பெரிய அதிசயமே. ஆப்ரேசன்கள் இவர்களுக்குப் பல தடவைகள் நடக்கும். இரத்தக் கட்டிகள், குடற்புண்கள், இரத்தம் விஷத்தன்மையடைதல், மூலரோகம் முதலியவைகளே இவர்களுக்கு வரும் நோய்கள். சுரமும் சிலருக்கு வருவதுண்டு. நெருப்புக் காரணங்களும், விபத்துக்களுங்கூட இவர்களுக்கு மிகவும் சகஜமாக ஏற்படுவதுண்டு. இந்த எண்ணிற்கு வலிமை அதிகமானால் வாழ்க்கை ரத்தக்காயத்தின் மூலந்தான் முடியும். உணவு விஷயத்தில் கீழ்க்கண்ட குறிப்புகளைப் பின்பற்றி வந்தால் நோயற்று வாழலாம். இவர்கள் சரீரத்திற்கு மிக்க நன்மை புரியக்கூடியதான வெங்காயத்தை அடிக்கடி உணவில் சேர்த்து வரவேண்டும். கூடுமானால் வெண் பூண்டும் சேர்த்துக்கொள்ளலாம், (ஸ்திரீகள் சேர்த்துக்கொள்ள வேண்டியது அவசியம்). கீரைகளில் புளிச்ச கீரை ஒன்றுதான் இவர்களுக்கு நன்மை தரக்கூடியது. கூடுமானவரை மிளகாயைக் குறைக்க வேண்டும். அறவே நீக்குதல் மிக்க நன்மை விளைவிக்கும். சிறிதளவு மிளகு சேர்த்து வருதல் நலம். இஞ்சி அடிக்கடி சேர்த்துக்கொள்ளலாம். சேப்பங் கிழங்கு, கருணைக் கிழங்கு, வெண்டைக்காய் இவர்களுக்கு ஒத்த பண்டங்களாகும். மாமிச உணவுகள் குடல் நோய் ஏற்படச் செய்யும். வாசனை வீசக்கூடிய மசாலை சேர்த்த உணவுகளை அறவே விலக்க வேண்டும். சரீரம் நோய்வாய்ப்பட்டால் பழங்களையே ஆகாரமாகக் கொண்டுவந்தால் நோய் நீங்கி சீக்கிரம் குணம் பெறலாம். இவர்கள் எண்ணை ஸ்னானம் தவறாமல் செய்து வர வேண்டியது அவசியம்.

# உங்கள் பிறந்த திகதிகளின் பலன், அதிர்ஷ்ட காலம், முக்கிய நாட்கள், துரதிர்ஷ்ட தினங்கள், ஆடைகள், நிறம், உலோகம், இரத்தினம்.

## எண் 1 சூரியன்

### பிறந்த திகதிகள் 1, 10, 19, 28

1-ம் திகதி பிறப்போருக்கு பிறர் அபிப்பிராயங்களைக் கேட்பதில் பொறுமை இராது. உரத்த குரலில் மறுத்துப் பேசுவார்கள். மனதில் உள்ளதை அப்படியே வெளியிடுவார்கள். கவர்ச்சியாகவோ, நயமாகவோ பேசத் தெரியாது. தன்னிஷ்டப்படியே எல்லோரும் நடப்பதையே விரும்புவார்கள். மிதமிஞ்சின தன்னம்பிக்கை உடையவர்கள். முன்னேற்றத்தில் தீவிர ஆர்வமிருக்கும்.

10-ம் திகதி பிறப்பவர்களிடம் நிதானம் இருக்கும். சாதுவாகவே நடந்து கொள்ளுவர். மனதில் உள்ளதை வெளியிடாமல் இருக்கத் தெரியும். பிரபலம் ஏற்படும். அன்பும், நேசமும் இவர்களது வாழ்க்கையில் அதிகம் காணப்படும். பழகுவதற்கு மனோரம்மியமானவர்கள்.

19-ம் திகதி பிறப்பவர்கள் மிகுந்த மனோசக்தி உடையவர்கள். பார்த்தால் பசு, பாய்ந்தால் புலி என்று இவர்களைக் கூறலாம். இவர்கள் எக்காரணங்களைக் கொண்டும் அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ள மாட்டார்கள். புலமை உண்டு.

28-ம் திகதி பிறப்பவர்கள் பார்வைக்கு அழகாக இருப்பார்கள், சிரித்துப் பேசுவார்கள், ஸ்திரீத்தன்மைகள்



காணப்படும். சூரிய ஆதிக்கம் இவர்களுக்கு குறைவாகவே இருப்பதால் கண்ணோடி தேவையில்லை. யாரையும் சுலபமாக நம்பி விடுவார்கள். ஏமாந்து போவது சகஜமே.

**அதிர்ஷ்ட காலம்:** 1, 10, 19 திகதிகள் மிக்க அதிர்ஷ்டகரமான நாட்களாகும். முக்கியமான எல்லாக் காரியங்களையும் இத்திகதிகளிலேயே செய்துவரப் பழகிக் கொண்டால் அநேக அபூர்வமான பலன்களை சீக்கிரமே அடையலாம். 28-ந் திகதி மாத்திரம் நீடித்து பலன் தருவதாக இல்லை. இதைத்தவிர திகதி மாதம் வருடம் மூன்றையும் கூட்டினால் 1 வரும் தினங்களில் செய்யுங் காரியங்கள் நீடித்து நல்ல பலன்களையே தந்து வரும்.

**முக்கிய நாட்கள்:** இவர்களுக்கு 4, 13, 22, 31 திகதிகளில் அநேக முக்கிய காரியங்கள் நடைபெறும். இந்தத் திகதிகளின் சுபாவம் எதிர்பாராத மாறுதல்களைச் செய்வதே. நன்மைகள் தானே வரும். ஆனால் இவர்களாக ஒரு முயற்சியையும் இத் திகதிகளில் ஆரம்பிக்காமலிருப்பது நன்மை தரும்.

**துரதிர்ஷ்ட தினங்கள்:** 8, 17, 26 - திகதிகள் ஒவ்வொரு மாதத்திலும் இவர்களைத் துன்புறுத்தும், இத் தினங்களில் வீண் சிரமங்களும், மனஸ்தாபங்களும், கஷ்டங்களும், தோல்வியும் வழக்கமாக ஏற்படும். இத் திகதிகளில் எக்காரியத்தைத் தொடங்கினாலும் அதனால் வீண் கஷ்டங்களுக்கு உள்ளாவார்கள். இத் திகதிகளில் பிரயாணத்தைத் தொடங்கினால் நோய்வாய்ப்படுவது நிச்சயம். போகிற காரியமும் தோல்வியடையும். இந்த மூன்று திகதிகளில் மிக்க தீமை பயப்பது 26-ந் திகதி, 8 அதற்கு அடுத்தபடி. 17-ந் திகதி அதிக கெடுதியை விளைவிக்காது. இந்தத் திகதிகளில் ஏதாவதொன்றில் அதிர்ஷ்டகரமான காரியங்கள் நடந்து சந்தோஷமாக இருந்தால் அதிர்ஷ்ட-தீபம் சீக்கிரமே அணையப் போகிறதென்பதை அறியவும். இத் திகதிகளில் சிரமப்படுவது நல்ல அதிர்ஷ்டத்தின் குறி

மாதம், [illegible] திகதியில் பெரிய காரியம் எதையாவது தொடங்கி அது தோல்வியடைந்ததானால் பிறகு பல வருடங்களுக்குத் தொட்டதெல்லாம் தோல்வியடையும், திகதி, மாதம், வருடம் மூன்றையும் கூட்டினால் 8 வரும் தினங்களில் தொடங்கும் காரியங்களும் நீடித்து நல்ல பலன் தரமாட்டா.

ஆடைகள் - வர்ணம்: மஞ்சள் நிறமே மிக்க அதிர்ஷ்டம் தருவதாகும். மிக இலேசான வெண்மை கலந்த மஞ்சளிலிருந்து ஆழ்ந்த மஞ்சள் வரை எல்லா நிறங்களும் பொருந்தும். வெளிரான சிவப்பு, வெளிர் நீலமும் கூட நன்மையானவையே. கறுப்பு மண்ணிற (BROWN) ஆடைகள் துரதிர்ஷ்டத்தை உண்டு பண்ணும், கரையில் கூட இந்நிறங்கள் உதவாது.

உலோகம்: தங்கம் இவர்களது சரீரத்திற்கு நன்மை தரும்.

இரத்தினம்: மாணிக்கமே இவர்களுக்கு அதிர்ஷ்டத்தை விருத்தி செய்வதாம். டொபாஸ் (TOPAZ) கற்களும், மஞ்சள் புஷ்பராகமும் சரீர சுகத்தையும் வெற்றியையும் தரும். சிறுவர்களானால் டொபாஸ் அணிவதால் எலும்புகள் வலுவடைந்து நல்ல சரீர வளர்ச்சி ஏற்படும். வயது வந்தவர்கள் மாணிக்கமோ, கனகபுஸ்பராகமோ அணியலாம்.

## எண் 2. சந்திரன்

## பிறந்த திகதிகள் 2, 11, 20, 29

2-ந் திகதி பிறப்பவர்கள் மிதமிஞ்சின கற்பனா சக்தியும், உயர்ந்த இலட்சியங்களும் உடையவர்களாக இருப்பார்கள். 11, 20, 29 திகதிகளில் பிறந்தவர்களை விட



பயந்த சுபாவம் உடையவர்களாயும், சாந்தமானவர்களாயும் காணப்படுவர். மனோ சக்திகளே மிகுந்தவர்களாதலால் தீவிரமான கற்பனைகள், ஆராய்ச்சிகள் முதலியவைகளில் ஈடுபடுவார்கள். சமூகத்தை திருத்தி அமைப்பதைப் பற்றி புரட்சிகரமான எண்ணங்கள் உண்டு, ஆனாலும் இவர்கள் சண்டையையும் இரத்தம் சிந்தும் காட்சிகளையும் விரும்புகிறவர்களல்லர், பேனா வீரர், ஏமாற்றப்பட்ட போதிலும் இவர்களுக்குக் கோபம் அதிகமாக உண்டாகாது. எழுத்துமூலமும் வாயாலும் சண்டை போடுவதில் வீரராவர்.

11-ந் திகதி பிறப்பவர் 2, 20, 29 திகதிகளில் பிறப்பவர்களை விட தெய்வநம்பிக்கையும் தெய்வ அனுக்கிரகமும் உடையவர். நம்பிக்கையாலேயே எந்தக் காரியத்தையும் மிக எளிதில் சாதித்து விடுவார்கள், இந்தத் திகதியில் பிறக்கும் குழந்தைகளை தெய்வநம்பிக்கை உடையவர்களாக வளர்ப்பது பெற்றோர் கடமையாகும். படிப்பு, செல்வம் முதலிய வசதிகள் இல்லாமலிருந்தும் ஆழ்ந்த நம்பிக்கை ஒன்றையே துணையாகக் கொண்டு மிக எளிய நிலையிலிருந்து மிக உயர்ந்த நிலைமையை அடைவர். இவர்களுக்கு நம்பிக்கையால் சாதிக்க முடியாதது ஒன்றுமில்லை. (2, 11 திகதிகளில் பிறப்பவர்களுக்கு தெய்வநம்பிக்கை அதிகம்). சாந்தியை விரும்புவார்கள். மற்றவர்களுக்குத் தீங்குத் புரிய நினையார்கள். சமாதானத்தில் விருப்பமிருக்கும். சினேகிதத்திற்கு கட்டுப்படுவார்கள்.

20-ந் திகதி பிறப்பவர்கள் மிதமிஞ்சின கற்பனா சக்தியும் தெய்வ அருளும் உடையவர்கள். சுலபமாக உலகம் இவர்களை வழிகாட்டியாக எண்ணி வழிபடும். சுயநலமின்றி வாழ்ந்தாரானால் மனிதரில் தேவராவர். சுயநலம் வளர்ந்தால் தன்னையும் தன்னைச் சார்ந்தோரையும் கஷ்டங்களுக்கு உள்ளாக்கி விடுவார்கள். தெய்வ சக்தியை இலாபத்தைக் கருதிச் சிதறடிப்பர். பேராசையை நீக்கினால்

மிக்க கண்ணியம் பொருந்தின வாழ்க்கை அமையும். அனே கருக்குச் சிறந்த வாழ்க்கை வழிகாட்டியாக அமைவார்.

29-ந் திகதி பிறந்தவர்கள் சாந்தியையும் சமாதானத்தையும் விரும்புபவர்களல்லர். இவர்கள் மற்றவர்களை சிரமப் படுத்தவே பிறந்தவர்கள் என்று தோன்றுகிறது. சதா வீண் சண்டை போட்ட வண்ணமே இருப்பார்கள். ஏன் சண்டை போடுகிறோம் என்று நினைக்காமலே சண்டை போடுவார்கள். நண்பர்கள் எல்லோரும் தன்னை ஏமாற்றுவதாகக் கூறுவர். பிறருக்கு உதவி செய்ய இவர்களுக்கு இலேசில் மனம் வராது. சுய காரியப்புலி. எவரிடமும் சமாதானமாக இரார். மிகவும் நல்லவர் போல நடிப்பார்கள். வீராப்பு அதிகம் பேசுவர். ஆனால் கோழை உள்ளம் படைத்தவர்கள். நிரம்பவும் பயம் உள்ளூர இருக்கும். எதிரி மிஞ்சினால் உடனே பயந்து போய்விடுவார்கள். பயப்படுபவர்களை ரொம்பவும் விரட்டுவார்கள். எதற்கும் ஆட்சேபனை சொல்வார்கள். சிறிய சண்டைக்கும் கோட்டுக்குப்போக விரும்புவர். சிறு வயதில் பெற்றோர் இவர்களது துர்க்குணங்களைத் திருத்தாவிடில் உலகிற்கே தீங்கிழைத்தவர்களாவார்கள். துஷ்ட சிநேகிதர்களை அடையாமல் பாதுகாக்க வேண்டும்.

அதிர்ஷ்டகாலம்: 7, 16, 25 திகதிகள் மிக்க அதிர்ஷ்டமான தினங்கள். திகதி மாதம் ஆண்டு மூன்றையுங் கூட்டினால் 7 எண் வருகிற தினங்களும் நன்று. 25-ம் திகதிக்கு மற்ற இரு திகதிகளைவிட வலிமை அதிகம். இதைத் தவிர 1, 10, 19 திகதிகளும் சாதகமான நாட்களாகும். செய்கிற காரியங்களுக்குப் பிறர் ஒத்தாசை கிடைக்கும். கூடிய வரை புது முயற்சிகளை 2, 11, 20, 29 திகதிகளில் தவிர்ப்பது நலம்.

துரதிர்ஷ்டமான நாட்கள்: இவர்கட்கு 8, 9, 18, 26 திகதிகள் நன்மை தராதனவையாம். முழுதும் கூட்டினால்



கூட்டினால் 8 அல்லது 9 வரும் தினங்களில் முயற்சிக்கும் காரியங்கள் தீய பலன்களையே தரும்.

நிறம்: இரண்டு எண்ணிக்கைக் காரர்களுக்கு இலேசான பச்சை வர்ணமே மிக மிக அதிர்ஷ்டமானது. இவர்கள் வாழும் இடங்களிலுள்ள சுவர்களிலோ அல்லது மற்ற சூழ்நிலைப் பொருள்களிலோ இந்நிறம் இருந்தால் உற்சாகத்தையும் சாந்தியையும் கொடுக்கும். பச்சை கலந்த வர்ணங்களும், வெளிர் மஞ்சளும், வெள்ளையும், இவர்கட்கு நன்மை தரும். வெள்ளையை விட பச்சையே அதிக வெற்றி தருமாகையால் பச்சை நிறத்தில் ஆடைகள் தயாரிப்பது நல்லது. (அல்லது கரையாவது பச்சையாக இருக்கலாம்). கறுப்பு, சிவப்பு, ஆழ்ந்த நீலம் இவைகள் கெடுதி விளைவிக்கும். பொன்னைவிட வெள்ளி இவர்கட்கு நன்மை தரும். இரண்டையும் கலந்து உபயோகிக்கலாம்.

இரத்தினம்: இரத்தினங்களில் முத்தும் (JADE) யேட் என்று சொல்லப்படுகின்ற பச்சை நிறக்கல்லும் தரிக்க நன்மை தரும். வயிறு சம்பந்தமான நோய்களை JADE நீக்கும். வைடூர்யமும் மிக்க அதிர்ஷ்டமளிக்கும்.

---

## எண் 3 வியாழன்

## பிறந்த திகதிகள் 3, 12, 21, 30

3-ந் திகதிகளில் பிறப்பவர்கள் நல்ல சிந்தனை சக்திகள் உடையவர்களாக இருப்பர். தெய்வ பக்தியையும் சரீர பலத்தையும், போற்றி விருத்தி செய்ய வேண்டும்; உணர்ச்சிகளை மேன்மையான முறையில் வெளியிடப் பழகிக் கொள்ள வேண்டும். கணிதத்தில் இவர்களது மூளையின் பலம் விருத்தியாகும்; காவியங்கள் ஓவியங்கள் முதலியு

வற்றை ரசிக்கப்பழகிக்கொள்ள வேண்டும். வாழ்க்கை கௌரவமாகவும் உயர்வாகவும். அமையும், நடுவயதிற்கு மேற்பட்டு புகழ் உண்டாகும்.

12-ந் திகதியில் பிறப்பவர்கள் தன்னலங்கருதாத உழைப்பினுலும், தியாகத்தாலும் புகழுடைவர், வாழ்க்கையே உலகோருக்காகச் செய்யும் தவமாக முடியும். தியாக்கான குணங்களெல்லாம் பிறவியிலேயே அமைந்திருக்கும், இளவயதிலேயே கவலையையும் பொறுப்பையும் உணர வேண்டியவர்களாதலால் இத்திகதியில் பிறப்பவரில் பெரும்பான்மையர் குழந்தைப் பருவத்திலேயே தந்தையை இழக்கின்றனர். தாயை மாத்திரம் சிலர் இழப்பதுண்டு. இதன் காரணம் எண்ணின் ஆதிக்கம் குறைந்திருப்பதுதான்; ஆதிக்கம் இருந்தால் தாய் தந்தையுடன் வாழ்வர். இருந்த போதிலும் தகப்பனுருக்குத் திரவிய நஷ்டங்கள் ஏற்படஏது உண்டு. பிரமிக்கத்தக்க பிரசங்கியாவார்.

21-ந் திகதி பிறப்பவர்கள் தீவிரமான சுயநலக்காரர்க இருப்பார்கள். தியாகம் செய்துவிட்டு கூலியை எதிர்பார்ப்பார்கள். இவர்கள் பத்திரிகை பார்த்தல் அவசியம்; உலக அறிவும் அனுபவமும் எவ்வளவுக் கெவ்வளவு அதிகப்படுகிறதோ அவ்வளவுக்கு வாழ்க்கை உயர்வடையும், காரியவாதி. செய்தி நிருபர்களாகவும், உலக அபிப்பிராயங்களை மாற்றியமைக்க வல்லவர்களாகவும் ஆகி விடுவார்கள். அறிவே வெற்றி தரும். கடும் போராட்டங்கள் நிறைந்ததாக வாழ்க்கை இருக்கும். திடசித்தத்தால் முன்னேறி வெற்றியைப் பூரணமாக அனுபவிப்பர்.

30-ந் திகதி பிறப்பவர்கள் தீர்க்க சிந்தனையும், நுட்பமான மூளையும் உடையவர்கள். கம்பீரமாக வாழ்வதையே விரும்புவர். தன்னிஷ்டப்படியே நடக்கும் தீவிரவாதியாவார்கள். எதையும் கூர்ந்து கவனித்து நுட்பமாய் அறியக் கூடிய புத்திசாலிகள். துப்பறியக்கூடிய அளவுக்கு யோசனுசக்தி நேர்த்தியாக இருக்கும், மிகுந்த துணிச்சலும் நெஞ்



சழுத்தமும் உடைய இவர்கள் தோல்வியைக் கண்டு கலங்க மாட்டார்கள், கலைகளில் சுலபமாகத் தேர்ச்சியடையக் கூடிய இவர்கள் தனிமையை ஓரளவு விரும்புவர். இருக்கிற சக்தியை எல்லாம் இப்பிறவியிலேயே உபயோகித்துப் பார்த்து விடுவார்கள்.

அதிர்ஷ்ட தினங்கள்: 3, 9, 12, 18, 21, 27. 30 திகதிகள் மிக்க நன்மை பயப்பன. விவாகம், தொழில் ஆரம்பம் முதலியன திகதி, மாதம், வருடம் மூன்றையும் கூட்டினல் 3 அல்லது 9 எண் வருவதாக உள்ள தினங்களில் செய்தால் பலன் நீடித்திருக்கும்.

துரதிர்ஷ்ட தினங்கள்: 6, 15, 24 திகதிகள் சில சமயங்களில் சாதகமாகத் தோன்றிப் பின்னர் தீமை விளைவிக்கும். இத்திகதிகள் தடங்கல்களையும் சிரமங்களையும் வாழ்க்கையில் ஏற்படுத்தும். திகதி, மாதம், வருடம் மூன்றையும் கூட்டினல் 6 வரும் தினங்களில் பெரிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

அதிர்ஷ்ட நிறங்கள்: ஒறேஞ், றோஸ் முதலிய எல்லா செந்நிறங்களும் நன்மை தரும், தாமரைப்பூவின் வர்ணமே மிக்க அதிர்ஷ்டமானதாகும். கத்தரிப்பூ, மஞ்சள், சிகப்பு, நீலங்கலந்த வர்ணங்களும் நன்மை தருவன.

விலக்கவேண்டிய நிறங்கள்: கருநீலம், கருப்பு ஆழ்ந்த பச்சை.

இரத்தினம்: மிக்க நன்மைகளைத் தந்து மன அமைதியையும் சற்குணவிருத்தியையும் தரவல்லது. AMETHYST எமிதிஸ்ட் எனப்படும் கத்தரிப்பூ நிறங்கொண்ட இக்கல் செவ்வந்தி என்று அழைக்கப்படும்.

# எண் 4 இராகு
## பிறந்த திகதிகள் 4, 13, 22, 31

4 - இத்திகதியில் பிறப்பவர்கள் மிகுதியான கண்டிப்பு உடையவர்களாக இருப்பார்கள். நல்ல துணிச்சலும் பலமும் இருக்கும், போர் வீரர் போன்று வாழ்வர். உணவிலும் போகங்களிலும் மிதமாக இருக்கப் பழகிக்கொள்ள வேண்டும். வாழ்க்கையில் எதிர்பாராத சம்பவங்கள் நிகமும் பொழுதெல்லாம் நன்மைக்கே என்று நினைத்து சோர்வடையாமல் இருக்க வேண்டும். இனிமையாகவும் கவர்ச்சிகரமாகவும் பேசக் கற்றுக்கொள்ளுதல் அவசியம்.

13-ந் திகதி பிறப்பவர்களுக்குத் திடுக்கிடக்கூடிய சம்பவங்கள் வாழ்க்கையில் எதிர்பாராமல் நிகழும். அபாயங்கள் வந்து நீங்கும். சிறு வயதிலேலேயே குடும்பத்தில் இவர்களை பாதிக்கக்கூடிய மாறுதல்கள் ஏற்படும். மிக்க வலிமை உடைய இவர்கள் நேர்மையாகவும் மறைவில்லாமலும் நடந்துகொள்ள வேண்டும். அப்படி வாழ்ந்தால் மிக்க உன்னத நிலையை அடைவர். பெண்களால் இவர்கட்கு அநேக சிரமங்கள் நேரிடக்கூடும்.

22-ந் திகதி நன்மையை விடத் தீமையே இவர்கள் மனதை மிகுதியாகக் கவரும். விதி இவர்கள் வாழ்க்கையைத் தீயவழியில் செலுத்த பல சந்தர்ப்பங்களை அளிக்கும். மிதமிஞ்சிய நிர்வாக சக்தியும் சாமர்த்தியமும் உண்டாகும். சூழ்ந்திருப்போர் இவர்களை வஞ்சிக்க சமயத்தை எதிர்நோக்கி இருப்பர். இவர்களுக்கு பணம் சம்பாதிப்பது எளிதாக இருக்கும். சுலபமாகப் போட்டிகள் பந்தயங்கள் முதலியவைகளாலும், தீயகாரியங்கள் புரிவதாலும் செல்வம் சேரும். இவ் விஷயங்களில் ஜாக்கிரதையாக இருத்தல் நலம்.

இத் திகதியில் பிறப்போர் அச்சியந்திரசாலை, புத்தகம் வெளியிடுதல், பலவிதமான மில்கள் நடத்துதல், சக்கரங்



களால் ஓடும் மோட்டார், சைக்கில் முதலிய வாகன வியாபாரம் செய்தல், பஸ், லொறி முதலியவைகளை வைத்து தொழில் நடத்துதல் இவைகளாலும். புத்தகம் எழுதுதல், சினிமா தியேட்டர் முதலானவைகள் நடத்துதலாலும், மற்ற சனங்களின் ஆதரவால் நடக்கும் ஹோர்ட்டல்கள். கடைகள், பந்தயங்கள், நடத்துவதாலும், கட்டிடங்கள் கட்டுவதாலும் மிகுந்த பணம் சம்பாதிக்கலாம். பல ஜனங்கள் உதவியோ, ஆதரவோ, ஈடுபாடோ தேவையான எல்லாத் தொழில்களிலும் இவர்கட்கு நல்ல இலாபமுண்டாகும். மேலோர் நட்பை இவர்கள் அடைய வேண்டியது மிக அவசியம்.

31-ந் திகதி. இது முழுவதும் மனோ சம்பந்தமான எண்ணிக்கையாதலால் இத் திகதியில் பிறப்போர் நல்ல தைரியசாலியாகவும், மிதமிஞ்சின மனோ சக்திகளும், நுட்ப அறிவும் உடையவராகவுமிருப்பர். புதிதாக பழகுகிறவர்கள் கூட சில நிமிடங்களில் இவர் சாதாரண மனிதர் அல்ல என்று கண்டுபிடித்து விடலாம். இலாப நட்டங்களைப் பொருட்படுத்தாமல் தன் இச்சைப்படியே நடப்பர், எப்படிப்பட்ட எதிரியையும் வெகு சீக்கிரம் மடக்கி விடுவார். ஏகாந்த வாசத்திலும் வேதாந்த ஆராய்ச்சிகளிலும் மனம் வெகுவாக ஈடுபடும். தீவிரவாதி. போகங்களில் மிதமாக இருப்பது அவசியம். பொதுஜன உபகாரி.

அதிர்ஷ்ட காலம்: 1. 10, 19 தினங்கள் அதிர்ஷ்டமளிக்கும்; 4, 13, 22, 31 திகதிகள் எதிர்பாராத மாறுதல்களைச் செய்விக்கும்.

துரதிர்ஷ்ட தினங்கள்; 8, 17, 26 திகதிகள் எப்பொழுதும் தீமையே புரியும், 7, 16 திகதிகளும் சாதகமான நாட்களல்ல.

வர்ணம்: வெளிர் நீலம், அல்லது நீலக் கோடுகள் போட்ட துணிகளே இவர்கள் மனதைக் கவரும். மிக்க

அதிர்ஷ்டமான நிறம் மஞ்சளே. தவிர்க்க வேண்டிய நிறம் கறுப்பு.

இரத்தினம்; வெளிரான நீல நிறக் கல்லே நன்மை தரும். பரிசுத்தியையும் காரிய சித்தியையும் தரும் கோமேதகமும் மிக்க அதிர்ஷ்டகரமானதே.

---

## எண் 5 புதன்

## பிறந்த திகதிகள் 5, 14, 23

5-ந் திகதி இத் திகதியில் பிறப்போர் சிறு வயதிலேயே பெரிய இலட்சியங்களால் கவரப்படுவர். வசீகரமான குணங்களும், பிறரை மதித்தலும் எல்லா மேலான குணங்களும் நிரம்பியவராக இருப்பர். பிறருக்கு போதிப்பவராவர். தெய்வீகமான வாழ்க்கை அமைவதுண்டு.

14-ந் திகதி இத் திகதியில் பிறப்பவருக்குப் பிரயாணத்தில் சலியாத ஊக்கமும் ஓரளவு பிடிவாதமும் இருக்கும். பொருட்களைச் சேர்க்கும் அதிர்ஷ்டம் உண்டு ஆகையால் எல்லாவிதமான பெருத்த வியாபாரங்களும் பலிதமாகும். பணப் புழக்கம் அதிகமிருக்கும். எப்பொழுதும் இவர்களைச் சுற்றி ஜனக்கூட்டம் இருக்கும். பிறரை நம்புவதால் பெருத்த நட்டங்கள் ஏற்பட்டுவிடும். மழை, இடி, நெருப்பு, வெள்ளம் இவைகளைக் கண்டு விலகவேண்டியது அவசியம். உயிருள்ளவரை பிறர் உதவியுண்டு. குன்றாத அதிர்ஷ்டம் அடிக்கும்.

23-ந் திகதி. இத் திகதியில் பிறப்பவர்களாலே சாதிக்க முடியாதது உலகில் ஒன்றுமே இல்லை. மிதமிஞ்சின ராஜவசியமும், ஜனவசியமும் இருக்கும். இவர்களைவிட மேல் நிலையில் இருப்பவர்களும் இவர்களைப் புகழ்வர். மேலான



பண்பாடுகளும் நல்ல நடத்தையும் அமையப் பெறின் இவர்கள் சரித்திரம் போற்றும் பெரியாராக ஆகிவிடுவார்.

அதிர்ஷ்டகாலம்: 5, 9, 14, 18, 23, 27 திகதிகளே மிக்க அதிர்ஷ்டமான தினங்கள்.

நிறம்: சாம்பல் வர்ணமே மிக்க அதிர்ஷ்டமானது. பச்சை, கறுப்பு போன்ற ஆழ்ந்த நிறங்களை ஒரு நாளும் அணியலாகாது.

இரத்தினம்: வைரம், வைரம் தரிக்க முடியாதவர்கள் வைரம் போன்று ஒளி வீசும் ZIRCON கற்களைத் தரிக்கலாம்.

---

## எண் 6 வெள்ளி

## பிறந்த திகதிகள் 6, 15, 24

6-ந் திகதி மிக்க கண்ணியமும் ஊக்கமும் உடையவர்களாக இருப்பர். அடக்கமான சுபாவமும் ஆழ்ந்த கருத்துக்களும் இருக்கும். கலைகளில் சுலபமாக தேர்ச்சி ஏற்படும். பொருள் சேர்ப்பதில் மிகவும் ஆர்வமிருக்கும். பெண் தன்மை ஓரளவு தோன்றும்.

15-ந் திகதி மிக வசீகரமான தோற்றமுடையவர்கள். எல்லோரையும் வெகு எளிதில் வசப்படுத்தக் கூடியவர்கள். ஆதாயம் வந்து கொண்டே இருக்கும். பிரமிக்கத்தக்க பேச்சு வன்மையும் கலைகளில் தேர்ச்சியும் உண்டு. சாதாரணமாகப் பேசுவதே தேர்ந்த நடிகரோ, பிரசங்கியோ பேசுவது போல இருக்கும். இயற்கையாகவே வாதமிடுவதும், நகைச்சுவையுடன் பேசுவதிலும் சமர்த்தராக இருப்பர். எவரையும் பார்த்த மாத்திரத்தில் புரிந்துகொள்ளக் கூடிய

கூர்மையான வசீகரம் மிகுந்த விழிகள் உடையவராக இருப்பர், சதா சந்தோஷமாக இருக்கும் மனமுடையவர்கள்.

24-ந் திகதி. அடக்கமான தன்மைகள் நிரம்பிய இவர்களே காரியத்தை சாதித்துக் கொள்வதில் சிறந்தவர்கள். சமயோசிதமாகப் பேசுவார்கள். அதிர்ஷ்டகரமான விவாகமும் பெரிய பதவியும் வாழ்க்கையில் தேடி வரும். இவர்களுக்கு துணிச்சலும் தீவிரமும் உண்டு. சலியாத உழைப்பினால் அதிர்ஷ்டத்தை முழுவதும் பிரயோசனப் படுத்திக் கொள்ளுவார்கள். மேலதிகாரிகளால் பெரிதும் விரும்பப் படுவர்.

அதிர்ஷ்டகாலம்: முக்கியமான காரியங்களை 6. 15, 24 திகதிகளிலும், திகதி, மாதம், வருடம், மூன்றையும் கூட்டினால் 6 வரும் தினங்களிலுமே செய்துவர அதிர்ஷ்டம் விருத்தியாகும். 9, 18, 27 திகதிகள் சாதகமான நாட்களாகும்.

துரதிர்ஷ்ட தினங்கள்; 3, 12, 21, 30 திகதிகளும் முழுதும் கூட்டினால் 3 வரும் தினங்களும் துரதிர்ஷ்டகரமானவை. இத்தினங்களில் கூடுமானவரை ஒரு முயற்சியிலும் ஈடுபடாதிருத்தல் நல்லது. அவசரப்பட்டு 5, 14, 23 திகதிகதிகளில் ஒரு காரியத்தை முடிவு செய்யக் கூடாது.

நிறம்: ஆழ்ந்த பச்சை, ஆழ்ந்த நீலம், மற்ற நீலம், பச்சை சிவப்பு கலந்த வர்ணங்கள். அதிர்ஷ்டமானவை. வெள்ளை, மஞ்சள், ரோஸ் ஒத்துக்கொள்ளாத நிறங்களாகும்.

இரத்தினம்: மிகமிக அதிர்ஷ்டமானது மரகதம் (பச்சை). இருதய வலிமையும், சந்தோஷமும் அதிர்ஷ்டமும் பச்சை அணிவதால் ஏற்படும்.

# எண் 7 கேது

## பிறந்த திகதிகள் 7, 16, 25

7-ந் திகதி பிறப்பவர்கள் சாந்தமான சுபாவங்களும் அமைதியான மனப்பான்மையும் உடையவர்கள். சுலபமாக பிறருக்கு விட்டுக்கொடுத்து அடங்கி இருப்பார்கள். புத்தி சாதுர்யமும், ரசிகத்தனமும், விசேடமாக இருக்கும். தெய்வ வழிபாட்டிலும் ஆழ்ந்த நம்பிக்கையுடன் ஈடுபடுபவர். சதா குடும்ப வாழ்க்கையில் சிக்கல்கள் இருந்துகொண்டே இருக்கும். குழந்தை போன்ற சுபாவங்கள் இருக்கும். காதலிலும் கலையார்வத்திலும் பிடிவாதமிருக்கும்.

16-ந் திகதி பிறப்பவர்கள் மற்ற இருவரையும் (7, 25) விட விசேடமான மனோசக்திகள். உடையவர். இவர்களை சரியாக ஆராய்ந்தால் இவர்களுடைய அபூர்வ சாமர்த்தியங்களை பிரகாசிக்கச் செய்யலாம். இத் திகதியில் குழந்தைப் பருவத்திலேயே பிரசித்தமடைந்த அறிஞர்களும், கவிஞர்களும், நடிகர்களும் பிறந்திருக்கின்றனர். இவர்களில் அநேகர் சமூகம் திடுக்கிடக்கூடிய காரியங்களைச் செய்கின்றனர். சமூகம் தண்டிக்கக்கூடிய தவறான காரியங்களிலே சகஜமாக ஈடுபடுகின்றனர், முறை தவறின காதல் விவகாரங்களில் ஈடுபடாதிருந்தால் இவர்களது வாழ்க்கை மேன்மையடையும்.

25-ந் திகதி பிறப்பவர்கள் தீவிரமான மதப் பிடிவாதம் உடையவர்கள். தான் அனுசரிக்கிற மதவழிபாடுதான் சரியானது என்று பகிரங்கமாகக் கூறுவர். இவர்களை அநேகர் பின்பற்றுவர். இத் திகதியில் பிறப்பவர்கள் வணங்கத்தக்க மனிதர்களாகின்றனர். அதிகாரமும், வணங்கப்படுதலும் இந்த எண்ணுடன் கூடப்பிறந்தவை, இவர்களுக்கு குடும்ப வாழ்க்கையில் சுகம் இருக்காது.

அதிர்ஷ்ட காலம்: முக்கியமான காரியங்களை 2, 11, 20, 29 திகதிகளும், திகதி, மாதம் வருடம் மூன்றை யும் கூட்டினால் 2 வரும் தினங்களும் நன்மை தரும்.

சாதக்மான நாட்கள்; 1, 10, 19 திகதிகள். 25-ந் திகதி எப்பொழுதும் நன்மை தரும். 19 ஆந் திகதிகளில் தீமையும் நிகழும். 8, 17, 26-ந் திகதிகளும் துரதிர்ஷ்டமானவை. முழுதும் கூட்டினால் 7 அல்லது 8 வரும் தினங்களும் தீய பலன் அளிப்பவையே.

நிறம்: வெள்ளையே இவர்கள் மனதை வெகுவாகக் கவருமெனினும் இலேசான மஞ்சள், வெளிர் பச்சை, வெளிர் நீலம் ஆகிய நிறங்களைத் தரிப்பதே நன்மை தரும். எல்லா ஆழ்ந்த நிறங்களும் இவர்களுக்குத் தீமையானவை. முக்கியமாகச் சிவப்பும் கறுப்பும் துரதிர்ஷ்டமானவை.

இரத்தினம்: வைடூரியம் மிக அதிர்ஷ்டமானது.

---

## எண் 8 சனி

## பிறந்த திகதிகள் 8, 17, 26

8-ந் திகதி பிறப்பவர்கள் அமைதியான வாழ்க்கையை விரும்புவர். பல காரியங்களைச் சமாளிக்க முயற்சி செய்வார்கள். மதம், பரசாதனங்கள், தெய்வ வழிபாடு, வேதாந்தம் இவர்களது மனதைப் பிடித்திழுக்கும். உடலோ சுகத்தை விரும்பும். மனமோ தியாகத்தையும், துறவையும் நினைவுறுத்தும். ஏதாவது பரோபகாரமான காரியத்திலோ, தன் சுகத்தை தியாகம் புரிவதிலோ ஈடுபடாவிடில் மன அமைதி ஏற்படாது. மனச்சாட்சி அதிகம் வளர்ந்திருப்பதால் நேர்மையான வாழ்க்கை உண்டு. இவர்கள் பெருத்த உழைப்பாளிகள். பல அரிய காரியங்களைச் சாதிக்க வல்லுநர்கள். சமூக நன்மைக்காகப் பாடுபடுவார்கள்.



17-ந் திகதி பிறப்பவர்கள் பிறவியில் சீமானாக இரா விடினும் எப்படியாவது அந்நிலையை அடைய முயற்சி செய்வார்கள். சரீர சுகங்களை இவர்களது மனம் இடைவிடாமல் நாடும். சதா பெருந்தொகைப் பணம் சேர்த்துக் கொள்ள திட்டம் போட்டபடி இருப்பார்கள். சுகத்தில் மனம் ஈடுபட்டிருப்பதால் நியாயமான வகைகளில் பணம் கிடைக்காவிடில், துணிந்து மோசடியான வகைகளில் பணத்தைச் சேர்த்துக் குவிப்பர். பொதுமக்கள் பணத்தைத் தன்னுடையதாக்கிக் கொள்வர். பிரபுவைப் போல் காட்டிக்கொள்ள விரும்பி செலவு செய்தாலும் மனமொப்பி தன் சுகத்துக்காகக்கூட பணத்தைச் செலவளிக்க விரும்ப மாட்டார்கள். கஞ்சத்தனம் உடலிலே ஊறிவிடும். கூட்டு எண் 5 அல்லது 9ஆக இருந்தால் மாத்திரம் மனம் போன படி யோசனையின்றியுங் கூட செலவழிப்பார்கள். இந்த இடைவிடாத முயற்சியையும் எக் கஷ்டம் வரினும் சமாளித்துக் கொண்டு முன்னேறுவதையும், ஆத்மீக வாழ்விலோ அல்லது வாழ்நாளுக்குப் பின்னும் மங்காத புகழிலோ நாட்டங்கொண்டு உழைப்பதையுங் குறிக்கும்.

26-ந் திகதி பிறப்பவர்கள் 8, 17 திகதிகளில் பிறந்தவர்களை விட துரதிர்ஷ்டசாலிகளே என்று சொல்லலாம். இவர்களில் பெரும்பாலானோர் இளவயதிலேயே பெற்றோர்களில் ஒருவரையோ, இருவரையுமோ இழக்கின்றனர். மிகச் சிலருக்குத்தான் 17 வயதுக்கு மேல் கூட தாய் தந்தையர்கள் இருக்கின்றனர். சிறு வயதிலேயே கஷ்டங்களும், முன்னேற்றத்துக்கு தடைகளும் ஏற்பட்டு விடுகின்றன. முன்னேற்றத்தில் விருப்பம் உடையவர்களாதலால் கஷ்டங்களைச் சகித்துக்கொண்டு மிகுந்த பிரயாசையுடன் வாழ்க்கையை ஒருவிதமாக ஆரம்பிக்கின்றனர். பிறரால் வீண் பழிகள் சுமத்தப்படுதலும் கஷ்டங்களுக்கு உட்படுத்தப்படுதலும் சகஜமே. ஏராளமான விரோதிகளைச் சம்பாதித்துக் கொள்ளுவார்கள். கற்பனா சக்தியும் நகைச்சுவையும், கூர்மையான அறிவும் இவர்களிடம் காணப்படும்.

இள வயதில் கஷ்டமும், சுகப்படமுடியாத விருத்தாப்பியத்தில் பொருளும் கீர்த்தியும் ஏற்படும்.

அதிர்ஷ்டகாலம்: 1, 10, 19 திகதிகளும், திகதி, மாதம், வருடம் கூட்டினல் 1 வரும் தினங்களும் அதிர்ஷ்ட நாட்களாகும். 4, 13, 22, 31 திகதிகள் சாதகமான பலன்களைத் தரும். எதிர்பாராத மாறுதல்கள், நிகழ்ச்சிகள் 4 எண்ணின் ஆதிக்கத்தால் ஏற்படும். 9, 18, 27 திகதிகளும் நன்மை தருவன.

துரதிர்ஷ்ட தினங்கள்: 8, 17, 26, திகதிகள் வீண் விவகாரங்களில் ஈடுபடுத்தி தீமைகளை விளைவிக்கும். பிரயாணம் முதலியவைகளை இத்தினங்களில் மேற்கொண்டால் நோயும், தோல்வியும் தொடரும். திகதி, மாதம், வருடம் கூட்டினல் 8 வரும் தினங்களும் நன்மையானதல்ல.

நிறம்: மஞ்சள் நிறமே இவர்களுக்கு சோபை அளிக்கக்கூடியது. ஆழ்ந்த பச்சையும் நீலமும் நன்மை தரக்கூடியன. தனித்திருக்கும்போதுதான் நீலமணியலாம். மற்றவர்களுடன் பழகும்போது மஞ்சளே உபயோகிக்கவும். கறுப்பு, மண்ணிறம் மற்ற மங்கலான ஆழ்ந்த நிறங்கள், சிவப்பு இவைகள் சிறிதும் பொருந்தாது.

இரத்தினம்; குற்றமற்ற நீலக்கல் அணிந்தால் நல்ல அதிர்ஷ்ட முண்டாகும். ஆறு நூல்கள் உடைய நீலக்கற்கள் இவர்கட்கு மிகவும் பொருத்தமானவை.

## எண் 9 செவ்வாய்

## பிறந்த திகதிகள் 9, 18, 27,

9-ந் திகதி பிறப்பவர்கள் செயற்கரிய காரியங்கள் செய்ய ஆர்வமுடையவர்கள். நுட்பமான மூளை உடைய



வர்கள்: மேலான இலட்சியங்களுடன் வாழ்ந்தால் வாழ்க்கை வளம் பெறும். எல்லா எதிர்ப்புக்களையும் சாமர்த்தியத்தால் வென்று வெற்றியுடன் வாழ்வர்.

18-ந் திகதி சுயநலத்தை விட்டால்தான் இவர்களுக்கு நன்மையுண்டாகும். அவசரப்பட்டு ஒரு விவகாரத்திலும் சிக்கிக்கொள்ளாமல் இருக்க வேண்டும். எல்லோருடனும் மனக்கசப்பை உண்டுபண்ணக்கூடிய தினமாகையால் இதில் பிறப்போர் கோபத்தையும். பிடிவாதத்தையும் குறைத்துக் கொள்ள வேண்டியது அவசியம். காதலில் அவசரப் போக்கு தோல்வியைத் தரும் உணர்ச்சிகள் மனதைத் தீவிரமாகத் தூண்டிக்கொண்டே இருக்கும்.

27-ந் திகதி; இவர்கள் நற்காரியங்களிலேயே ஈடுபட்டு நல்ல பலன்களையே அடைந்து வருவர். யோசனைகளெல்லாம் வெற்றி பெறும். அறிவே வெற்றி தரும். இவர்கள் சாந்தமானவர்கள். ஆழ்ந்த யோசனைகளும் தளராத உழைப்பும் உடைய இவர்கள் எல்லா விஷயங்களையும் தீவிரமாக ஆராய்ச்சி செய்வர்.

அதிர்ஷ்ட காலம்: 5, 14, 23, 9, 18, 6, 15, 24, 21, 30 திகதிகள் அதிர்ஷ்டம் தருவன. 1, 10 திகதிகளும் சாதகமானவையே. 27-ந் திகதிகளில் நல்ல பலன்கள் நடைபெறும்.

துரதிர்ஷ்ட தினங்கள்: 2, 11, 20, 29 திகதிகள் நன்மையல்ல. 19-ம் திகதிகளிலும் சில சமயங்களில் ஒரு தவறுன யோசனைகள் மனதில் உதிக்கும். இத் தினங்கள் குழப்பத்தை உண்டுபண்ணக் கூடியவையானதால் இத்தினங்களில் ஒரு முக்கிய காரியத்திலும் ஈடுபட வேண்டாம்.

இவர்களுக்கேற்ற நிறம் சிவப்பு. கருஞ்சிவப்பும் நீலமும் கூட பொருந்தும். வெளிரான பச்சை மற்ற வெண்மை மிகுந்த நிறங்கள் கூடாது. ஆடைகளின் கரையிலாவது செந்நிறம் இருப்பது நலம்.

இரத்தினம்: ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் தந்து சரீர குற்றங்களை பவளம் நீக்கும்.

# உங்கள் பிறந்த திகதிக்கு ஏற்ற தொழில்கள்

## (1) 1, 10, 19, 28

இவர்கள் அரசியல் துறையிலே புகழோடு முன்னேற லாம். இயல் இசை நாடகத் துறைகளிலே இணையற்றவர் களாக ஆகலாம். அரசாங்க உத்தியோகத்திலே ஐயமின்றி உயரலாம். வியாபாரத்தில் பொருளீட்டலாம். சிறந்த எழுத்தாளர்களாகவும், நூலாசிரியர்களாகவும், பதிப்பாளர் களாகவும், பேச்சாளராகவும், நீதிபதிகளாகவும், மற்றும் வழக்குரைஞர், டாக்டர், சோதிடர்களாகவும் வரமுடியும். மத சம்பந்தமான காரியங்களில் ஈடுபடலாம்.

## (2) 2, 11, 20, 29

கற்பனு சக்தி பிரதான அமிசமாக உள்ள தொழில் கள் எல்லாவுற்றிலும் வெற்றியுண்டாகும். கதை எழுது தல், வாதாடுதல், விவசாயம், வியாபாரம், ஜவுளி, நகை கள், விளையாட்டுச்சாமான்கள், பான வகைகள், போட்டோ பிடித்தல் முதலிய தொழில்களும், மதம், கடவுள், சாத் திரங்கள், சம்பந்தமான ஆராய்ச்சிகளும் இவர்களுக்கு ஏற் றவை. வர்ணம் பூசுதல், துணி தைத்தல், துணிகள் வெளுத்தல், பால்பண்ணை, தானியங்கள் பழங்கள், காய் கறிகள் உற்பத்தி செய்தல், மலர்கள், வாசனைத்திரவியங் கள், காகிதம், புத்தகங்கள் எழுதும் சாதனங்கள் முதலி யவைகளாலும் பொருளீட்டலாம். விளையாட்டுத்துறைகளி லும் பிரசித்தி அடைவர்.

## (3) 3, 12, 21, 30

இவர்களில் அரசியல் தாகமுடையோர் பலர். இவர் கள் சிறந்த தியாகிகளாகவும், கட்சிப் பிரச்சாரர்களாகவும்,



தலைவர்களாகவும், அமைச்சர்களாகவும், மக்களுக்குச் சேவை செய்வர். இவர்களில் கலை இலக்கியத்துறையில் ஆர்வமுள்ளோர் சிறந்த எழுத்தாளர்களாகவும் ஆசிரியர் களாகவும், பத்திரிகையாளர்களாகவும், புத்தகக்கடை உரி மையாளர்களாகவும், அச்சுத்தொழில் உரிமையாளர்களாக வும்உயரலாம். நல்ல துணிவும், நிர்வாகத் திறமையுமுடைய இவர்கள் எந்த ஒரு ஸ்தாபனத்திற்கும் தகுதியான தலைவர் களாவும், பங்குதாரர்களாகவும், இயக்குநர்களாகவும், முகாமையாளர், நிர்வாகிகளாக இருப்பர். பாடசாலை ஆசிரியர்கள், பேராசிரியர்கள், பேச்சாளர்கள், கிராமநல ஊழியர்கள். உயர் அதிகாரிகளாக வரலாம். மேலும் டக் டர்களாக பொறியியலாளர்களாகவும் வரமுடியும்.

## (4) 4, 13, 22, 31

எதிலும் ரோசம், தன்மான உணர்வுமிகுந்த இவர்கள் செய்யும் எத்தகு வேலைகளையும் இழக்கத் துணிவர். தனது அடிமை வேலைக்குத் தலைமுழுக்குப் போட்டுவிட்டு, மனதிற் குப்பிடித்த சுதந்திரமான தனித்தொழில்களைச் செய்து வாழப் பிரியப்படுவர். குறுகிய காலத்தில் வேண்டிய அளவு பொருளைத் தேடிக்கொண்ட பிரபல ஒப்பந்தக்கா ரர்களும், பெரிய வியாபாரிகளும், திறமைமிகு புரோக்கர் களும் கார், லொறி, இரும்பு, சம்பந்தப்பட்ட தொழில் அதிபர்களும், கலை இலக்கிய, நடிப்புத்துறைகளில் வெற்றி கண்டோரும் சிறந்த டாக்டர்களும், சோதிட நிபுணர்க ளும் இவ்வெண்ணைச்சேர்ந்த அதிர்ஷ்டசாலிகளேயாவர். கணிதத்தில் வல்லவர்கள். ஓடிட்டர்கள், எக்கவுண்டன், வங்கி அதிகாரிகள், பொறியியலாளர்கள் போன்ற பதவி களைப் பெற்றுச் சிறப்படைவர். சாதாரண உத்தியோகம் இவர்களுக்கு நன்மையளிப்பதில்லை.

## (5) 5, 14, 23

இவர்கள் செய்யும் புது முயற்சிகளெல்லாம் வெற்றி யுடையும்; ஏது செய்தாலும் பொதுஜன ஆதரவு ஏற்படும்.

வியாபாரமே சிறந்தது. இவர்கள் பிறரிடம் வேலைக்கு இருந்தால் இவர்களின் அதிர்ஷ்டத்தை முதலாளி அனுபவிப்பார். எழுத்தாளர்கள், வியாபாரிகள், தரகர்கள், ஏஜெண்டுகளாக தொழிலை ஆரம்பிக்கலாம். நண்பர்களால் தான் உதவியும் முன்னேற்றமும் கிட்டுகின்றது. இவர்களுக்கு பெரிய மனிதர்களின் ஆதரவு என்றும் உண்டு. அரசியல் தாகம் மிகுந்தவர்கள். அரசியல் துறையிலும் இதர முக்கிய பொறுப்புகளிலும் இவர்களுக்கு தலைமைப் பதவி தேடிவரும். வலியக்கிட்டும். எந்தப் போட்டிகளிலும் தேர்தல்களிலும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் படுவர். எந்தவொரு முயற்சிகளிலும் அதிகச்சிரமமின்றி, செலவின்றி, பகையின்றி, வெற்றிதேடிவரும். இவர்களில் ஏமாற்றமடைபவர்கள் மிகச்சிலரேயாவர்.

ஐந்து எண் கிரகத்தின் பலங்குறைந்த சிலர் எந்த ஒரு துறையிலும் அரைகுறை நிலையில்தான் இருப்பார்கள். அடிக்கடி மனம் மாறுவர். குணமாற்றமடைவர். தொழில் மாற்றம் செய்வர். பக்திமிகு பெரியோர்களும், அடியார்களும், தத்துவ மேதைகளும் இந்த எண்ணில் தோன்றியுள்ளனர்.

## (6) 6, 15, 24

ஆறு எண் நபர்களைக் கலைத்தொழில் காந்தம்போற் கவரும். எத்தகு கலைத்தொழிலும் நிச்சயமாக வெற்றியடைய முடியும். புடைவைக்கடை, ஆபரணங்கள், பிளாஸ்ரிக் சாமான்கள், வியாபாரம் போன்ற தொழில்களைச் செய்தும் அதிர்ஷ்டமாக வாழ முடியும். வட்டிக்கடை, வங்கி, கொடுக்கல், வாங்கல் துறையிலும் முன்னேற முடியும். அரசாங்க உத்தியோகங்களிலும் இருப்போர் படிப்படியாக உயர் பதவிகளை எய்துவர். அரசியல் தாகம் மிக்கவர்கள். அரசியல் துறையில் அயராது உழைத்திட்டால் அரும்பெரும் தியாகிகளாக, தொண்டர்களாக, தலைவர்களாக உயர்வடைவர். 6-ந் திகதியில் பிறப்பவர்கள் கலைஞராகவும்



24 ஆந் திகதி எனின் அதிகார உத்தியோகத்தராகவும் பிரகாசிப்பார்கள்.

## (7) 7, 16, 25

ஹோட்டல்கள், அரிசி ஆலைகள், அரிசி வியாபாரம், எண்ணெய், பால்போன்ற திரவசம்பந்தப்பட்ட தொழில்களைச் செய்யலாம். பாடகர்களாக, கலைஞர்களாக, கவிஞர்களாக, ஓவியர்களாக, எழுத்தாளர்களாக, புகைப்படப் பிடிப்பாளர்களாக, உயர் அதிகாரிகளாக, பிடவை, பெற்றோல், டீசல், எண்ணெய், பால், வெண்ணெய், நெய், சோடா, கலர், சர்பத் போன்ற பான வகைகள், சிகரெட், சுருட்டு, பீடி, புகையிலை ஆகிய தொழில்களைச் செய்யும் சிறந்த வியாபாரிகளாக வாழ்க்கையை அமைக்கலாம். அத்துடன் இவர்களது வியாபார நிலையங்களுக்கும் 7, 16, 25, 34, 43, 52, 61, 70 - ஆகிய எண்களில் தான் பெயரோ, விலாசமோ இருக்க வேண்டும். மதத்தின் பெயராலும் மனதிற்கெட்டாத தத்துவங்களைப் பரப்புவதன் மூலமும் இரசாயன ஆராய்ச்சிகளாலும் எழுத்துமூலமும் செல்வம் உண்டாகும்.

7 ஆந் திகதியானால் நடுவயதிலும் 16 ஆந் திகதியானால் இளம் வயதுக்கு 25 ஆந் திகதியானால் 40 வயதுக்கும் மேற்பட்டு அதிர்ஷ்டம் உண்டாகும். அயல் நாடுகளுடன் கடல்மூலம் நடாத்தும் ஏற்றுமதி, இறக்குமதி, வியாபாரங்களும், அயல்நாட்டு விடயங்களை வெளியிடும் புத்தகங்களும், பத்திரிகை மின்சார சாமான்கள் வியாபாரத்திலும் பொருள் கிட்டும். மருந்து வியாபாரமும் ஒத்த தொழிலாகும்.

## (8) 8, 17, 26

இவர்கள் பெரும்பாலும் இரும்பு சம்பந்தப்பட்ட தொழில்களையே செய்ய விரும்புகின்றனர். என்ஜினியரிங்,

மெக்கானிஸம், பாலிடெக்னிக், கார், ரேடியோ, மில் போன்ற தொழில் துறைகளிலேதான் முன்னேற முயலு கின்றனர். கலை, இலக்கியம், சங்கீதம் முதலிய துறைகளும் பிரபலத்தை அளிக்கும். ஆத்மீகத்துறையிலும், தத்துவப் பிரச்சாரத்துறையிலும் துணிவோடு முன்னேறலாம். ஆட்சித்துறைத் தலைவர்கள், நீதிபதிகள், வழக்குரைஞர் கள், அமைச்சர்கள், வீரத் தியாகிகளும் இவ்வெண் நபர் களே. இவர்களில் கிரகபலம் குறைந்தவர்கள் குறுக்கு வழி களில் மந்திர — தந்திர — மாந்திரீக—செய்வினைத் தொழில் களில், திருட்டு மோசடி முயற்சிகளில் தனவந்தர்களாகத் துணிவர். கொலை செய்யவும் அஞ்சார் — எனவேதான் எந்நாட்டுச் சிறைக்கூடங்களிலும் எட்டு எண் நபர்களே அதிகம் இருப்பர்.

## (9) 9, 18, 27

இவர்கள் தியாகிகள் திறமைசாலிகள், அரசியல் துறை யிலே முன்னேறலாம், தலைவராக, நிர்வாகியாக, இயக்கு நர்களாக, உயர் அதிகாரிகள் போன்ற தலைமை ஸ்தானங் கள் அனைத்திலும் சிறப்பாக விளங்குவர். முப்படைகளில் சேர்ந்து புகழ்பெறலாம். இயல் இசை, நாடகத்துறைகளில் ஈடுபட்டால் சிறப்புடன் திகழலாம். துணிவுடன் வேட்டை யாடுபவர்களாக வனவிலங்குகளை அடக்கியாள்பவராக விளங்குவார்கள். சிறந்த டாக்டர்களும் இவ்வெண்ணில் உளர். தலை சிறந்த விளையாட்டு வீரர்களாகவும் விளங்க லாம். எத்தொழில் புரியினும் இவர்களது சாமர்த்தியம் அதில் போட்டியோ எதிர்ப்போ ஏற்படும்போதுதான் வெளி யாகும். கட்டிடங்கள் கட்டுதல், எஞ்ஜினியரிங் சம்பந்த மான தொழில்கள், இரும்புச் சமான்கள் உற்பத்தி செய் தல், இயந்திரங்கள், வியாபாரம் முதலியவை இவர்கட்கு இயற்கையாகப் பொருந்தக்கூடிய தொழில்கள்.

---

## உங்கள் பெயரின் முதலாவது எழுத்து அதிர்ஷ்டகரமாக அமைந்துள்ளதா?

"சி. அரவிந்தி" என்பதை ஆங்கிலத்தில் S. ARIVINTHI என எழுதுவர். அரவிந்தி என்ற பெயரில் முதல் எழுத் தான—A—என்பதைக் கொண்டு எண்சோதிட மூலம் அர விந்தி என்பவரின் பலாபலன்களை அறிந்துகொள்ள முடி யும். இவ்வாறு ஆங்கில எழுத்திலுள்ள இருபத்தாறு எழுத்துக்களுக்கும் பலாபலன்களை அறியமுடியும்.

### A (A, I, J, O, Y) 1

இவ்வெழுத்துக்கு அற்புதமான சக்திகள் உண்டு. ஒரு வரை மிக மேலான நிலைக்கு உயர்த்திச் செல்லும். கீழ் நிலைக்கு இறங்கும்போது தடுத்து நிறுத்தும். ஒன்று சேர் கின்ற சுபாவமேயொழிய அழிக்கும் தன்மையல்ல. பெய ரில் முதல் எழுத்தாக வரின் ரோசமுடையவராக இருப் பார். தாராள மனப்பான்மையிருக்கும். புதுப்புது சிந்தனை கள் மனதில் பிறக்கும். நல்ல நிர்வாக சக்தி அமையும். மேன்மையானவராக இருந்தாலுஞ்சரி கீழ்த்தரமான மனப் பான்மை உடையவராயினுஞ்சரி இந்த எழுத்தை பெயரின் ஆரம்பத்தில் உடையவர் மிதமிஞ்சின மூளைப்பலமுடையவ ராக விளங்குவார்கள்.

### I

இந்த எழுத்து விடாமுயற்சி, மனமொருமுகப்பட்ட தன்மை, எண்ணங்களை உணர்ச்சியுடன் வெளியிடும் திறமை நிர்மாணிக்கும் சக்தி, எல்லோரையும் தன் வயம் இழுக்கும் வல்லமை, முதலியவைகளைக் குறிக்கும். பெயரின் ஆரம்பத் தில் இவ்வெழுத்து வந்தால் திடீரெனத் தோன்றும் எண் ணங்கள் இவர்களை ஆட்கொள்ளும். சோதனையான சந் தர்ப்பங்கள் ஏற்படினும் பலர் அனுகூலம் புரிவர். ஆழ்ந்த யோசனையும் துரிதமாக வேலை செய்யும் சக்தியும் உண்டா

கும். சில சமயங்களில் நிம்மதியிராது. இந்த எழுத்து பெயரில் ஒரு தடவைக்கு மேற்பட்டு வந்தால் நரம்பு சம்பந்தமான நோய்கள் வரக்கூடும்.

## J

இவ்வெழுத்து இரட்டை மனப்பான்மையைக் குறிக்கும். பெண் குணங்களும் ஆண் குணங்களும் கலந்து நிற்கும. தீவிரவாதியானாலும் அன்புமிக்க இதயம் உடையவராவர். நல்ல நிர்வாக சக்தி இருக்கும். மிகுந்த தன் நம்பிக்கையும் ஊக்கமும் ஆக்க வேலைகளில் உற்சாகமும் உடையவர். பிறர் கூறுகிற யோசனைகளை ஒரு நாளும் ஏற்கமாட்டார்கள். எல்லாம் தனக்கே தெரியும் என்பார்கள். சூழ்நிலைகளாலும் மற்றவர்களாலும் தன்னுடைய முன்னேற்றம் தடைப்படுவதாக நினைப்பர். புகழையும் பதவியையும் விரும்புவர். இருபாலாரிடத்தும் ஆழ்ந்த சினேகிதத்தை விரும்புவர். பிறர் தன்னைப் பின்பற்றுவதையே எப்பொழுதும் விரும்புவர். துணிச்சலான வழிகாட்டி. மேலான இலட்சியங்களுக்காக அநேக கஷ்டங்களுக்கு தானாகவே உட்படுவர்.

## Q

இதற்கு மேலே தூக்கிவிடும் சுபாவம் உண்டு. இதனோடு சேருகின்றவற்றை தெய்வீகமாக்கும். நல்ல பலனுடைய எழுத்துக்களுடன் சேராவிடில் சந்தேகத்தையும் குழப்பத்தையும் குறிக்கும்.

## Y

மேன்மையான சுபாவம் பிறரைச் சார்ந்து நிற்க விரும்புதல். பெண்களைப்போன்று மென்மையாக இருத்தல். கனவான் என்று கூறும்படி நடந்துகொள்ளல் இவைகளே இவ்வெண்ணின் இயல்பு.



## B (B, K, R) — 2

ஆத்ம சக்தியின் இருப்பிடம். நன்மைகளின் உறைவிடம். வெளியிடுவதைக் காட்டிலும் அதிகமான எண்ணங்களும் உணர்ச்சிகளும் உள்ளே இருக்கும். அதனால் சில சமயங்களில் மனதில் உள்ளவற்றை அப்படியே சொல்ல முடியவில்லையே என்று துக்கப்படுவார்கள். ஆத்மீக வாழ்க்கையில் மிகுந்த பற்றுதல் இருக்கும். நேரான முறையிலேயே எதையும் சாதிக்க முயல்வார்கள். சமாதானப்பிரியர். சக்திகளையும் பொருளையும் வீணாக்காமல் உபயோகப்படுத்துவார்கள். மேன்மைக் குணங்கள் பொருந்தாதவிடத்து சண்டைக்காரராயும் மித்திர பேதம் செய்பவராயும் மாறுவர்.

## K

தாய்மை உணர்ச்சியைத் தூண்டும். பல கலைகளையும் கற்பர். முன்னேற்றமடைய மேலும் மேலும் நிலையான காரியங்கள் செய்யப் பிரியப்படுவர். தன் இனத்தைக் காப்பதில் ஆர்வமுண்டு. மேன்மையானவரானால் உலகத்திற்கே சேவை செய்வார்.

## R

இவர்களுக்கு தூண்டுதல் தேவையில்லை. முன்னுக்கு வரத்துடிப்பார்கள். தன்னை எல்லோரும் அறிய வேண்டுமென்று முயற்சி செய்வர். என்ன செய்யவேண்டுமென்கிற நிச்சயம் இல்லாமலேயே சுறுசுறுப்பாக வேலை செய்துகொண்டிருப்பார்கள். சுலபமாகப் பிறரைப் புரிந்து கொள்வர். தன்னிஷ்டப்படியேதான் எப்பொழுதும் நடக்கவிரும்புவார்கள். விடாமுயற்சியும் தளராத ஊக்கமும் உடையவர்களாவர்.

## C (C, G, L, S) — 3

வன்மையையும் ஆண்மையையும் குறிக்கிறது. படைப்பிற்கும் சக்தியையும் ஆளக்கூடிய பலத்தையும் உண்டாக்

கும்: எத்தொழில் புரிந்தாலும் மேன்மையையும் அசாத்தியமான சாதனைகளையும் மேதாவித்தனத்தையும் குறிக்கிறது. பிறர் சோம்பேறிகளாகவோ நிரம்ப தாமதமாகவோ இருந்தால் இவர்களால் பொறுக்க முடியாது. கைகளினாலோ அல்லது சரீரத்தினாலோ வேலை செய்து பிழைப்பதை வெறுப்பார்கள். முன்னேறுவதில் தீவிர ஆர்வம் இருக்கும். மேன்மையான இலட்சியங்களை அமைத்துக்கொண்டு வாழ வேண்டியது அவசியம்; அப்படிச் செய்யாவிடில் பிறர் இவர்களைக் கொடுமையானவரென்று கூறவேண்டும். கலைகளிலும் சாஸ்திரங்களிலும் தீவிர ஆர்வமிருக்கும்: எக்காரியம் செய்த போதிலும் முடிவை அறியத் துடிப்பார்கள். செயலாற்றும் திறன் மிகுந்தவர். இதனால் குறிக்கப்படுகின்றவர்: சக்தியை சிதறடிப்பார்கள்: சுகானுபாவங்களில் நிதானம் தேவை: பிறரை ஆளுவதில் சமர்த்தர்.

## G

தானே எல்லாத் தியாகங்களுக்கும் சோதனைகட்கும் உட்படுவர். மித மிஞ்சின தன்னம்பிக்கையும், எதையும் தாங்கிக் கொள்ளும் சக்தியும் உண்டு. புதிதான விஷயங்களைக் கண்டுபிடிப்பார்கள். திட்டமிட்டுக் காரியஞ் செய்வார்கள். தீர்க்கதரிசிபோல் முடிவை ஆரம்பத்திலிருந்தே சரியாக நோக்குவார்கள். சத்தியம், அன்பு மிளிரும், பொறுமையும் வியக்கும்படியாக இருக்கும்: நோய்வாய்ப் படினும் சீக்கிரமே குணமாகிவிடுவர். மேன்மையாக இல்லாவிடில் இது ஏமாற்றுகிறவர்களையும் சோம்பேறிகளையும் குறிக்கும்:

## L

பிறரை வேலை வாங்குவதில் நிபுணர்கள்: இதனால் குறிக்கப்பெறுவோர் சதா ஏவிக்கொண்டே இருப்பார்கள். ஒன்றையும் மறக்க மாட்டார்கள். நினைத்ததை நடாத்தியே தீருவார்கள். வெளியே மாட்டிக்கொள்ளாமல் ஆணி வேரை இரகசியமாக அறுத்துவிடுவார்கள். காரியவாதிகள்:



## S

தீவிரமான அபிப்பிராயங்களை உண்டாக்கும்: புகழ்வர். இல்லையேல் இகழ்வர். மிக உற்சாகமூட்டிப் பேசுவர். இல்லாவிடில் மிகவும் வருந்தும்படி கூறிய அன்பு போன்ற வார்த்தைகளை உபயோகிப்பர். அல்லது சண்டை மூட்டி விடுவர். கீழ்த்தரமான மனிதரானால் எல்லோருடைய துயரையும் தீர்ப்பார். இரு குணங்களும் கலந்தே நிற்கும்: இது பிறர் துயர் தீர்க்கும் வைத்தியம் போன்ற தொழில்களுக்கும் நல்லது:

## D (D, M, T,) — 4

நேர்மையான நடத்தை. துணிகரமான செயல். நிதானமான அபிப்பிராயம், சலியாத உழைப்பு, பாதகமான சூழ்நிலைகளையும் லக்ஷ்யம் செய்யாமல் உழைத்து வெற்றி காணல் என்பவற்றைக் குறிக்கும்.

## M

இது புத்திசாலித்தனத்தையும் உழைப்பையும், விடா முயற்சியையும் குறிக்கும்: தீர்மானமான அபிப்பிராயங்களும் பிடிவாதமும் உண்டு. அடிக்கடி வாழ்க்கையில் மாறுதல்கள் உண்டாகியபடியிருக்கும்: இல்லாவிடில் தொடர்ச்சியாகக் கவலைகள் வந்துகொண்டிருக்கும். பொறுப்பை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஏற்றுக்கொண்டால் தானே பிறர் உதவியின்றி எல்லாவற்றையும் செய்வார். அந்தஸ்தும் மேலான பதவியும் உண்டாகும்: நுட்பமான அறிவும் ரசிகத்தன்மையும் இருக்கும்.

## T

விடாப்பிடிவாதத்தையும்; மாற்றமுடியாத தீர்மானங்களையும் குறிக்கிறது. பிறருக்கு புத்திமதிகள் போதிப்பார்கள். தீவிரவாதிகளாக இருப்பர்.

## E (E, N, H, X) — 5

ஆராய்ந்து விடயங்களைச் சீர்தூக்கிப் பார்த்து முடிவிற்கு வருதலைக் குறிக்கும். சூழ் நிலைக்கு ஒத்துப்போகும் தன்மையுண்டாகும். பல அரிய யோசனைகளும் முடிவுகளும் திடீரென மனதில் தோன்றும்; அதைப் பின்பற்றுவார்கள். வேதாந்தம் யோகம் இவைகளில் பற்று ஏற்படும். பொது சன அபிப்பிராயத்திற்குப் பயப்படுவார்கள். இரகசியத்தை விரும்புவர். மனதிலே புயலடித்தாலும் வெளிப்படுத்தாமல் அமைதியாக இருப்பவர்போல் கானப்படுவர். சதா ஏதாவதொன்றை அடைய முயன்றவண்ணமிருப்பர். ஆபத்து வந்தால் மிகவும் நிதானமாக நடந்து வெற்றியடைவர். பிறருக்குதவுவதில் விருப்புடையவர். இவர்களுக்கு உற்சாகமேற்பட்டால் மற்றவர்களையும் உற்சாகப்படுத்துவர். சோர்வு ஏற்பட்டால் பிறரையும் அதைரியப்படுத்துவர்: அபிப்பிராயங்கள் மாறிய வண்ணமிருக்கும்.

### N

அன்பிலிருந்து ஆசைவரை, காமத்திலிருந்து கருணைவரை எல்லா உணர்ச்சிகளும் காணப்படும். உணர்சிவசப் பட்டவராதலால் நண்பர்கள் மனதைக் கவர்வர். தன்னிச்சைப்படி எல்லாவற்றையும் செய்வர். சுகந்தரும் எல்லா விஷயங்களும் போகங்களும் இவர்கள் மனதைக் கொள்ளை கொள்ளும். சிரமங்கள் நேரும், அவைகளை வென்று வீரராக விளங்குவர். சிறு சொல்லும் இவர்கள் மனதில் அம்புபோல் தைக்கும். இவர்கள் ஒரு உணர்ச்சிக் கூட்டமே. தமது சக்திகளை விரயமாக்குவர்.

### H

நடக்கப்போகிற காரியங்களை ஊகிக்கும் சக்தி மிதமிஞ்சி இருக்கும். வெற்றித் திட்டங்களை உருவாக்குவதில் சாமர்த்தியமுண்டாக்கும். ஆபத்தை வெகு சீக்கிரம் உணர்ந்து காப்பாற்றிக் கொள்ளச் செய்யும். பாதுகாப்பையும் ஜாக்கிரதையையும் சுகமான இருப்பிடத்தையும் குறிக்கிறது. தாராள நோக்கம் இராது. வீண் செலவும், சக்தி விரயமும் ஏற்படும்.



### X

இதற்கு அறியமுடியாத அல்லது தெரியாத விஷயங்களைத் தெரிந்துகொள்ளும் சக்தி உண்டு, இதனால் தைரியம், நிதானம், ஒப்பிட்டுப் பார்த்தல், இரு விஷயங்களைச் சேர்த்தல். இருந்த நிலையில் எதையும் அறிதல், தளராத ஊக்கம் என்பன குறிக்கப்படுகின்றன. இவ்வெழுத்தைப் பெயரில் உடையவர்கள் எல்லா இச்சைகளையும் நிறைவேற்றிக்கொள்ளுவர்.

## U (U, V, W, ) — 6

இந்த எழுத்து ஆரம்பத்திலோ முடிவிலோ வந்தால் பெயர் உடையவரை ஆத்மீக வாழ்க்கையும், உலகப் போகங்களும் இருபுறமும் இழுக்கும். கற்றுக்கொண்ட விடயங்களை எல்லாம் வாழ்க்கையில், உபயோகப்படுத்தும் திறமை உண்டாகும். ஆத்ம சக்தி இழுக்கும். தன் வாழ்க்கையில் கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் பலம் உண்டாகும். புலன்களால் எல்லா சுகங்களையும் நன்கு அனுபவிப்பார்கள். சிறிது மெதுவாகவே கவனிப்பார்களானாலும் யோசித்தே முடிவு செய்வார்கள். உழைப்பினால் பல விஷயங்களையும் நன்கு கற்பார்கள். துணிந்து அறியாமையை ஒப்புக் கொள்ளக் கூடியவர்கள். மனம் அலைபாயும். நண்பர்களிடமிருந்து விசுவாசம் இருக்கும், பணம் இருந்துகொண்டே இருக்கும். பிறர் பணங்களும் இவர்களிடம் இருக்கும், இவ்வெழுத்து தற்காப்பு சக்தியைக் கொடுக்கும்.

## V

இந்த எழுத்து பெயரில் வருவோர் சுய அபிப்பிராய முடையவர்கள். ஆழ்ந்த நட்பை விரும்புவர். பிறரை நன்கு ஆராய்வார்கள். சுறுசுறுப்பும் தளராத நம்பிக்கையும் இருக்கும். தெய்வீக விஷயங்களையும் தீவிரமாக ஆராய்வதையும், அறிவை அன்றாட வாழ்க்கையில் இலாபமடைய உபயோகிப்பதையும் குறிக்கும்.

## W

இதனால் எதிரிகளிடம் அனுசரித்துப்போகும் தன்மை உணர்த்தப்படுகிறது. அறிவும் அன்பும் மிகும். முன்னேற்றத்தில் ஆர்வமும் பிரமாதமாக வார்த்தையாடும் திறனும் இருக்கும்.

## O (O, Z, —) 7

சக்திகளையும் விடயங்களையும் ஒன்று திரட்டும் சக்தியும் தீர்மானமான காரியங்களும் உண்டு. புதுவிதமான முயற்சிகளும் கருத்துக்களும் ஏற்படும். தன்னிச்சைப்படியே காரியங்களை நடாத்திச் செல்வர். அமானுஷ்யமான மனோ சக்திகள் வாழ்க்கையை ஆட்சிபுரியும். ஓரளவு தூஷணைகளும் பெருத்த எதிர்ப்புக்களும், பெருமுயற்சிகளில் ஈடுபடுவதற்கேற்ப தாராள மனப்பான்மையும் உண்டு. சீறியெழும் புலன்களை அடக்க வெகுவாகப் பாடுபடுவர். அடிக்கடி தேகத்தில் ஏதாவது கோளாறுகள் தோன்றி இடையூறு செய்யும். இப்புலன்களெல்லாம் "O" கடைசி எழுத்தாக பெயரில் வந்தால் மிகுதியாக விளங்கும். முதல் எழுத்தாக "O" வந்தாலும் இப்பலன்கள் தெரியும். விஷயங்களை நன்கு கிரகித்து தீவிரமாய் யோசித்த பின்னரே அற்புதமான கருத்துக்களை வெளியிடுவர். பலருடன் பழகினாலும் மனம் ஏகாந்தத்தை நாடும். உலகம் முழுவதும் நன்மையடையக் கூடிய காரியங்களில் மனம் செல்லும். தெய்வ பக்தியும் நம்பிக்கையும் பூரணமாக இருக்கும். பகலைவிட இரவே இவர்கட்கு மனோசக்திகளை வளர்க்கும்.



## Z

புத்தியைக் கூர்மையாக்கும். வெற்றி பெறுவதற்கு அவசியமான எல்லாக் குணங்களும் அமைந்திருக்கும். பேச்சிலே நயமும் தந்திரமும் மிருதுத் தன்மையும் புலப்படும். காரியவாதி. வெற்றியுண்டு. அதிக கவலையும் நரம்புச் சோர்வும் ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

## F (F, P,) — 8

இவ்வெழுத்து பெயரில் வந்தால் துணிந்து தாக்கும் சுபாவம் உண்டாக்கும். தன் காரியத்தைச் சாதிக்கவும், தன் அபிப்பிராயங்களையே பிறர்மீது திணிக்கவும் திறமை ஏற்படும். நண்பர்களிடம் நீங்காத விசுவாசங் கொண்டவராவர். நிச்சயமான அபிப்பிராயங்களை உடையவர்கள். அதிகம் பேசாமல் காரியத்திலேயே கண்ணாக இருப்பார்கள். தோல்வி நேர்ந்தால் உடனே தான் தோற்கவில்லையென்று காட்டிக்கொண்டு விடுவார்கள். வெற்றியில் மாறாத நம்பிக்கையுடைய இவர்களுக்குச் சரீரபலமும் மனோபலமும் உணர்ச்சிகளும் ஒரு பொழுதும் குறையாது. திடசரீரியாக நீடித்து வாழ்வர்.

வேதாந்தியையும் கொடையாளியையும் குறிக்கும். அளவிலா ரசிகத்தனமும் செலவுமுண்டு. இவருக்கு முன்னேற்றமும் புகழும் பேச்சினாலேயே ஏற்படும் பேச்சுப் பிரமாதமாக இருக்கும். பேச்சில் காணப்படும் உணர்ச்சி கேட்போருக்கு இவரது கருத்துக்களைப் புலப்படுத்தும். சுயமான கற்பனைகள் மனதில் தோன்றும். கவர்ச்சிமிக்க தோற்றமும் இவ்வெழுத்துப் பெயரில் வருவதால் உண்டாகும் நிர்வாக சக்தியும் அதிகரிக்கும். அதிகமாக போகங்களில் ஈடுபட்டால் ஜீவசக்தி குறைவதால் நோயுற நேரும்.

# விவாகம்

1 எண்ணின் கீழ் பிறப்பவர்கள் (1, 10, 19, 28 ஆகிய திகதிகளில் பிறப்போர்) தன்னிஷ்டப்படி நடப்பவராதலால் 1 எண்ணின் கீழ் பிறந்தவரை மணப்பது விசேடமல்ல. பிடிவாதம் எவ்வளவு பெரிய மனஸ்தாபத்தில் முடியுமோ? 2, 4, 1 திகதிகளில் பிறந்தவரை மணக்கலாம். 8 எண் குறிக்கும் திகதிகளில் பிறந்தவரையும் திருமணம் செய்யலாம். (8, 17, 26 திகதிகளில் பிறந்தோரை) இப்படி இல்லாவிடில் கூட்டு எண்ணுக்குப் பொருத்தமான திகதியில் பிறந்தவரை மணக்கலாம். முதலாம் திகதி பிறப்பவருக்கு 4, 8 எண்ணில் கீழ் பிறப்பவர்கள் அடங்கி நடப்பார்கள். 1 எண்ணும் 4 எண்ணும் காந்தமும் இரும்பும் போல. 1 காந்தம்; 4 இரும்பு. மிக அன்னியோன்ய தம்பதிகளாக வாழ்வர். 8 ஆம் திகதியில் பிறந்தவரை மணந்தாலும் சுகமும் சௌக்கியமும் உண்டு. ஏனெனில் 8 எண்காரர் 1 எண்ணுடையவரை இதய பீடத்தில் வைத்துப் போற்றுவர். சொல்கிறபடியெல்லாம் நடந்து திருப்திப்படுத்துவார்கள்.

1 எண்காரரும் 8 எண் உடையவரை ஆதரவுடன் போற்றுவர். கொடி கிளையைப் பற்றிப் படருவதுபோல 8 எண்காரர் 1 எண்காரருடன் வாழ்வர். 8 துரதிர்ஷ்டகரமான எண்ணானபோதிலும் விவாகம் அதிர்ஷ்டகரமான தினத்தில் நடந்தால் ஒரு குறையும் வராது. பொதுவாகவே 1 எண் சூரியனைக் குறிப்பதால் — சூரியனுடைய மனைவி உஷ்ணம் தாங்காமல் பூமிக்கு ஓடிவந்தாள். முதலிய விடயங்களைப் படித்திருப்பீர்கள். இவர்களது விவாக வாழ்க்கையில் சிக்கல்கள் ஏற்படுவது சகஜமே. மனைவியரை இழத்தல்; பெண் ஆனால் புருஷனை இழத்தல் உண்டு எனலாம். ஆனால் முகூர்த்த தினம் அதிர்ஷ்டகரமானதாக இருந்தால் இப்பலன் நடக்காதபடி நிச்சயம் செய்ய முடியும்.



துரதிர்ஷ்ட தினத்தில் விவாகம் நடந்தால் பலன் சீக்கிரமே நடைபெறக்கூடும். 1 எண் உடையவர்களுக்குப் புத்திர பாக்கியம் உண்டு. எல்லாச் சுகங்களும் உண்டு. எண்ணின் பலம் அதிகரித்து பிரகாசம் விருத்தியானால் மனைவியரை அது ஓரளவு பாதிக்கும். (சூரியனுக்குப் பிரகாசமுண்டு. குளிர்மையோ, பிறர் தங்கியிருக்க நிழலோ கிடைக்காது) ஆதிக்க பலம் மிகுந்தவர்கள் பெரும்பாலும் மனைவியை இழந்தவராகவோ—விவாக மில்லாதவராகவோ இருப்பதைக் காணலாம்.

1 எண்ணுடையவர் 3, 5, 6, எண்களில் பிறந்தவர்களை மணந்தால் சுகமாக வாழ்வர். ஒருவரையொருவர் இழக்க நேராது. சுகமாக வாழ்வரென்றாலும் ஒருக்காலும் மனமொத்த காதலர்களாக மாட்டார்கள்.

1, 4, 8 எண்கள் உடையவரே ஒருவரையொருவர் காதலிப்பர். காதல் சரீரக் கவர்ச்சியையே அடிப்படையாகக் கொண்டது. ஒருவருக்குத் தன்னைப் போன்றவர்களையும், தனக்கு ஒத்தவர்களையும் காணும்போதுதான் காதல் உண்டாகிறது. 2 எண் குறிக்கும் திகதிகளில் பிறக்கின்றவர்கள் 7 எண் உடையவர்களையே மிகவும் விரும்புவர். ஒருவருக்கொருவர் கவர்ச்சி இருக்கும். நற்புத்திரர்களைப் பெற்று வாழ்வர். இவர்கள் 3, 6, 4, 8 எண்களில் பிறந்தவர்களையும் மணக்கலாம். 3, 6 எண்களில் பிறந்தவர்கள் இவர்களுக்கு நன்மையளிப்பார்கள். 4, 8 திகதிகளில் பிறந்தவர்கள் இவர்களைச் சீர்திருத்துவார்கள். 2 எண் உடையவர் ஆண் ஆனால் 7 எண் உடைய பெண்ணை மணக்கலாம். 1 எண் உடைய பெண்ணை மணந்து கொண்டு சிரமங்கொடுத்தால் அப் பெண்மணி புருஷன் வேண்டாமென்று கூறிப் போய்விடுவாள்.

2 எண்ணில் பிறக்கும் பெண் 2 எண்ணுடை ஆணை மணந்தால் பெண் சிரமப்படக்கூடும். 2 எண்ணுக்குக்

குடும்ப வாழ்க்கையில் பிரச்சினைகள் உருவாகும். இவர்களுக்குச் சரியாக நடந்துகொள்ளத் தெரிவதில்லை. இந்த எண்ணில் பிறந்தவர்களே மற்றவரால் நீதிமன்றத்துக்கு இழுக்கப்படுகிறவர்கள். இவர்களுக்குக் காதல் நன்மை தருவதில்லை. ஏனெனில் இவர்களுக்கு மாறும் சுபாவம் உண்டு. காதல் ஏமாற்றத்தையும், விரக்தியையும் உண்டாக்கி வைக்கும். இவர்களுக்கும் 7, 1 எண்கள் உடையவர்களுக்கும் கவர்ச்சியுண்டாகும். 9 எண் உடையோரைத் தவிர்க்கவும்.

3 எண்ணில் பிறப்பவர்கள் 3, 9 எண்களில் பிறந்தவர்களையே நேசிப்பர். கூட்டு எண்ணிற்குப் பொருத்தமான எண்கள் உடையவரை மணக்கலாம். நற்குணங்களும், நேர்மையும் மிக்க இவர்கள் 3 எண்காரர்களையே மணக்க குறைவற்ற வாழ்க்கையையும், மனச் சந்தோஷத்தையும் அனுபவிப்பர். 8 எண்காரர்களை மட்டும் மணக்கக்கூடாது. 2 எண்காரர்களாலும் சுகப்படலாம். புத்திரப் பேறுண்டு.

4 எண்கர்ரர்கள் தாம் கட்டுப்பட்டு நேசிக்க மனைவியோ புருஷனோ வேண்டுமானால் 1 எண்காரரை மணக்கலாம். தன்னை நேசித்து அடங்கி நடப்பவரை மணக்க வேண்டுமானால் 8 எண்காரர்கள் உளர். 4 எண் உடையவர்களை நல்ல தினத்தில் மணந்துகொண்டால், நீண்ட நாள் சுகமாக மனமொத்து வாழலாம். புத்திரப் பேறுண்டு. செலவாளியானதால் 4 எண் ஆண்கள் 6 எண்ணுடைய பெண்களை மணந்தால் செல்வந்தராவர்.

5 எண்காரர்களுக்கு 5, 9 எண்களில் பிறந்தோரிடம் கண்டதும் காதல் எற்படும், கூட்டு எண்ணுக்குப் பொருத்தமானவர்களை மணந்தால் விவாக வாழ்க்கை நீடிக்கும். கூட்டு எண்ணும் 5 ஆக இருந்தால் 1, 3, 6, 9 திகதிகளில் பிறந்தவரை மணக்கலாம். 5 எண் குறிக்கும் 5, 14, 23 திகதிகளில் பிறந்தவர்களுக்குப் புத்திர பாக்கியம் குறைவு. கூட்டு எண் 5 ஆக இருந்தாலும் அப்படியே



இவர்கள் 5 எண் உடையவர்களைத் திருமணம் புரிந்து கொண்டால் புத்திரப்பேறு ஏற்படுவது சந்தேகமே. கூட்டு எண்கள் வலிமையானவையாக இருந்தால் நாட்பட்டு ஏதோ ஒன்றோ இரண்டோ குழந்தைகள் உண்டாகும். பெயரை அனுசரித்துப் புத்திரபாக்கியம் உண்டாகும்.

6 எண் உடையவர்கள் தன்னைப் போன்ற அழகான 6 எண்காரரிடமே மனதைப் பறிகொடுப்பர். திகதி கூட்டு எண் இரண்டும் 6 ஆக இருந்தால் மற்றவர் 1, 4, 9 எண்ணுடையவராக இருத்தல் நன்று. மற்றவரும் 6 எண்ணை உடையவராக இருந்தால், கூட்டு எண் வலிமையுடையதாக இருந்தால்தான் பிள்ளைப்பேறு உண்டாகும். கூட்டெண் 2, 7, 8 முதலியவையாக இருந்தால் புத்திர உற்பத்தி இல்லை. 6 எண்காரர்கள் பெண்களையே அதிகம் பெறுவர். 5 எண் உடையவர்களையும் மணக்கலாம்.

7 எண் உடையவர்கள் பெரும்பாலும் விவாக வாழ்க்கையில் சுகம் அடைவதில்லை. மாறுபட்ட குணங்களையுடையவரையே மணந்து அல்லற்படுகின்றனர். இவர்களில் ஸ்திரீகள் கூட்டெண் நன்றாக இருக்கும் தினங்களில் பிறந்திருந்தால் நல்ல புத்திரப் பேறுடையவர்களாகவும், அழகானவர்களாகவும் காணப்படுகின்றனர். அப்படி இல்லாவிடில் இளைத்து அழகைத் தரும் அங்கங்கள் கவர்ச்சி குன்றி, புருடர் விரும்பாதவர்களாக இருப்பர். இவர்களுக்குப் புத்திரப்பேறு ஏற்படுவது அபூர்வம். 2 எண் உடையவர்களை மணந்தால் மனமொத்த தம்பதிகளாவர். தினசரி சண்டையும் சமாதானமுமாகவே இருக்கும். 4 எண்காரர்களை மணந்தாலும் இவர்களுக்குச் சுகமுண்டு. 4 எண் உடையவர் பெண்களிடம் அனுதாபம் உடையவர். தன் சுகத்தைப் பெரிதாகக் கருதமாட்டார். 8 எண் உடையவரை மணந்தால் துரதிர்ஷ்டம் உண்டாகும். 1 எண் உடையவரை மணந்தால் சிறிது தாமதமாகப் புத்திரப் பேறுண்டாகும். ஆனாலும் விவாக வாழ்க்கை நீடிக்காது.

8 திகதிகளில் பிறந்தோர் 1 அல்லது 4 திகதிகளில் பிறந்தவரை மணக்கவும் இவர்களுக்கு 8, 4, 1 திகதிகளில் பிறந்தவர்களிடம்தான் காதல் ஏற்படும். இவர்கள் 2, 7, 9 திகதிகளில் பிறந்தவரை மணக்க வேண்டாம். 6 எண்ணுடையவரையும் மணக்கலாம்.

9 திகதிகளில் பிறந்தவர்கள் 9 திகதிகளில் பிறந்தவரை மணக்கலாம். 5 ஆம் திகதியில் பிறந்தவரை மணத்தல் இரண்டாம் பக்ஷமே. இவர்கள் உஷ்ண சரீரிகளாகையால் 6, 3 எண்ணிக்கை உடையவர்களை மணந்துகொள்ளுதலும் நலமே. மற்ற 1, 2, 8 திகதிகளில் பிறந்தவர்களை மணத்தல் நல்லதல்ல.

மேலே ஒவ்வொரு திகதிக்கும் பொருத்தமான எண்ணுடையவர்களைக் குறித்திருக்கிறேன். இப்படிப்பட்ட சரியான பொருத்தமுடையவர்களே ஒருவரையொருவர் நேசித்து வாழ்வர். இப்படிப்பட்ட பொருத்தம் இல்லாதவர்கள் தம்பதிகளாக இருந்தால் எல்லாப் பாக்கியங்களும் அமைந்திருந்தாலும், ஒருவருக்கு மற்றவர் விடயத்தில் ஈடுபாடு இருக்காது: குடும்பம் என்னும் காரியாலயத்தில் உள்ள இரு அதிகாரிகள் போல நடந்துகொள்வர். எல்லாம் சரிவர நடைபெறும்; ஆனாலும் இருவர் மனமும் கலக்காது.

கூட்டு எண் 4, 5 அல்லது 8 வரும் தினங்களில் மணம் புரிதல் எந்த எண்ணில் பிறந்தவருக்கும் நன்மை தராது: 4 ஆனால் திடீரெனப் பெருத்த மாறுதல் ஏற்பட்டு உபத்திரவங் கொடுக்கும். 5 எனில் எதிர்பாராதபடி நிகழ்ச்சிகள் ஏற்பட்டு விவாக வாழ்க்கையைப் பயனற்ற நிலைக்குக் கொண்டு செல்லும். 8 ஆனால் துரதிர்ஷ்டங்கள் தொடரும்.

1. ஒருவர் 3 : 7 எண்கள் உடையவர், மற்றவர் 2 : 4 எண்கள் உடையவர், விவாக தினம் — 3 : 1, 1 : 3, 7 : 1, 7 : 3, 9 : 1, 4 : 1, 2 : 1 — இவைகளில் ஏதாவதொன்றாக இருக்கலாம். 3 : 1 — இதுதான் மிக்க விசேடமானது. ஒருவருக்கு 7 எண் இருப்பதால கூட்டெண் 7 வரும் தினம் குறிக்கப்படவில்லை.

2. ஒருவர் எண்கள் 4 : 6; மற்றவர் எண்கள் 1 : 9 — விவாக தினம் 1 : 1, 1 : 6. 6 : 9, 4 : 1, 9 : 6, 9 : 1, 1 : 9, 9 : 9; 6 : 6, 4 : 6 — இவைகளெல்லாம் பொருந்தும். ஒருவருக்கு 6 எண் இருப்பதால் 3 எண் தினங்கள் கூடாது.



1, 2, 4, 7, 8 எண் உடையவர்களுக்கு அவர்களது எண்களையே உடைய குழந்தைகள்தான் பிறப்பார்கள். 1 எண் உடைய குழந்தைகள் பிறந்தால் குடும்பம் முன்னேற்றமடையும். 8 எண் உடைய குழந்தைகள் பிறந்தால் சிரமங்கள் உண்டாகும்.

3, 6, 9 எண் உடையவர்களுக்கு அவர்களது எண்களைக் கொண்ட குழந்தைகளே தோன்றுவார்கள். 5 எண் உடைய குழந்தைகளும் பிறப்பதுண்டு.

5 எண் உடையவருக்கு 5 எண் உடைய குழந்தைகள் உண்டாவதுண்டு. 5 எண்ணில் குழந்தைகள் பிறப்பது குடும்பத்தில் முன்னேற்ற முண்டாவதையும், புகழ் பெறுவதையும் குறிக்கும். 6 எண்ணில் குழந்தைகள் பிறப்பது சுகத்தையும் சௌகரியத்தையும் உண்டுபண்ணும். விவாக தினத்தை அனுசரித்தே குழந்தைகள் பிறப்பார்கள்.

9, 18, 27 ஆகிய திகதிகளில் பிறப்பவர்களுக்குக் குழந்தைகள் குறைவாகப் பிறக்கும். சிலர் குடும்பத்தில் பிள்ளைகளை அல்லது மனைவியைப் பிரிந்திருப்பர்.

விவாகம் புரிந்துகொண்டு சுகப்பட விரும்புவோர், திருமணம் செய்து கொள்ளவேண்டிய தினங்கள்.

| பிறந்த திகதி எண் அல்லது கூட்டெண் | விவாகம் புரிந்துகொள்ளும் தினத்தின் கூட்டு எண் |
|---|---|
| 1 | 1 |
| 2 | 1 அல்லது 7 |
| 3 | 3 ,, 9 |
| 4 | 1 |
| 5 | மற்ற எண்ணுக்குப் பொருத்தமான எண் அல்லது மற்றவரது எண்ணுக்குப் பொருத்தமான எண் |
| 6 | 6 அல்லது 9 |
| 7 | 1 அல்லது 2 |
| 8 | 1 |
| 9 | 9, 3 அல்லது 6 |

# நீங்களும் உங்களுடைய வாழ்க்கையை வெற்றிகரமாய்ச் செய்துகொள்ளலாம்.

உங்கள் பெயர் என்ன எண் உடையதென்பதை அதன் எழுத்துக்களின் எண்களைக் கூட்டியறியவும். இதோ எழுத்துக்களுக்கான சரியான எண்கள்.

| | |
|---|---|
| A, I, J, Q, Y, | — 1 |
| B, K, R, | — 2 |
| C, G, L, S, | — 3 |
| D, M, T; | — 4 |
| E, H, N, X. | — 5 |
| U. V. W. | — 6 |
| O. Z | — 7 |
| F. P | — 8 |

பெயர் எப்படி எழுதப்படுகிறதோ அப்படியே கணக்கிட வேண்டும். பதவியைக் குறிக்கும் சொற்களையும் மரியாதைக்காக சேர்க்கப்படும் Mr. முதலிய எழுத்துக்களையும் சேர்க்க வேண்டாம். பெயருக்குப் பின்னர் வரும் எழுத்துக்களுக்கு மதிப்புக் கிடையாது.

2 எண், குறிக்கும் பெயர்களெல்லாமே சிக்கல்களை வாழ்க்கையில் ஏற்படுத்தும். 7 எண்ணும் தடைகளை சதா ஏற்படுத்தக் கூடியதே. 4 எண்கள் எதிர்பாராத எதிர்ப்புக்களை உண்டு பண்ணும். 8 எண் பெயராக வந்து அதிர்ஷ்டகரமாக இருந்தால் அது நியாயமற்ற முறைகளில் நடப்பதைக் குறிக்கிறது. ஒழுங்காகத் தொழில் நடத்த முயற்சித்தால் இவ்வெண் நஷ்டத்தையே தரும்.

நல்லறிவையும் சுகத்தையும் வெற்றியையும் தரும் எண்களே அதிர்ஷ்டமானவையாகும்.

7 எண் மனிதர்களால் அடக்கி ஆள முடியாதது: மனதிற் கெட்டாத ஆன்ம தத்துவத்தை குறிப்பதாதலால் இதைத் துணை கொண்டு உலக வாழ்க்கையில் வெற்றி பெற முடியாது: 9 எண்களின் பிரிவுகளில் உள்ள திகதிகளைத் துணைக்கொண்டால் உலகிலுள்ள எல்லாப் பொருட்களையும் வெல்லலாம்.

பிறந்த திகதியோ, அல்லது திகதி, மாதம் வருடம் மூன்றையும் கூட்டி வந்த தொகையோ 1, 4 அல்லது 8 ஆக இருந்தால் 1 எண் வருகிற பெயர் பூரணமாக பலனைத்தரும். வேறு எண்களின் ஆதிக்கத்தின்கீழ் பிறந்தவர்கள் 1 எண்வரும் பெயரை வைத்துக்கொண்டால் முன்னேற்றம் உண்டானாலும் வாழ்க்கையில் வீண் சிக்கல்கள் ஏற்படும். மனதிற்குப் பிடிக்காத வாழ்க்கையும் அமையக் கூடும்.

எண் 2 (பிறந்த திகதிகள் 2, 11, 20, 29) இது ஒரு அதிர்ஷ்டகரமான எண்ணல்ல எனும் காரணத்தாலும், வளர்தலும் தேய்தலும் உடைய சந்திரனது ஆதிக்கத்திலுள்ளதாலும் இந்த எண்ணுடைய பெயருடன் வாழ்வது நிச்சயமற்ற வாழ்வாக இருக்கும். சதா கவலையும் போராட்டமும் இருக்கும். ஆகையால் பிறந்த திகதி, மாதம், வருடம் இவைகளைக் கூட்டி வருகிற எண்ணிக்கை எதுவோ அந்த எண்ணிற்கேற்றபடி பெயரை வைத்துக் கொள்ளுதலே நலம். ஏழு எண்ணுடைய பெயர்களில், இவர்களுக்குப் பூரண பிரகாசம் ஏற்படும். ஏழு எண் சிரமங்களையும் சோதனைகளையும் தந்தே வெற்றியளிக்கும் ஆன்மீக வாழ்க்கை வெற்றி பெறும். பொருட்செல்வம் பதவி முதலியவை 1, 3, 5, 6 வரும் பெயர்கள் அமைந்தாலே தான் உண்டு. 4, 8, 9 எண் வரும் பெயர்கள் நலந்த



ராது. கூட்டி வருகிற எண்ணை அனுசரித்துப் பெயரை வைத்துக்கொண்டால் நோய்கள் தீரும்.

பிறந்த திகதியோ அல்லது திகதி, மாதம், வருடம் கூட்டிய தொகையோ 3 எண் வந்தால், பெயரும் 3 எண்ணாக இருக்கலாம்: மற்ற எண்களின் ஆதிக்கத்தில் பிறந்தவர் இவ்வெண்ணால் குறிக்கப்படும் பெயரை உடையவராக இருந்தால் வாழ்க்கை பயனற்றதாக முடியும்; இவர்கள் அடைய வேண்டிய பலன்களை மற்றவர்கள் அனுபவிக்க இவர்கள் இடையறாது உழைத்தவண்ணமிருப்பர்.

3 எண் குரு கிரகத்தைக் குறிக்கிறது. மற்ற கிரகங்களின் அமைப்பைத் தன் தன்மையால் சீர்திருத்தும் கிரகமாதலால் சுயமாக நன்மை தவிர தீமைகளை அளிப்பதே கிடையாது. பிறந்த நாளில் மற்ற எண்ணிக்கை (திகதி, மாதம், வருடம் மூன்றையும் கூட்டி வருவது) எதுவோ அதன் பலனை மேன்மையுறச் செய்து அதற்கான பலனையே கொடுத்து வருமாதலால் முக்கிய சம்பவங்கள் கூட மற்ற எண் குறிக்கும் வயதுகளிலேயே நடைபெறும். கூட்டி வருகிற எண்ணும் மூன்று ஆக இருந்தால் பெயர் குறிக்கிற எண்ணை அனுசரித்தே எல்லாம் நடைபெறும் என்பதை நன்றாக நினைவில் வைக்கவும்.

4, 13, 22, 31 ஆகிய திகதிகளில் பிறந்த நான்கு எண்ணிக்கை காரர்கள் 1 எண் வருகிற பெயரையோ, அல்லது திகதி, மாதம், வருடம் கூட்டி வருகிற எண்ணிற்குப் பொருத்தமான பெயரையோ வைத்துக் கொள்வது நலம்.

5, 6, 7, 9 எண்காரர்கள் தத்தமது பெயரை அதிர்ஷ்ட எண்களில் அமைக்கும்போது கூட்டு எண்களையும் கவனிக்குக.

8 எண் ஆன்மீகத்துறையில் முற்பிறவிகளில் முன்னேறியவர்களே பூரணத்துவம் அடைவதன் பொருட்டு 8 எண்

குறிக்கும் திகதிகளில் பிறக்கின்றனர். (திகதி அல்லது கூட்டெண்) கடவுள் அருள் பெற்று மனிதப் பிறவியை முடித்துக்கொள்ள வந்தவர்கள் இவர்களே. இவர்களுக்கு அருள் நாட்டம் ஏற்பட்டுவிட்டால் துரதிர்ஷ்டங்கள் குறைந்து கொண்டே வரும். அனுபவித்துத் தீர்க்க வேண்டிய பிறவியாதலால் வெற்றிக்குமேல் வெற்றியாக வரும். அல்லது கஷ்டத்திற்கு மேல் கஷ்டமாக வரும். சூழ்நிலைகளும் சம்பவங்களும் இவர்களால் மாற்றிக் கொள்ள முடியாதபடி வர ஆரம்பிக்கும்.

சனீஸ்வரர் சுகத்தைக் கொடுத்து அத்துடன் பலவித சிக்கல்களையும் ஏற்படுத்தி சுகங்களை வெறுக்கும்படி தூண்டுவார். அல்லது கஷ்டங்களையே கொடுத்து அதன் மூலம் உலக வாழ்க்கையில் உள்ள மோகத்தைத் துறக்கச் செய்வார். பதவியைக் கொடுக்கும்போதும் கூடவே பெரிய பொறுப்புக்களையும் எதிர்ப்புகளையும் தந்து பதவியே வேண்டாமென்று நினைக்கும்படி செய்வார். சரீரத்தில் ஏதாவது நோயை ஏற்படுத்தி அதன்மூலம் சுகம் வேண்டாமென்று நினைக்கும்படி செய்வார். வாக்கிலே புகுந்து காரசாரமாகவே பேசி (மனதில் ஒருவருக்கும் தீங்கு நினைக்காத போதும்) எல்லோரும் வெறுக்கும்படி செய்து மற்றவர்களிடமிருந்து இவரைப் பிரிப்பார். இவர்களது நற்குணங்களைப் பிறர் அறிந்து பாராட்டாதபடி இவர்களது நற்குணங்களை மறைப்பார். பிறர் கஷ்டங்கண்டு உருகக் கூடிய இவர்களைக் கடின சித்தமுடையவர் போலத் தோற்றுவிப்பார். இப்படி எவ்வளவோ செய்வார்.

மேற்கண்ட பலன்கள் மாற வேண்டுமென விரும்புபவர்கள் பெயரை 5 எண் வரும்படி மாற்றிக்கொள்ள வேண்டும். 5 எண்ணுக்கு மாத்திரந்தான் விதியை அப்படியே அனுபவிக்கும்படி செய்யாமல் முற்றிலும் மாற்றிக் கொண்டே போகக் கூடிய சக்தி உண்டு. பெயரை 5 எண் வருகிற எண்ணுக வைத்துக்கொண்டு கூட்டு எண் 5 வரும் தினங்களிலேயே முக்கியமான காரியங்களைச் செய்து வந்தால் அற்புதமான மாறுதல்களை வெகு சீக்கிரமே உணரலாம், அப்படி வழக்கமாக செய்து வந்தால் குணங்களும் மாறும். தான் செய்ய முடியாதென முன்பு நினைத்த காரியங்களும் வெகு எளிதில் நிறைவேறும்.



பிறந்த திகதி 8 எண் வருவதாக இருந்தால் கூட்டு எண்ணிற்கு சாதகமான பெயரை வைத்துக்கொள்ளலாம். இரண்டும் 8 ஆகவே இருந்தால் 5 எண் வருகிற பெயரை வைத்துக்கொண்டால் பிடித்த சனீஸ்வரர் விலகுவார். வாழ்க்கையில் வெற்றி ஏற்படும்.

பெயர் பிறந்த திகதிக்கும் கூட்டு எண்ணுக்கும் சம்பந்தமில்லா எண் உடையதாக இருந்தால், மிக அதிர்ஷ்டகரமான எண்ணுக இருந்தாலும் சுகம் தராது. பிறந்த திகதிக்கு ஒத்ததாக இருந்தால் மனதிற்குப் பிடித்தமான வாழ்க்கை அமையும். பெயர் மாற்றிக்கொண்டவுடன் சரீரத்திலும், மனத்திலும் மாறுதல்கள் தென்படும். விசேடமாக 5, 6 குறிக்கும் பெயர்களுக்கு மாற்றிக் கொள்ளும்போதுதான் சரீரம் அதிகம் பாதிக்கப்படுவது தெரியும். 5 எண்ணுக்கு மாற்றிக்கொண்டால் விவரிக்க முடியாத உணர்ச்சிகள் தோன்றும். 6 எண்ணுக்கு மாற்றிக்கொண்டால் சரீரத்தில் வேகந் தோன்றும், ஏதாவது செய்ய வேண்டுமென்ற வெறி போன்ற உணர்ச்சிகள் உண்டாகும். கட்டுக்கடங்காத சக்தி சரீரத்தில் உலவ ஆரம்பிக்கும். எவ்வளவு வேலை செய்தாலும் களைப்பு ஏற்படாது.

அதிர்ஷ்டமான திகதிகளில் பிறந்தவர்களைவிட பெயர் மாத்திரம் அதிர்ஷ்டகரமாக உடையவர்கள் மேன்மையடைவதைக் காணலாம். இரண்டும் பொருந்தும்போதுதான் மிதமிஞ்சின வெற்றி உண்டாகிறது. ஆகையால் பிறந்த திகதி எண்கள் சரியாக இல்லாதவர்கள் சிறிதும் கவலைப்பட வேண்டியதில்லை. பெயரை நன்ருக அமைத்துவிட்

டால் வாழ்க்கை சீர்ப்பட்டுவிடும்: பெயரில் ஒரே எண்ணை உடையவர்கள் ஒருவரைஒருவர் நேசிப்பர். ஒரு 7 எண் உடையவர் மற்றொரு 7எண்ணுடையவர் சொற்படியெல்லாம் கேட்கிறார் என வைத்துக்கொள்வோம். அதனால் பல கஷ்டங்களை அனுபவித்த போதிலும் அவரால் தன்னை விடுவித்துக்கொள்ள முடியாது. ஆனால் அவர் பெயரை வேறு எண்ணுக்கு மாற்றிக்கொண்டு விட்டால் உடனே அவர் பிடியிலிருந்து விடுபடுவர். இது ஒவ்வொரு எண்ணுக்கும் பொருந்தும். குணப் பொருத்தம் இல்லாத தம்பதிகளும் பெயரை ஒன்றிற்கொன்று பொருந்தும் எண்களுக்கு மாற்றிக்கொண்டால் மனமொத்தவர்களாவார்கள்.

செல்லப் பெயர் ஏதாவது இருந்தால் அதன் எண்ணிக்கையையும் கவனிக்கவும். பிறந்த மனிதர் யந்திரம். அவரது பெயர் ஒருமந்திரம். இரண்டுக்கும் பொருத்தமிருந்தால் பூரண பலன் கிட்டும். மோட்டார் முதலிய வாகனங்களுக்கு பெயரை விட எண்ணே பிரதானமாகும்.

வாழ்க்கையை நிர்ணயித்துக் கொள்ளுமுன் பிறந்த திகதி எண்களைக் கவனிக்கவும். பெயர் அதற்கு அனுசரணையாக இருக்கிறதா என்பதை கவனிக்கவும். அதன் பின்னர் செய்யும் தொழிலை ஒரு அதிர்ஷ்டதினத்தில் ஆரம்பிக்கவும்.

உத்தியோகத்திலிருப்பவர்கள் பெயரை அதிர்ஷ்டகரமாக அமைத்துக் கொண்டால் வெகு சீக்கிரமே முன்னேற்றமுண்டாகும். உத்தியோகத்தில் சேர்ந்ததினம் அதிர்ஷ்டதினமாக இல்லாவிடில் சிலதினங்கள் விடுமுறை எடுத்துக் கொண்டு அதிர்ஷ்டதினத்தில் மறுபடியும் வேலைக்குப் போகலாம்.

வியாபாரிகள் — புதுக்கணக்கை அதிர்ஷ்ட நாளிலே ஆரம்பிக்க வேண்டும். கூட்டு எண் அதிஷ்டகரமாக இருக்க



வேண்டியது மிக அவசியம். அப்படிச் செய்தால் அடுத்த கணக்கு ஆரம்பிப்பதற்கு முன்னரே விசேட முன்னேற்றத்தைக் காணலாம். வியாபாரத்திற்கான சாமான்கள் வாங்கும் போதும் கூட்டு எண் அதிர்ஷ்டகரமாக இருக்கும் தினங்களிலே கொள்முதல் செய்யவும். வியாபாரம் சம்பந்தமாக பிரயாணம் செய்ய வேண்டுமானால் அதிர்ஷ்ட தினத்தில் தான் புறப்படவேண்டும்.

கூட்டாக வியாபாரம் செய்ய விரும்பினால் தன்னுடைய எண்ணிக்கையையோ அல்லது தனக்கு அதிர்ஷ்டமான எண்ணிக்கையையோ பிறந்த திகதி எண்ணாக உடையவருடன் சேரலாம். தனக்கு துரதிர்ஷ்டகரமான எண்ணில் பிறந்தவருடன் கூடினால் முடிவு நன்றாக இராது.

---

# உங்களுக்கு உதவிசெய்யும் எண்காரர்கள்

1 எண் குறிக்கும் திகதியில் பிறந்திருந்தால் 4, 8, 1 எண்ணிக்கைக்காரர்களே முழுமனதுடன் உதவுவார்கள். 1 எண்காரர்கள் சாதாரண உதவிகளையும் 4 எண்காரர்கள் வாழ்க்கையை சீர்திருத்தக்கூடிய உதவிகளையும், 8 எண்காரர்கள் நிலையான உதவிகளையும் (நீண்ட நாள் பலன் தரக்கூடிய ஸ்திரமானவை) செய்வார்கள்.

2 எண்ணில் பிறந்தவர்கள் உதவியும் 7 எண்ணின் கீழ் பிறப்பவர்களின் உதவியும் சீக்கிரம் மாறிவிடும். மற்றவர்கள் உதவினால் அது ஒரு எதிர் பார்க்கமுடியாத அற்புதமே.

2 எண்ணின் கீழ் பிறப்பவருக்கு 7 எண்ணின் கீழ் பிறப்பவர்களே பெருத்த நன்மைகளைச் செய்வார்கள். 2 எண்காரர்கள் நன்மையும் புரியக்கூடும்; தீமையும் புரியக் கூடும்; மற்றபடி 1, 3, 4. 8 எண்ணின் கீழ் பிறந்தோர் நன்மையே புரிவர்.

3 எண்ணில் பிறந்தோருக்கு 2 திகதிகளில் பிறந்தோரும் உதவுவார்கள். 5, 6 எண்காரர்களால் நன்மை விளையாது. 9 எண் காரர்களால் நன்மையே ஏற்படும்.

4 எண்காரருக்கு 1. 8 எண்கார்ரர்களே பெருத்த உதவிகளைச் செய்வார்கள். 4, 2 எண்காரர்களாலும் நன்மையுண்டு. விதிவசமான மிகப் பெரிய உதவி 8 எண்காரர்களாலேயே செய்யப்படும்.

5 எண் காரர்களுக்கு எல்லோரும் உதவுவார்கள்.

6 எண் காரர்களுக்கு 3, 6, 9 எண்காரர்கள் மனமுவந்து உதவி செப்வர். மிகப் பெரிய உதவிகள் 3 எண்



ணிக்கைக்காரர்களாலேதான் ஏற்படும்: 7 எண் பிறந்த திகதி எண்ணானால் உதவி 2, 7, 4, 1 திகதிகளில் பிறந்தவர்கள் மூலம் கிட்டும்.

8 எண்ணானால் இவர்களது வாழ்க்கை 1, 4 எண்காரர்களாலேயே மலர்ச்சியடையும். 8 எண்கார்ரர்களும் நன்மையே செய்வார்கள்.

9 எண்ணின் கீழ் பிறந்தோருக்கு 3, 5, 6, 9 எண்காரர்களின் உதவியுண்டு. 8 எண்காரர்களால் நன்மையும் 2 எண்காரர்களால் தீமையும் உண்டாகும்.

உதவி என்பது வேறு; கூட்டாக முயற்சி செய்வதென்பது வேறு. தனக்கு அதிர்ஷ்டகரமான எண்கள் உடையவர்களுடன் சேர்ந்துதான் ஒரு காரியத்தில் இறங்கலாம்.

## பிரயாணம்

பிரயாணத்தைத் தொடங்கும் தினம் அதிர்ஷ்டகரமானதாக இருக்க வேண்டும். குறிப்பிட்ட இடத்திற்கு போய்ச் சேரும் தினம் எதாக வேண்டுமானாலும் இருக்கலாம். பிரயாண தினத்தின் கூட்டு எண் 5 ஆனால் அப்பிரயாணத்தின் மூலம் எதிர்பாராத நன்மைகள் விளையும். எதிர்பார்க்கிறதற்குமேல் சௌக்கியம் உண்டாகும்; பிரயாணத்தை கூட்டு எண் அதிர்ஷ்டகரமாக உள்ள தினத்தில் மேற்கொண்டால் காரிய சித்தி உண்டாகும். திகதி துரதிர்ஷ்டகரமானதாக இருந்து கூட்டு எண் அதிர்ஷ்டமானதாக இருந்தால் பல கஷ்ட நஷ்டங்களை

யடைந்து பின்னர் வெற்றி பெறுவதைக் குறிக்கும். தி:தி
அதிர்ஷ்டகரமானதாக இருந்து கூட்டு எண் சரியில்லா
விடில் சுகமாக எல்லாம் நடக்கும்: ஆனால் முடிவு ஏமாற்ற
மளிக்கும். இந்த எண்களை சில தினங்கள் கவனித்து வந்
தாலே அவைகளின் அபூர்வ சக்தி புலப்படும். உதாரண
மாக ஒரு பிரயாணத்தைக் கவனிப்போம். யாழ்ப்பாணத்
திலிருந்து கொழும்புக்குப் போக ரயிலில் ஒரு டிக்கற் வாங்
குகிறோமே — அதில் ஒரு எண் இருப்பதைக் கவனிக்கவும்.
அதைக் கூட்டிப் பார்க்கவும். எந்த எண் வருகிறதோ
அந்தப் பலன்தான் உங்களுடைய அதிர்ஷ்ட எண் வரவேண்
டியது அவசியம். துரதிர்ஷ்டகரமான எண்வந்தால் அந்
தப் பலனைப் பிரயாணம் செய்து பின்னர் தெரிந்து
கொள்ள வேண்டியதில்லை.

## முக்கிய கவனிப்பு

எண் அதிர்ஷ்ட விஞ்ஞானத்தில் 1 எண் சூரியனையும், 2 சந்திரன், 3 வியாழன், 4 இராகு, 5 புதன், 6 வெள்ளி, 7 கேது. 8 சனி, 9 செவ்வாய் ஆகிய கிரகங்களைக் குறிப்பதாகும்.



வேண்டியது மிக அவசியம். அப்படிச் செய்தால் அடுத்த கணக்கு ஆரம்பிப்பதற்கு முன்னரே விசேட முன்னேற்றத்தைக் காணலாம். வியாபாரத்திற்கான சாமான்கள் வாங்கும் போதும் கூட்டு எண் அதிர்ஷ்டகரமாக இருக்கும் தினங்களிலே கொள்முதல் செய்யவும். வியாபாரம் சம்பந்தமாக பிரயாணம் செய்ய வேண்டுமானால் அதிர்ஷ்ட தினத்தில் தான் புறப்படவேண்டும்.

கூட்டாக வியாபாரம் செய்ய விரும்பினால் தன்னுடைய எண்ணிக்கையையோ அல்லது தனக்கு அதிர்ஷ்டமான எண்ணிக்கையையோ பிறந்த திகதி எண்ணாக உடையவருடன் சேரலாம். தனக்கு துரதிர்ஷ்டகரமான எண்ணில் பிறந்தவருடன் கூடினால் முடிவு நன்றாக இராது.